சுதந்திரன்
SUTANTIRAN
திருவள்ளுவர் ஆண்டு 1999 புரட்டா. திங்கள் 2-ம் நாள் (13—9—67) திங்கட்கிழமை ஜ.ஆ.தி 13 | புத்தகம் 22 இதழ் 7
194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. தொலை பேசி எண்-3411 த. பெ. 1185

# வட, கிழக்கு மாகாணங்களில் பிறப்பு, இறப்பு பதிவு இனி சிங்களத்திலில்லை

## பதிவுமா அதிகாரியின் சுற்று நிருபம்

**வட, கிழக்கு மாகாணங்களில் இனிமேல் பிறப்பு, இறப்பு சிங்களத்தில் பதிவு செய்யப்பட மாட்டா தென்று அறியப்படுகிறது.**

'வட, கிழக்கு மாகாணங்களைத் தவிர்த்து, ஏனைய மாவட்டங்களிலுள்ள ஒவ்வொரு பதிவு அதிகாரியும் பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்தல் உத்தியோக மொழியில் மட்டுமே செய்யப்பட வேண்டும்' என்று பதிவு மாஅதிகாரி (ரெஜிஸ்டிரார் ஜெனரல்) செப்டம்பர் 8-ந் திகதி ஓர் சுற்று நிருபம் விடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

'இச்சுற்று நிருபத்தைச் சுட்டிக்காட்டும் அரசியல் வட்டாரங்கள் வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள பதிவு அதிகாரிகள் இனி சிங்களத்தில் இறப்பு பிறப்புகளைப் பதிவு செய்ய முடியாதென்று கருத்து தெரிவிக்கின்றனர்.

வருமானவரி திணைக்களத்தின் அலுவல்கள் வட, கிழக்கு

(9-ம் பக்கம் பார்க்க)

## விரைவில் முடிவு உண்டு

சீனு மீண்டும் இந்தியாவைத் தாக்கியுள்ளது. மற்றொரு பெரும்போர் தொடுக்க இது ஆரம்ப ஏற்பாடாக இருக்கலாம். சீன போரைத் தொடங்கியதும் பாகிஸ்தான் இரண்டாம் போர்முனையை ஆரம்பிப்பதும் சாத்தியமே! இது பற்றி பாக்-சீன உடன்பாடுகள் இருக்கலாம். சீனுவின்கையில் அணுகுண்டும் இருக்கிறது கண்மூடித்தனமும் சண்டித்தனமும், பிறநாடுகளைத் துச்சமாகக் கருதும் பொறுப்பற்ற போக்கும் சீன ஆட்சியாளரிடம் வளர்ந்து வருகின்றன. எனவே போர் தொடங்கியதும் அவர்கள் அணுகுண்டை வீசாமலிருப்பார்கள் என்று நம்ப முடியாது. இந் நிலையில் பாரதம் இன்று ஒரு பயங்கர ஆபத்தை எதிர்நோக்கி நிற்கிறது.

ஒரு காலத்தில் சோஷலிஸத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்த சீனு இன்று ஒரு பயங்கர வாதக் கொள்கையைக் கையாளுகிறது. இதன் விளைவாக சீனு தனது நண்பர்களை இழந்து வருகிறது. அது தன்னை நம்பியவர்களுக்குத் துரோகம் செய்தது. உற்ற நண்பர்களைத் துடைவேர முதுகில் குத்தியது. தன்பால் அனுதாபம் காட்டியவர்களைப் பகைத்துக் கொண்டது. ஒவ்வொரு நாடும் உலக நாடுகளின் நட்பைத் தேடுகிறது. சீனுவோ உலக நாடுகளின் பகைமையைத் தேடுகிறது.

சீன மக்களிடம் அனுதாபமும், நட்பும், நல்லெண்ணமும் கொண்டுள்ளது இலங்கை. ஆனால் சீனத் தூதர் இங்கிதமற்ற, கரடுமுரடான, கீழ்த்தரமான சொற் பிரயோகங்களைக் கொண்ட 'யுத்தப் பிரகடனம் போன்ற குறிப்புகளை அண்மையில் இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பி, அந்த நட்புக்கும் நல்லெண்ணத்துக்கும் வெடி வைத்திருக்கிறார். இன்று தென் கிழக்கு ஆசிய நாடுகளிலே சீனுவின் பால் அனுதாபம் கொண்ட நாடு எதுவுமே கிடையாது.

அன்று சீனுவின் நண்பர்களாக இருந்த நாடுகள் இன்று அதன் மிரட்டலைக் கேட்டு பயன்படுகின்றன. அதன் அணுகுண்டைக் கண்டு பீதியடைகின்றன. குறிப்பாக தெ. கி. ஆசியநாடுகளிடம் இந்தப் பீதி காணப்படுகிறது. பீதியின் விளைவாக இந்த நாடுகள் பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் உதவியைநாடி ஓடுகின்றன. அவற்றை மீண்டும் ஏகாதிபத்திய கூண்டுக்குள் தள்ளிக் கொண்டிருக்கிறது சீனு.

இவ்வாறு சீனு உலக ஏகாதிபத்தியத்துக்கு மறைமுகமாக உதவி செய்து வருவதுடன், ஆசிய நாடுகளின் விரோதியாகவும் மாறியுள்ளது.

ஆபிரிக்க நாடுகள் மீதும் அரபு நாடுகள் மீதும் அனுதாபம் கொண்டிருப்பதைப் போல முதலில் சீனு பாசாங்கு செய்தது. இப்பொழுது அந்த நாடுகளின் எதிர்ப்பையும் தேடிக் கொண்டிருக்கிறது.

சீனுவின் விஷமத்துக்கு ஒரு முடிவுண்டு. உள்நாட்டிலேயே அந்த முடிவு உருவாகிக் கொண்டிருக்கிறது. அதுதான் தற்போதைய சர்வாதிகாரிகள் வீழ்த்தப்பட்டு சீனுவில் சோஷலிஸம் மலரும் முடிவு. அன்று தான் சீனம் உலக சமாதானத்தின் காவலனாக விளங்கும்.

## பெ.கட்சி எம். பீக்கள் எங்கே?

இவ்வாரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஒரு மாநாட்டைக் கூட்டியிருந்தாரல்லவா? அந்தமாநாட்டில் கலந்து கொள்ளும்படி இந்து ஆலய முகாமையாளர்களும், இந்துப் பெரியார்களும், வட பகுதி தமிழ் எம். பீக்களும் அழைக்கப்பட்டிருந்தனர்,

தமிழரசு எம்.பீகள் சகலரும் அம்மா நாட்டில் கலந்து கொண்டு ஆலயப்பிரவேச முட்பட, தீண்டாமையொழிப்பில் தங்கள் நிலையை விளக்கினர். ஆனால் இந்த மாநாட்டுக்கு பொ. கட்சியைச் சேர்ந்த எம். பீக்களில் எவரும் சமூகங் கொடுக்கவில்லை.

ஆலயப்பிரவேசத்தையும் தீண்டாமை யொழிப்பையும் ஆதரிப்பதாக வாயளவில் கூறிக்கொள்ளும் பொ. கட்சி எம்.பீக்கள் எங்கே யென்பது தான் அன்றைய கூட்டத்தில் பலரும் கேட்ட கேள்வியாகும். பொ. கட்சியின் சிறுபான்மைத் தமிழர்கள் என்று கூறப்படுவோரையும் உயர்சாதித் தமிழர்கள் என்று கூறப்படுவோரையும் ஒருசேர ஏமாற்றும் தந்திரமா இது என்று அரசியல் வட்டாரங்களில் கேட்கப்படுகிறது.

## நம்பூதிரிக்கு கல்தாவா?

இந்திய சீனச் சார்புக் கம்யூனிஸ்டுக் கட்சியில் பெரும் பிளவு ஏற்பட்டுள்ளதாக டில்லியிலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

கேரள முதன் மந்திரியும் சீனச்சார்பு கம்யூனிஸ்டு தலைவருமான திரு. நம்பூதிரிப்பாடுக்குக் கல்தா கொடுத்து விட்டு, திரு. ஏ. கே. கோபாலனை முதன் மந்திரியாக்குவதற்கு அக் கட்சியின் தலைமைப் பீடம் சதி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாம். பீகிங் வானொலி ஏற்கனவே திரு. நம்பூதிரிப்பாடுக்கு துரோகப்பட்டம் சூட்டி விட்டது. இந்த வானொலி அறிவிப்பைக் கேட்டுவிட்டு இலங்கையிலுள்ள சீனச் சார்புக் கம்யூ

(9-ம் பக்கம் பார்க்க)


## அதிருப்தி வதந்தி

மலை நாட்டு தமிழ் மக்களிடையே பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. காரணம் இந்தியப் பிரஜாவுரிமை வழங்குவதில் இந்தியத் தூதரகம் சுறு சுறுப்பாக இருப்பதும், இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குதற்காக இலங்கை அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்காதிருப்பதுமே யாகும்;

இந்த அதிருப்தியின் காரணமாக இந்தியாவுக்குத் திரும்பவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தவர்களும், தங்களின் மனதை மாற்றிக் கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே மற்றொரு வதந்தி கொழும்பில் வசிக்கும் 'நாடற்ற' மக்களிடையே பரவியுள்ளது. மலையகத்தில் ஒரு சில குறிப்பிட்ட பாராளுமன்

(9-ம் பக்கம் பார்க்க)



கடுதாசியை அரிக்கும் பூச்சிக்கு டி. டி.. டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# நடைமுறைத் தமிழியக்கத்தை நாடெங்கும் - பரப்புவோம்

## மறைமலையடிகளுக்கு அதுவே அஞ்சலி

தமிழினம் தாழ்ந்து நலிந்து தன்னிலை இழிந்து வீழ்ந்து விடுதலை கெட்டு உழன்ற நிலை மாறி உயர்வு கண்டிட உறுதி கொண்டுழைத்தவர் மறைமலையடிகள்.

சுவாமிவேதாச்சலம் மறைமலையடிகளாகத் தமிழினத்திற்கு வழிகாட்டியாக வீழ்ந்திருந்த தமிழின் இனிமைச் சிறப்பை மீண்டும் எழுச்சி செய்யும் வித்தகராகத் தோன்றினர்.

### வள்ளலாரின் தொண்டர்

நாட்டுப் பற்றும், சமுதாயச் சீர்திருத்தத்தில் விழிப்பும் கொண்ட அடிகளார் இராமலிங்க வள்ளலாரின் தொண்டராக விளங்கினர். தமிழினத்திற்காக — அதன் எழுச்சிக்காக முன்னேற்றத்திற்காக சமரச சன்மார்க்க சங்கத்தின் அடிப்படையில் சைவசித்தாந்த மகா சமாஜம் என்ற பெயரில் மறைமலையடிகள் 1905ம் ஆண்டில் தன்னில லத்தில் அமைத்தார். இராமலிங்க வள்ளலாரின், அருட்பா சமய குரவர்களின் திருமுறைகளுடன் ஒப்பிடற்குரியது என்பதை தமிழ்நாட்டில் எடுத்துக் காட்டி அருட்பா மருட்பா தர்க்கத்தில் திரு. கதிரைவேற்பிள்ளையவர்களை வெற்றிகண்டார் மறைமலையடிகள்.

தனித்தமிழியக்கத்தை 1929ல் ஆரம்பித்த அடிகள், தமிழன் பிற மொழிகளால் தனது சுயமொழியையும் பழம் பெருமைச் சிறப்பையும் தன்னிலிருந்து வேறு படுத்தி வருகிறான் என்பதை அறிந்து அவ் இழி நிலை அகன்றிடத் தமிழ்த் தொண்டு புரிவாராயினர்.

### பன்மொழி கற்றவர்

அடிகளார் பன் மொழி கற்றவர்: ஆங்கிலப்புலமையுடன் வடமொழிப் புலமையும், தமிழ் ஆராய்வும் தத்துவ ஞானமும் அவரிடம் குடி கொண்டிருந்தன. சின்னஞ்சிறு வயது முதலாகவே அடிகளார் தமிழுலகத்துக்குத் தன்னை தந்திட விழைந்தார். அந்த ஆசையில் வெற்றியும் கண்டார்.

• மறைமலையடிகள் புதிய நடைமுறை இலக்கியத்திற்கு வழிவகுத்தவர். இப்பெரும் அறிஞரைப்பற்றி எண்ணற்ற பல பெரிய அறிஞர்கள் அவர் காலத்திலேயே போற்றியுள்ளனர். மறைமலை அடிகளாற்றான் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் புது மலர்ச்சி கொண்டது என்பர் அறிஞர். அடிகளாரின் ஆராய்ச்சி நூல்கள் தமிழினத்தையே புதுமை செய்தது என்றால் அது பொருந்தும்.

### நடைமுறைத்தமிழியக்கம்

மறைமலையடிகள் 15-7-1876ம் ஆண்டு தமிழகத்தில் பிறந்தார். பால்யத்தில் பள்ளி மாணவராக இருந்தபோதே ஆசிரியர்கள் இவரது அறிவுக்கு ஒப்ப போதிக்கும் ஆற்றல் அற்றவராக இருந்தனர். வாலிபத்தில் இவரே ஆசிரியராகப் பணியாற்றியும் தமிழ்த் தொண்டும் சைவத்தொண்டும் புரிந்தார். இப்பெருந் தமிழ்த் தாயின் செல்வன் தமது 74ம் அகவையில் 15-9-1950ல் இயற்கை எய்தினர். அடிகளாரின் சேவை தமிழுலகத்தின் வற்றாத வளமென என்றென்றும் வழங்கப்படும். என்பதில் ஐயம் இல்லை.

மறைமலையடிகளின் நடைமுறைத் தமிழியக்கத்தை வையத் தமிழர்கள் கடைபிடித்தொழுவார்களாக.

இச்சேவையின் ஒரு விரிவு தான் இன்றையத் தமிழ்த் தாயின் முதன் மகன் அறிஞர் அண்ணாத்துரையவர்களின் அரும் பெரும் பணி. வள்ளலாரும் மறைமலையடிகளும் காட்டிய நெறிகளிலே அறிஞர் அண்ணா தன் பணி செய்து வருவது தமிழகத்தினதும், தமிழினத்தினதும் சீர்த்தியை மேன்மேலும் உயர்த்தும் பணி எனக் காண்கிறோம். வாழிய தமிழின் செல்வர்கள்; வாழிய தமிழ் மொழி.

**சக்தீ-அ. பாலையா**

. செப்டம்பர் 15— தனித் தமிழியக்கத்தின் தந்தையென அழைக்கப்படும் மறைமலையடிகள் மறைந்த தினமாகும், அதையொட்டி தமிழ் கூறும் நல்லுலகெங்கும் அவரது நினைவு தினம் கொண்டாடப்படுகிறது. நடைமுறைத் தமிழியக்கத்தின் சார்பிலும் இம் மாதம் 26ம் திகதி பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் மறைமலையடிகள் விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## கழக வளர்ச்சியில் சிலரின் பொறாமை

நேர்மை, நியாயம், கொள்கைகளை கடைபிடித்து வரும் மனிதனுக்கு நாட்டில் செல்வாக்கு இருப்பதுபோல நல்ல கொள்கையை கடைப்பிடித்து நல்ல வழியிலே நேர்மையான நிலையிலே வழி நடந்து செல்லும் கட்சிக்கும் செல்வாக்கிருக்கும். இன்று வெற்றிநடைபோடும், புனிதமான தியாகத்தின் மூலம் புதுலகம் செய்வோம் என்று சங்கநாதம் செய்து வேகமாக வளர்ந்து வரும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தைக் கண்டு சில தொழிற்சங்கவாதிகள் பொறாமைப்படுகின்றனர். அவர்கள் பொறாமையை விட்டு நேர்மையை கடைப்பிடித்து செம்மையான சேவையை செய்யாதிருந்தால் இன்று கழகம் மலைநாட்டில் தோன்றியிருக்க முடியாதல்லவா. போட்டி பொறாமையினால் எதையும் சாதிக்க முடியாது. மற்றவர்கள் திட்டுவதால் பிரயோசனம் ஏற்பட்டுவிடாது.

இவ்வாறு பன்விலையை சேர்ந்த தவட்டகலை தோட்டத்தில் நடந்த இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிய கழகத்தின் தலைமை அலுவலகப்பிரமுகர் திரு. கோ. இ. து. கோவிந்தராசன் அவர்கள் கூறினர்.

மாவட்டத் தலைவர் திரு. அங்கமுத்து தலைமையில் நடந்த மேற்படி கூட்டத்தில் கழகத்தின் மூவர்ணக் கொடியைக் கழகத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. ஏ. ஜே. சாமுவேல் ஏற்றிவைத்தார்.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் அச்சு வார்ப்பகத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10. 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ் ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்த எங்கள் இயந்திரம் சாதாரண எழுத்துக்களையும், அலங்கார, எழுத்துக்களையும் வார்க்கக் கூடியது.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் அச்சு வார்ப்பகம்,**

194 ஏ. பண்டாரநாயக்கா வீதி,

கொழும்பு—12.


## "இலங்கை எழுத்தாளர்கள் எவருக்கும் சளைத்தவரல்லர்"

### பாரதி விழாவில் அழகிரிசாமி

"ஈழத்து தமிழ் எழுத்தாளர்கள் தமிழகத்து எழுத்தாளர்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர். இன்னும் சொல்லப் போனால் புத்திலக்கியம் படைக்க வேண்டுமென்ற ஆர்வம் தமிழகத்து எழுத்தாளர்களை விட ஈழத்து எழுத்தாளர்களிடம் அதிகமாகக் காணப்படுகிறது என்றே சொல்வேன். ஆகவே ஈழத்து தமிழ் மக்கள் தமிழகத்திலிருந்து இறக்குமதியாகும் பத்திரிகைகளில் வெளிவரும் படைப்புக்களை மட்டுமே படிப்பது என்ற கொள்கையுடனிருக்காது இங்குள்ள எழுத்தாளர்களின் படைப்புக்களுக்கும் உரிய மதிப்பு அளிக்க முன்வர வேண்டும்."

இவ்வாறு இம்மாதம் 10ந் திகதி பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் ஏற்றுமதி இறக்குமதி திணைக்கள தமிழ் இலக்கிய மன்றத்தினரின் ஆதரவில் நடைபெற்ற பாரதி விழாவில் பேசிய எழுத்தாளர் திரு. கு. அழகிரிசாமி குறிப்பிட்டார்.

திரு. அழகிரிசாமி தொடர்ந்து பேசும் போது குறிப்பிட்டதாவது:—

உலகில் எந்த மொழியிலும் தமிழில் உள்ளது போன்ற சிறந்த கவிதைகள் கிடையாது. இப்படிக் கூறும்போது நடுநிலையில் நின்று ஆராய்ந்து கூறுகிறேனே தவிர நான் ஒரு தமிழன் என்ற காரணத்தால் அல்ல. அதுபோன்று கவிதை ரசனையிலும் தமிழர்கள் தான் முன்னணியில் நிற்கின்றனர்.

கவிதைக்கு உயிர் இருக்கிறது. நல்ல கவிதைகளைக் கேட்கும் போது கேட்பவர்கள் புத்துயிர் பெற வேண்டும். சோகத்தை விளக்கப்பாடிய சில தமிழ் பாடல்களிலேயே நகைச்சுவைகளையும் கலக்கப் பட்டிருக்கிறது. சோகத்தில் நகைச் சுவை கலந்த தன்மையை உலக இலக்கியங்களில் தமிழைத் தவிர வேறு எந்த மொழியிலும் நாம் காணமுடியாது.

ஆங்கில நாட்டில், [illegible] [illegible] கலைக்க வேண்டுமென்றால், இரண்டு கவிதையைப் பாடு என்று கூறுவார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்கு கவிதையென்றால் வெறுப்பு. ஆனால் தமிழர்களோ கவிதையிலே —கவிதை ரசனையிலேதான் ஊறித்திளைத்தவர்கள்.

பண்டைத் தமிழிலக்கியங்கள் எல்லாம் கவிதையிலேயே காணப்படுவது இதற்குச் சான்று.

இன்று ஈழத்தில் உள்ள தமிழ் எழுத்தாளர்களும் மலையாளத்திலுள்ள தமிழ் எழுத்தாளர்களும் தான் புத்திலக்கியம் படைக்க வேண்டுமென்ற ஆர்வத்துடன் செயல்படுகிறார்கள். இதை இங்கு வந்தவிடத்தில் கூறவில்லை. தமிழகத்திலும் பல இடங்களிலும் எடுத்துக் கூறினேன்.

ஈழத்து எழுத்தாளர்களின் தரம் மிகுந்த எழுத்துக்களையே முதலில் ஈழத்து தமிழ் மக்கள் படித்துச் சுவைக்க முன்வரவேண்டும். தமிழகத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை மட்டுமே படிப்பது என்ற எண்ணம் தவறானது.

இலங்கைப் பத்திரிகைகளும் ஈழத்து எழுத்தாளர்களையே வளர்க்க முன் வரவேண்டும். அவர்களின் படைப்புகளுக்கே முதலிடம் கொடுக்க வேண்டும். முதலிடம் கொடுத்தால மட்டும் போதாது; படைப்புக்களுக்கு தகுந்த சன்மானமும் தரப்பட வேண்டும்'.

'பாரதியைப் பற்றி என் ஆராய்ச்சி' என்ற தலைப்பில் பாரதியின் பேத்தியாரான திருமதி விஜயபாரதியும், 'பாரதியார் சொல்லாதவை' என்பது பற்றி அவரது கணவர் பேராசிரியர் சுந்தரராஜனும் பேசினர்.

இலக்கியமன்றத்தில் நடத்தப்பட்ட, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி விஜய பாரதி பரிசுகள் வழங்கினர். விழா முடிவில் 'பாரதியார்' என்ற ஓரங்க நாடகமும் நடைபெற்றது.

## தமிழில் நடத்துக

வட்டுக்கோட்டை நாகேந்திரமடம் உபதபால் நிலையத்தில் அலுவல்கள்யாவும் தமிழிலே நடத்தப்படவேண்டும் என்று கிளிநொச்சி எம். பி. பிரதம தபாலதிபருக்கு தந்தி மூலம் அறிவித்துள்ளார்.

சிங்களம் அல்லது ஆங்கிலத்திலேயே தபாற்கந்தோர் அலுவல் நடத்தப்படவேண்டுமென்ற வடபகுதி தபால் கண்காணிப்பாளர் பணித்துள்ளதை ரத்து செய்யும்படியும் அவர் கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகயோதி,
மட்டுநகர்.

கே: நான் பாடசாலைக்குச் செல்லும் வழியில் என்னை ஒரு மாணவி எந்த நாளும் பார்த்து சிரிக்கிறள். நான் சிரிப்பதா இல்லையா என்ற நிலையில் இருக்கிறேன். இதற்கு உங்களது உபாயம் என்ன?

ப: நீங்களும் சிரியுங்கள். அவுட்டுச் சிரிப்பு சிரியுங்கள். கட கடவென்று சிரியுங்கள். விழுந்து விழுந்து சிரியுங்கள்! அதற்குப் பிறகு உங்களைப் பார்த்து சிரிக்கமாட்டாள்.

ஃ

க. இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

கே: 'நான் ஒருவரை மணப்பதாக இருந்தால் அவர்'...? இவ்வாறு ஒரு பெண் கடிதம் எழுதி இருந்தாள். அதன் பொருள் என்ன?

ப: அவர் எப்பொழுதும் அவளுக்கு கேள்விக்குறியாக இருத்தல் வேண்டும் என்பதே.

ஃ

இரா. மங்கையர்க்கரசி,
7-வது கோட்டக்கொடை.

கே: உலகத்தோடு ஒட்டியும்-ஒட்டாமலும் வாழ்பவர்களை எதற்கு ஒப்பிடலாம்?

ப: நீர்த்துளிக்கு ஒப்பிடலாம். தாமரை இலைமீது நீர்த்துளியின் நிலை என்ன என்பது தான் உங்களுக்குத் தெரியுமே.

ஃ

கரு. செல்வராஜ்,
நோர்வூட்.

கே: குயுக்தியாரே, நீங்கள் யாரை அதிகமாக புகழ்ந்து கூறுவீர்கள்? காரணம்?

ப: 'புகழ் விரும்பிகளை'யே புகழ்வேன். காரணம் அவர்கள் புகழைத் தவிர வேறு எதையும் விரும்பாததுதான்.

ஃ

தமிழ் செல்வி,
கரவெட்டி.

கே: இன்று பீண்டாமையை ஆதரிக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் ஏதாவது தமிழர் மத்தியில் இருக்கின்றதா?

ப: ஏன் இல்லை? பருத்தித்துறையில் 'மாநாடு' நடத்திய கட்சியின் நிலை என்ன?

கே: திருக்கேதீச்சரம் குருகுல வித்தியாலயத்துக்கும் பொன்னம்பலம் கோரும் இந்து கலாச்சார பல்கலைக் கழகத்துக்கும் என்ன வித்தியாசம்?

ப: அநேகமாக இரண்டும் ஒன்றுதான்.

ஃ

.............
ஏத்துக்கால்.

கே: நான் ஒருவரைக் காதலிக்கிறேன். அவரும் என்னைக் காதலிக்கிறர். ஆனல் என் பெற்றேரும் அவர் பெற்றேரும் அவரின் அண்ணனை கலியாணம் பண்ணும்படி கூறுகிறர்கள் என்ன செய்வது?

ப: இதற்கு மிகச் சுலபமான வழி உங்களின் காதல் விவகாரத்தை அண்ணன் காதில் போடுவதுதான். அவர் உடனே உங்களை மணக்க மறுத்து விடுவார். பின்னர்.....

ஃ

'யாழினி',
கொழும்பு-8.

கே: சிங்களம் மட்டும் சட்டம் வந்து 10 ஆண்டுகள் கடந்து விட்டன. இவ்வளவு காலமும் பேசாமல் இருந்த பொன்னம்பலம் இப்பொழுது சம அந்தஸ்து என்று கூறுகிறரே ஏன்?

ப: பதவியைப் பிடிக்க அவருக்கு ஒரு கருவி வேண்டாமா? அந்தக் கருவிதான் 'சம அந்தஸ்து'.

ஃ

மா. குலேந்திரன்,
இரத்மலானை.

கே: த. கா. மாநாட்டில் ஏழு வயதுச் சிறுமியொருத்தி கட்சியின் கொள்கைகளை எடுத்தியம்பியதாகச் சில பத்திரிகைகளில் பார்த்தேன். இது முடியுமா?

ப: சிறுபிள்ளைத்தனமான கொள்கைகளைச் சிறு பிள்ளை தானே எடுத்துக் கூறமுடியும்.

கே: திரு. பொன்னம்பலத்துக்கு அணியப்பட்ட தங்க மாலைக்கு என்ன நடந்துவிட்டது?

ப: இதென்ன கேள்வி? தங்க மாலைக்கு என்ன செய்ய வேண்டுமென்பது அவருக்குத் தெரியாதா என்ன?

ஃ

வ. செல்லையா
மட்டக்களப்பு

கே; மானிலத்தில் விதியை வென்ற மனிதர் யாருமில்லையென்ருல் விதியை மதியால் வென்ற மார்க்கண்டேயர் மர்மம் என்ன?

ப: மார்க்கண்டேயர் விதியை மதியால் வெல்லவில்லை. பக்தியாற்தான் வென்ருர். பக்தியிருந்தால் எந்த மனிதனும் விதியை வெல்லலாம். ஆனல் அந்த மனிதனுக்கு விதியும் இருந்தல் வேண்டும். விதி இன்றேல் பக்தியால்பயனில்லை. பக்தியின் அடிப்படை நம்பிக்கை' நம்பிக்கை உண்மையானதாக இல்லையேல் பக்தியும் உண்மையானதாக இருக்காது. அப்படியான பக்தியால் விதியை வெல்ல முடியாது.

ஃ

து. செயபிரகாசம்,
நாகசேனை.

கே: ஓர் இராணு வீரனுவதற்குரிய வீரம் எனக்குண்டு. பல வழிகளில்முயன்று பார்ததேன். பிரசாவுரிமை இல்லை என்ற காரணத்தால் சேர முடியவில்லை இதற்கு என்ன செய்யலாம்?

ப: பிரசாவுரிமை பெறுவதற்காக போராடுங்கள். அந்தப் போராட்டத்தில் உங்களின் வீரத்தைக் காட்டுங்கள் பிறகு இராணுவத்தில் காட்டலாம்.

கே: இ. போ. ச. சேவைக்கு ஊழியர்கள் தேவை என விளம்பரம்பார்த்தேன. சேருவதானல் பிரசாவுரிமை அவசியமா?

ப: அதற்குப் பிரசாவுரிமை அவசியப்படாது. மந்திரிகள், தந்திரிகள், எம். பி. கள் தரகர்கள் ஆகியோரின் சிபார்சுகள் தான் வேண்டும்.

கே. விஜயரத்தினம்,
சாவக்கச்சேரி.

கே: பாராளுமன்றத்தில் தமிழ் அரசுக்கு கிடைத்தது போல் பெரும்பாலான ஸ்தானங்கள் தமிழ் காங்கிரசுக்கு கிடைத்திருந்தால்...?

ப: பதவிகளைப் பெறுவதில் கடுமையாகப் போட்டியிட்டு சில மந்திரி பதவிகளையும் கைப்பற்றியிருப்பார்கள் அது தானே அவர்களின் குறிக்கோள்.

ஃ

ஆர். என். தியாகராசன்
கொழும்பு-6

கே: ஒருவன் எல்லார்க்கும் நல்லவனுக வாழ முடியுமா?

ப: முடியும்! அவன் எதிலும் பற்றில்லாதவனுக இருந்தால்.

ஃ

தமிழ் காங்கிரஸ்வாதி
கரவெட்டி

கே: யு என். பிக்கும் தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: தமிழ்காங்கிரஸ் தமிழரசாரைத் திட்டுவதையே கொள்கையாகக் கொண்டுள்ளது யூ. என். பி. தமிழரசாரைத் திட்டுவதில்லையே.

ஃ

எம் ஏ. நஜுமுதீன்,
அக்கரைப்பற்று.

கே: தூக்கத்திலிருந்து விழித்தது தொடங்கி தூக்கத்திற்குப் போகும்வரை ஒரு வீட்டுத்தலைவன் கண்டபடி ஏசிக்கொண்டும் பேசிக்கொண்டிருந்ததால் மனைவி மக்கள் அதனை வெறுக்கிறர்கள். எனவே என்ன செய்யலாம் என்பதற்கு ஒரு சிறந்தபரிகாரம் கூறுங்கள்?

ப: அவரது பேச்சையும் ஏச்சையும் அடியோடு அலட்சியம் செய்வதுதான் ஒரே வழி. அதனலும் அவர் ஓயவில்லையெனில் அவருக்கு ஏதோ மூளைக்கோளாருகத்தான் இருக்க முடியும். எனவே அவரை அங்கொடைக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யவும்.

ஃ

சி. ஆர். இராமன்,
கொழும்பு-10.

கே: பட்ஜெட்டில் புது வரி எதுவுமில்லையே. நீங்கள் நிதி மந்திரியாக இருந்தால் புது வரி ஏதேனும் விதித்திருப்பீரா?

ப: நான் நிதிமந்திரியாக இருந்தால் அரசியல்வாதிகளின் மேடைப் பிரசங்கம் ஒவ்வொன்றுக்கும் அவர்கள் கூறும் பொய்களின் எண்ணிக்கையில் கடுமையான வரி விதிப்பேன்.

ஃ

டி. தேசவன்,
கொழும்பு-3.

கே: மார்டின் கமிஷன் அறிக்கையைத் திரு. பொன்னம்பலம் ஏன் எதிர்க்கிறர்?

ப: அவரது எதிர்ப்புக்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று நல்ல திட்டங்களை எதிர்ப்பது அவரது அரசியலாக இருந்து வருவது—மற்றது திரு. மார்டின் அந்த அறிக்கையைத் தயாரித்திருப்பது! அவர் அறிக்கையை எதிர்ப்பது ஆளைப்பார்த்தேயன்றி, அறிக்கையைப் பார்த்தல்ல.







அழகும் அவலட்சணமும்

இலங்கையிலிருந்து அழகு சாதனப் பொருள்கள் ஏற்றுமதியாகும்.

—செய்தி.

—அப்படியானல் இலங்கைப்பெண்கள அவலட்சணமானவர்களாக வேண்டியதுதானு? என்கிருர் ஒரு தருமபுர இளைஞர்.

மனநிலை குன்றினல்...!

ஆசிரியர்களின் மனநிலை குன்றினல் கல்வி நிலை வளராது.

—ஜீ. ஜீ.

—அரசியல்வாதிகளின்மன நிலை குன்றினல் மாவட்ட சபைகளை எதிர்க்கச் சொல்லுமோ?

நைலோன்!

நைலோன் வலைகளைக் கடலில் போட்டு மீன்பிடிப்பதனல், அது ஏராளமான மீன்களைக் கலைத்து விடுகிறது.

—செய்தி.

—நைலோன் சேலைகளே இன்றைய வாலிபர்களின் உள்ளங்களைக் கலைத்து விடுகிற போது, மீன்கள் எம்மாத்திரம்?

காரணம் அதுதானே?

எழுத்தாளர்களுக்கு அரசியல் கூடாது.

—கு. அழகிரிசாமி

—முற்போக்கு எழுத்தாளர்கள் என்று கூறிக்கொண்டு தமது படைப்புகளில் கம்யூனிசத்தை புகுத்தும் கம்யூனிஸ்ட் எழுத்தாளர்களைப் இப்படி மறைமுகமாகக் கண்டித்திருப்பாரோ?

பெண்கள் பிரச்சினை

பெண்களுக்கான ரயில் பெட்டியில் ஆண்கள் ஏறினல் தண்டிக்கப்படுவார்கள்.

—செய்தி

—அதேபோல ஆண்கள் பிரயாணம் செய்யும் பெட்டிகளில் ஏறும் பெண்களும் தண்டிக்கப்படுவார்களோ என்று கேட்கிருர் ஒரு ரயில் பிரயாணி.

நோய் பரவுகிறது

சிங்கப்பூர் தி. மு. க. மீது தடை விதிக்கப்படலாம்.

—செய்தி

—சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக்கு ஏற்பட்ட நோய் சிங்கப்பூர் அரசுக்கும் தொற்றப் பார்க்கிறதோ?


விற்பனையாகின்றது!


* கையடக்கப் பதிப்பில், மலிவு விலையில் ஒரு குறுநாவல்
* வாசிக்க ஆரம்பித்ததும் இறுதிவரையும் வாசிக்கத் தூண்டும் அருமையான நடை

# கருகிய ரோஜா

எழுதியவர்: புதுமைலோலன்
விலை சதம்: 45

வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு உண்டு.
வி. பி. கவனிக்கப்படும்.

அன்பு வெளியீடு
550/7, கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.



பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது

# கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்

தந்தி: தாமரை
நி. 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி: 3597—6522


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வன்னியசிங்கம் நினைவு மலர்

தோற்றம் 13-10-1911—மறைவு 17-9-1959



## தூய தலைவன் வன்னியசிங்கம்

—வி. த. குமாரசாமி—

வல்லமை சேர் மகனும் — தமிழ்
வாழ உழைத் தவனும்
தொல்லைகள் பட்ட வனும — நம்
தூய தலைவ னுமாம்.

வன்னிய சிங்க மென்பார் — அவன்
வார்த்தையில் வீர முண்டு
எண்ணிய செய் பவனும் — எங்கள்
ஈழத் தமிழ் மகனும்.

பட்டங்கள் பெற்ற வனும் — தமிழ்ப்
பண்டி தனு மாவான்
சட்டம் படித்த மகான் — குலச்
சாதி களைழந்த மகன்.

மக்களின் சேவகன் நான் — என
மார் தட்டிப் பேசியவன்
தக்க தருண மதில் — பிறர்
தாழ்வை யகற் றிடுவான்.

கோப்பாயின் கோ மகனுர் — குணக்
குன்ருய் அமைந் தவராம்
தீர்ப்பான வாய்மை யிலே — தன்னைத்
தோய்த்து வளர்த்த வராம்.

ஆழ்ந்த அறி வுடையோன் — அன்பு
சூழ்ந்த அகமுங் கொண்டான்
தாழ்ந்த தமி ழினத்தைத் — வன்னியர்
தந்து உயர்ந்த வந்தோன.

மேடையி லேறி நின்ருல் — வன்னியர்
மேலான சொல் லமுதம்
தேனெனப் பாய்ந்து வரும் — பொருள்
தேர்ந்த தோர் பேச்சாளர்.

கிண்டல் நகைச் சுவையும் — சிறு
கேலிச் சிரிப்பு முடன்
நின்று பதில் கொடுக்கும் — திறன்
நன்று படைத்த வராம்

# தீண்டாமை ஒழிப்பு- தமிழியக்கம்

# அமரர் வன்னியரின் இரு முக்கிய நோக்கங்கள்

## ஈழத்தமிழினம் பெருமையுடன் வாழ இரண்டையும் கைக் கொள்ள வேண்டும்

அமரர் வன்னியசிங்கம் தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்வுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்ட ஒரு கர்மவீரர் என்பதை இந்த நாட்டுமக்கள் அறிவார்கள். ஆனல் அவர் ஒரு சிறந்த சட்ட மேதை என்பது பலருக்கும் தெரியாது.

திரு. வன்னியசிங்கம் சட்டத் துறையில் மிகுந்த புலமை பெற்றவராக விளங்கினர். நுண்ணிய அறிவும், வாதத்திறமையும் அவரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்தன. அவர் அரசியலில் முழுநேர ஊழியராக மாறி தமிழ் பேசும் மக்களுக்காக உழைத்ததால், சட்டத் தொழிலில் பிரகாசிக்க முடியாது போயிற்று சட்டத் தொழிலில் அதிக ஊக்கமெடுத்து உழைத்திருந்தால், ஈழத்தின் தலை சிறந்த சட்டமேதைகளில் ஒருவராகத் திகழ்ந்து ஒரு இராணி அப்புக்காத்தாக உயர்ந்திருப்பார் என்பது எனது திடமான நம்பிக்கை.

திரு. வன்னியசிங்கம் ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாகவே விளங்கினர். அவருக்கு தமிழ்ப் பிரதேசத்தின் மூலை முடக்குகள், சந்து பொந்துகள் சகலதும் மனப்பாடமாக இருந்தன. தமிழ்ப்பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு தொகுதிகளின் நிலையும் அவருக்கு நன்கு தெரிந்திருந்தது. ஒவ்வொரு கிராமத்திலும், பகுதிகளுடன் நெருங்கிப் பழகி, மக்களின் குறைநிறைகளை தெரிந்து வைத்திருந்தார்.

புதிய தேர்தற் தொகுதிகளை அமைப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு முன்பு திரு. வன்னியசிங்கம் அளித்த சாட்சியத்தைக்கண்டு பலரும் ஆச்சரியமடைந்தார்கள். தனிமனிதராக இவர் வடக்கு, கிழக்குமாகாணங்களின் பூகோளவியலை புள்ளிவிபரங்களுடன் எடுத்துக் கூறிய விதம் பலருக்கும் ஆச்சரியத்தை அளித்தது. அவ்வளவு தூரம் தமிழ்ப் பிரதேசத்தின் ஒவ்வொரு கிராமங்களும், அக் கிராமங்களின் அமைபபும, மக்களின் சனத்தொகையும் அவருக்கு மனப்பாடமாக இருந்தன.

தமிழ் பேசும் மக்களின் எந்தப் பிரச்சினையையும் தீர்ப்பதற்கேற்ற திட்டங்களை தீட்டும் ஆற்றல் அவரிடம் இருந்தது.

### மு. திருச்செல்வம் கியூ. சி.

திரு.வன்னியசிங்கம் தமிழ் மக்களின் நல் வாழ்வுக்காக தன் உடல் நலனையும், குடும்ப நலனையும், பொருட்படுத்தாது உழைத்த ஓர் ஒப்பற்ற தியாகி இந்த நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் ஈடிணையற்ற ஒரே தலைவராகிய தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்களின் வலது கரமாக விளங்கி தமிழரசுக் கட்சியை வளர்த்து ஆளாக்கியவர் திரு. வன்னியசிங்கம்.

தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஒரு கட்சியின் கீழ், ஒரு கொடியின் கீழ் ஒன்று திரண்டால் மட்டுமே தங்கள் உரிமைகளையடைய முடியும் என்பதை திரு. வன்னியசிங்கம் உணர்ந்திருந்தார். அதனல், தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்தின் தலைமையிலுள்ள தமிழரசுக் கட்சியின் கீழ் தமிழ் பேசும் மக்களை ஒன்று திரட்டும் பணியில் இறங்கி வெற்றியும் பெற்ருர்.

#### மக்களை ஒன்று சேர்த்தார்

வடக்கு. கிழக்கு, மன்னர், மலைநாடு என்று பிரதேசத்தாலும், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் என்று மதரீதியிலும் பிரிந்து நின்ற தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்திய பெருமையில் பெரும் பகுதி திரு. வன்னியசிங்கத்துக்குண்டு.

இன்னுமொரு முக்கியமான விஷயத்தில் திரு. வன்னியசிங்கம் அசைக்க முடியாத நம்பிக்கைகொண்டிருந்தார். தமிழ் பேசும் மக்கள் தமது அலுவல்கள் முழுவதையும் தமிழ் மொழி மூலம் செய்ய வேண்டுமென்பதே அது.

#### தமிழியக்கம்

தமிழர்கள் தங்கள் மொழியையும் இனத்தையும் அழியவிடாது பாதுகாக்க தமிழியக்கம் அவசியம் என்பதை அவர் நன்ருக உணர்ந்திருந்தார். எல்லாம் தமிழியக்கம் என்ெருரு இயக்கத்தையே இதற்காக ஏற்படுத்தினர்.

தமிழ் பேசும் மக்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்விலும் சரி, அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு கருமமாற்றும் போதும் சரி, தமிழையே கையாள வேண்டும் என்பது அவரின் தீர்க்கமான இலட்சியம். இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்க

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் பகுதிகளுக்கு உள்ளூராட்சி அமைச்சர் அதிக நிதி ஒதுக்குகிறார்"

## என். எம். பெரேரா எழுப்பிய வகுப்புவாதக் கூச்சல்

"உள்ளூராட்சி அமைச்சர் திருச்செல்வம், உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதியொதுக்குவதில் வடக்கு கிழக்குக்கு விசேசசலுகையளிக்கிறார். அரசியற் காரணங்களுக்காக உள்ளூராட்சி மன்றங்களைக் கலைத்துவிடுகிறார். இரு தண்ணீர் விநியோகத் திட்டங்கள் தமிழரசுத் தொகுதியாகிய பட்டிருப்புத் தொகுதியில் ஏற்படுத்தியுள்ளார்." இப்படி அமைச்சர் திருச்செல்வத்தின் மீது குற்றம் சாட்டியுள்ளார். டாக்டர் என். எம். பெரேரா.

உள்ளூராட்சி அமைச்சு மானியம் மீது பாராளுமன்றத்தில் இம்மாதம் 4-ம் திகதி உரை நிகழ்த்திய போதே என். எம். இப்படி அமைச்சர் திருச்செல்வத்தின் மீது வகுப்புவாதக்கணை தொடுத்திருந்தார். என். எம். மின் இந்தக் குற்றச் சாட்டுகளையெல்லாம், அக்கு வேறு ஆணிவேறாக்கி சுடச் சுட பதிலடி கொடுத்தார் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி.

திரு. அமிர்தலிங்கத்தின் பதில் சென்றவாரம் சுதந்திரனில் வெளியாகியிருந்தது. என். எம். பேசியபேச்சை கீழே தருகிறோம்.

'கடந்த ஆண்டு மத்தியில் உள்ளூராட்சிஅமைச்சு நான்கு இலாகாக்களை பொறுப்பேற்றுக் கொண்டது. அவை, முன்பு தனித்தனியாக இயங்கி வந்தன. அந்த நான்கும் முறையே, நீர் விநியோகம், உள்ளூராட்சி இலாகா, நாட்டு நகர அபிவிருத்தி திட்டம், உள்ளூராட்சி சேவை என்பன. இவை நான்கும் ஒரே அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டன. அமைச்சில் இவற்றைக் கவனிக்க உதவிச் செயலாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதன் பயனாக குறித்த நான்கு பொறுப்புக்களுடன், அமைச்சில் அதிகாரங்கள் குவிந்தன.

உள்ளூராட்சிதிணைக்களத்தில் ஒரேயொரு நன்மையிருந்தது வந்தது அது அதிகாரப் பரவல் அதனால் கிராமசபைகளுக்கும் திணைக்களத்துக்கும் நெருங்கிய உறவு இருந்து வர முடிந்தது. இப்பொழுது அமைச்சு மூலமாகவே எல்லோரும் செயல்பட வேண்டியிருக்கிறது. இதனால், அமைச்சுக்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்குமிடையே நல்ல உறவு காணப்படவில்லை.

### தந்திர வேலை

இது ஒரு ஆபத்தான காரியம். இந்த மாற்றம், உள்ளூராட்சி அமைச்சரின் தம்பி திரு ராஜேந்திரா, அமைச்சரின் மைத்துனரான திரு. பாலசிங்கம், இன்னுமொரு பிரமுகர் ஆகிய மூவர் கொண்ட ஒரு குழுவின் சிபார்சின் பின்னரே மேற்கொள்ளப்பட்டது. இதில் சிரிப்பு என்னவென்றால், குழு தனது சிபாரிசுகளை வெளியிடு முன்னரே அமைச்சர் திருச்செல்வம் அச் சிபாரிசுகளை வெளியிட்டு விட்டது தான்! ஆகவே இது முழுவதும் ஏற்கனவே குடும்ப விஷயம் போலக் கலந்து பேசிச் செய்யப்பட்ட முன் ஏற்பாடாகும். தமிழரசுக்கட்சி, உள்ளூராட்சி அமைச்சு மூலமாக தனது செல்வாக்கை உபயோகிப்பதற்கே இந்த வேலை தந்திரமாக நடைபெற்றுள்ளது.

### யாழ் மாநகரசபை

யாழ்ப்பாண மாநகரசபை விஷயமாக நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? இது பற்றி பிரிவிகவுன்சில் சுட்டிக்காட்டியிருப்பதென்ன?

யாழ்ப்பாண மாநகரசபை கலைக்கப்பட்டது என்ன அடிப்படையில் என்பது எவருக்கும் தெரியாது உள்ளூராட்சி கமிஷன் யாழ்ப்பாணம் சென்றதும், அங்கு இரு நாட்கள் தங்கி திருச்செல்வத்தைக் கண்டு பேசியதும், உள்ளூராட்சி கமிஷனரின் அறிக்கையெதுவும் சமர்ப்பிக்கப்படுமுன்னர் யாழ் மாநகரசபை கலைக்கப்பட்டதும் உங்களுக்கு தெரியுமா? இதை நான் நிரூபிக்கத்தயாராக இருக்கிறேன். மாநகரசபை கலைக்கப்பட்டு ஒன்றரைமாதங்களுக்குப் பின்பே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இது பற்றி ஆராய பாரபட்சமற்ற ஒருகுழு நியமிக்கப்படவேண்டும். எனினும், 1968 பெப்ரவரிக்கிடையில்தேர்தல்நடத்த முன்வந்ததற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

### அரசியல் காரணம்

உள்ளூராட்சி அமைச்சர் அரசியல் காரணங்களுக்காக சில குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றங்களைக் கலைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார். அத்துருகிரியா கிராமச் சங்கம் எதற்காக கலைக்கப்பட்டது? இதற்குக்காரணம் ஏராளமாக மேலதிகவரி இருப்பதாகவா கூறுகிறீர்கள். அப்படியானால் மேலதிக வரி செலுத்த வேண்டியுள்ள ஏனைய கி. சபைகளை ஏன் கலைக்கவில்லை? வவுனியாவில் ஏழு கிராமங்கள் ரூபா 20,000க்கு அதிகமாக மேலதிக வரி செலுத்தவேண்டும். கிமாததிமலை கி. ச, ரூபா 20,000மும் உடையாலூர் சி. ச, ரூபா 13,000 மும். உடுப்பிட்டி கூ. ச, ரூபா 43,000 கொடுக்க வேண்டியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் 20 கிராமசபைகளும், திருமலை மாவட்டத்தில் 13 கிராமசபைகளும் மேலதிக வரி செலுத்த வேண்டியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 கி. சபைகளும், மன்னார் மாவட்டத்தில் 8 கி. சபைகளும் மேலதிகவரி செலுத்த வேண்டும். ஆனால் அமைச்சர் அவற்றில் ஒன்றையும் கைவைக்கவில்லை. அத்துருகிரிய கி. ச. மட்டும் கலைக்கப்பட்டதேன்?

### பாரபட்சம்

இதற்குக்காரணம் உள்ளூராட்சி அமைச்சர் பாரபட்சமாக நடப்பதே. தேவாந்துறை நகரசபை மேலதிகவரி காரணமாக கலைக்கப்பட்டது. ஆனால் அக்கரைப்பற்று நகரசபைக்கு எதிராக கணக்குப்பரிசோதகர்களும், உள்ளூராட்சி அதிகாரிகளும் குற்றம் சுமத்தியும் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

உடுகம்பல கி. ச. தலைவர் மீது நிதியைத்தவறாகப் பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு இருந்தும் அவர் பதவி நீக்கம் செய்யப்படவில்லை. ஒருதலைப்பட்சமாக நீங்கள் நடக்கிறீர்கள். ஆனால் அரசியல் காரணங்களுக்காக மற்றையவர்கள் மீது மட்டும் நடவடிக்கையெடுக்கிறீர்களா?

### நிதி ஒதுக்கீடு

நிதி ஒதுக்கீட்டில் நடைபெறுவதென்ன? அதிலும் பாரபட்சம்தான்! 1965—66ம் ஆண்டு கொழும்பு மாநகரசபைக்கு ரூபா 450,000 வழங்கப்பட்டது. ஆனால் அதேசமயம் யாழ் மாநகரசபைக்கு ரூபா 470,000 வழங்கப்பட்டது.

மட்டக்களப்புக்கு ரூபா 549,000,ம் திருமலைக்கு ரூபா 43,800ம் வழங்கப்பட்டது. இந்த அநீதியை உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகளே எதிர்த்ததால், 1966 - 67ல் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது.

### கிணறு வெட்ட நிதி

கிணறு வெட்ட வழங்கப்பட்ட நிதி விபரங்களைக் கூறுகிறேன். இது அமைச்சரின் மனோபாவத்தை விளக்குகிறது. 65-66ல் கொழும்பு மாவட்டம் முழுவதற்கும் ரூபா 6000ம் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கு ரூபா 76,800, களுத்துறைக்கு ரூபா 800. அனுராதபுரத்துக்கு ரூபா 34,000 வவுனியாவுக்கு ரூபா 67,000. திருமலைக்கு ரூபா 87,000. அம்பாந்தோட்டைக்கு ரூபா 6000 மட்டக்களப்புக்கு ரூபா 87,000. அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு அதிகப்பணம் ஒதுக்கியிருக்கவேண்டும்.

இந்த ஆண்டு சிறிது முன்னேற்றம் காணப்படுகிறது. ஆனால் அமைச்சர் மீண்டும் பழைய முறையில் பணம் ஒதுக்காமல் உதவியமைச்சர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### இழுத்தடிப்பு

உள்ளூராட்சி மன்றங்களுக்கு கடன் வழங்கும் முறையிலும் இழுத்தடிப்பு கடைப்பிடிக்கப்படுகிறது. கடன் வழங்கும் வேலையை இப்போது குருசுந்தரமூர்த்தி என்ற உள்ளூராட்சி சேவை கமிஷன் கமிஷனர் செய்து வருகிறார். அவர் தனக்குப் பிடித்தமில்லாத பகுதிகளுக்கு கடன் வழங்கும் விஷயத்தைத் தட்டிக் கழித்து விடுகிறார். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலிருந்து கடன் கோரும் உள்ளூராட்சிமன்றங்களை இப்படி இழுத்தடிக்கப்படுகின்றன.

### நீர் விநியோகம்

தண்ணீர் விநியோகத் திட்டத்தின் நிலையென்ன? கிழக்கு மாகாணத்தில் மட்டும் மூன்று நான்கு நீர் விநியோகத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறிகிறேன்.

புதிய நீர் விநியோகத் திட்டம் 2 அரை ஆண்டுகளாக அமைச்சு ஆரம்பிக்கவில்லை. பட்டிருப்புத் தொகுதியில் துறை நீலாவணைத் திட்டம், நாயப்பட்டிமுனைத் திட்டம் ஆகிய இரண்டுக்குமே டெண்டர் கோரப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

இராசமாணிக்கம்: நீர் தவறாகச் சொல்கிறீர்.

என். எம்.: தவறைச் சுட்டிக்காட்டுவதற்கு மகிழ்கிறேன்.

இராச: ஒன்று பட்டிருப்பிலும், ஒன்று கல்குடாவிலும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இந்தத் திட்டங்கள் 14 வருடங்களுக்கு முற்பட்டது என்பது உமக்குத் தெரியுமா?

என். எம்.: நான் உங்களுக்கு நிறைவேற்றித்தந்த அந்த திட்டம்தானா?

இராச: நீர் ஏன் அது பற்றி கவலைப்படுகிறீர்?

என். எம்.: நான் இதைச் சொல்லக் காரணம் உங்கள் அமைச்சு திருப்திகரமானதல்லவென்று விளங்கப்படுத்தத்தான்.

இராச: கடந்த 10 ஆண்டுகளாக திருத்தப்படாத தவறுகளை அமைச்சர் திருத்துகிறார்.

என். எம்.: உங்கள் தவறுகளே திருத்தப்படுகின்றன என்பதே எனது புகார்.

இராச: (சபைத்தலைவரிடம்) இவர் விழல்தனமாக பேசுகிறார் ஐயா!

(14-ம் பக்கம் பார்க்க)

# வவுனியா எம். பி. யின் நடுநிசி அட்டகாசம்

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் தாதிகள், எழுதுவினைஞர்கள், சிறுசேவையாளர்கள் முதலிய சிப்பந்திகள் சென்றவாரம் வேலைநிறுத்தம் செய்தது தெரிந்ததே வவுனியா எம். பி. தனது சகாக்களுடன் நள்ளிரவில் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியுள் நுழைந்து அட்டகாசம் செய்தாரென்றும், முகத்தில் இடித்ததைப் போல அவருக்குப் பதிலடி கொடுப்பதற்காக ஆஸ்பத்திரி சிப்பந்திகள் மின்னல் வெட்டுவேலை நிறுத்தத்தில் இறங்கினார்கள் என்றும் அறியப்படுகிறது.

இதுசம்பந்தமாக நடத்தப்பட்ட விசாரணையின் போது கீழ்க்காணும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இம் மாதம் 4ந் திகதி இரவு 9·30 மணி அளவில் வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் 18பேர்களைக் கொண்ட ஒரு சகாக்கள் கோஷ்டியுடன் முல்லைத் தீவு ஆஸ்பத்திரியுள் திடும் பிரவேசமாக நுழைந்தாராம்.

டாக்டரின் அனுமதியின்றி அகால வேளையில் ஆஸ்பத்திரியுள் செல்லக் கூடாதென்று கூறினாராம் வாயில் காவலாளி.

### மறுவிசாரணை வேண்டும்

'அந்த டாக்டரை என்னை வந்து பார்க்கச் சொல்!" என்று அதிகார தோரணையில் உத்தரவிட்ட எம். பி. ஆஸ்பத்திரி 4வது வார்டுக்குள் பிரவேசித்தாராம்.

நள்ளிரவில் அதிகாரிகளின் அனுமதியின்றி யாரையும் வார்டினுள் விட முடியாது என்று தடுத்தார் வார்டு கங்காணி.

கோபம் [illegible] கொண்டு வந்து விட்டதாம் எம். பிக்கு கங்காணியையும் மிரட்டிவிட்டு அவரும் சக பட்டாளமும் வார்ட்டுக்குள் நுழைந்தனராம். இதற்கிடையே வாசல் காவலாளி டாக்டருக்குத் தகவல் கொடுத்து விட்டதால் டாக்டர் உடனடியாக 4வது வார்ட்டுக்கு வந்துவிட்டார்.

அங்குநிற்கும் கூட்டத்தையும் ஆரவாரத்தையும் கண்ட டாக்டர் அகால நேரத்தில் சட்ட விரோதமாக நோயாளிகளுக்கும் சிப்பந்திகளுக்கும் கஷ்டம் கொடுக்கும் முறையில் நடந்துகொள்ள வேண்டாம் என்று எம். பியை பலமுறை பணிவுடன் கேட்டுக்கொண்டார்.

### எவரையும் வெளியேற்ற முடியாது

'எவரையும் இந்த இடத்திலிருந்து வெளியேற்ற உன [illegible] அதிகாரத் தொனியில் கர்ச்சித்தாராம் எம். பி.

எம். பியின் செயல் தன்னை அவமதிப்பதாக இருக்கிறதென்று கருதிய டாக்டர் இரவோடு இரவாகப் பொலிஸில் முறையிட்டதாகக் கூறப்படுகிறது.

எம். பியின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டு கொதித்தெழுந்தனர் ஆஸ்பத்திரி சிப்பந்திகள். அவர்கள் மேலதிகாரிகளுக்கும், தொழிற் சங்கங்களுக்கும் தந்தி மூலம் தகவலைத் தெரிவித்துவிட்டு, அடுத்த நாள் மின்னல் வேட்டு வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

சிப்பந்திகள் கொடுத்த பதிலடி எம். பி. யையும் மேலதிகாரிகளையும் கதிகலங்கச் செய்து விட்டது.

ஸ்தலத்துக்கு விரைந்த மேலதிகாரிகளும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் கடமை நேரத்தில் அவர்களுக்குப் பூரண பாதுகாப்பு அளிப்பதாக உத்தரவாதம் அளித்ததின்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினபதியின் கட்டுக் கதை அம்பலம்

## கிளிநொச்சி எம். பி. மீது பாய்ந்ததின் எதிரொலி

தினபதி என்னும் தினசரி ஏடு மீண்டும் விஷமப்பிரசாரத்தில் இறங்கியுள்ளது. இத்தினசரி யோகபுரம் குடியேற்ற வாசிகள் கிளிநொச்சி பாராளுமன்றப் பிரதிநிதி திரு. இரத்தினத்தை தாக்கி அவருக்கு ஒரு மகஜர் அனுப்பியதாக ஒரு கட்டுக்கதையை சோடினை செய்து 13-9-67ந் திகதி வெளியிட்டுளது. அவர் விளம்பரம் பெறுவதற்காகச் சேவை செய்கிறார் என்ற எண்ணத்தை மக்களிடையே உருவாக்குவதற்கு இந்த ஏடு முயற்சி செய்திருக்கிறது.

தினபதியின் இந்த ஆத்திரத்துக்குக் காரணம் தினபதி ஆண்டு மலருக்கு ஒரு செய்தியோ, கட்டுரையோ அனுப்புமாறு திரு. இரத்தினத்தை எழுத்திலும் நேரிலும் கேட்டும் அவர் மறுத்துவிட்டது தானும்.

தமிழரசுக் கட்சியையும் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரையும் தாக்கவேண்டும் என்ற வெறிபிடித்த தினபதி ஆசிரியர் குழு உறுப்பினர் ஒருவர் பாவம் அப்பத்திரிகையின் சிங்கள முதலாளிமாருக்கே தெரியாமல் இடையிடையே தங்கள் கைவரிசையையும் காட்டிப் பத்திரிகைத் தருமத்தையும் குலைத்துத் தினபதியைப் பொய்ப்பதியாக்குகின்றார்.

யோகபுரம், எங்கே, மல்லாவி எங்கே என்று கேட்கும் அந்தச் சிறு ஆசிரியருக்கு அப்பகுதியில் உள்ள நிலைமை எப்படித் தெரியும். மல்லாவியில் இருந்து 60 மைல் தூரத்தில் உள்ள சாவகச்சேரியில் இருந்து கிடைத்ததாக இச் செய்தியை இந்த ஏடு பிரசுரித்துள்ளது.

கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருக்கு எவ்வித மகசரையும் தாங்கள் அனுப்பவில்லையெனத் துணுக்காய்ப் பகுதி மக்கள் சுதந்திரனுக்கு அறிவித்துள்ளர். ஆகவே இது தினபதி அலுவலகத்துள் தயாரித்த பொய்ச் செய்தியாகும்.

முன்னரும் ஒருமுறை தினபதி கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருடன் முட்டிமோதி மூக்கு உடைபட்டது. இப்பொழுது மீண்டும் அதன் பொய் வேடமும் நச்சுத் தன்மையும் அதனுடைய பொய் மகசரினால் நிறுவப்படுகின்றன.

மல்லாவி உப தபால் நிலையம்பற்றி இச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உப தபால் நிலையத்திற்கு உப தபாலதிபர் ஒருவரை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்பதை அப்பகுதி மக்கள் மட்டுமின்றி வடபகுதி மக்களும் அறிவர்.



அமைச்சர் திரு. மொன்ரேகு ஜயவிக்கிரமா கிளிநொச்சித் தொகுதிக்கு விசயம் தந்த பொழுது கிளிநொச்சித்தொகுதியில் உள்ள மல்லாவி உட்பட நான்கு உப தபால் நிலையங்களுக்கும் உப தபாலதிபர்களை விரைவில் நியமிக்குமாறு வற்புறுத்தினர்.

மீண்டும் 6-9-67ல் பாராளுமன்றச் செயலாளரையும், அஞ்சல் அதிபர் நாயகம் அவர்களையும் கிளிநொச்சிப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் உள்ள புதிய தபால் நிலையங்களான ஸ்கந்தபுரத்திற்கும் மல்லாவிக்கும் விரைவில் நியமனங்களை நடத்துமாறு வற்புறுத்தினர்.

இவற்றை எல்லாம் தினபதி போன்ற ஒழிந்த பத்திரிகையில் வெளியிட்டு அவர் விளம்பரம் தேட வேண்டுமா?

வன்னேரிக்குளப் பகுதியில் கிணறு வெட்டுவதற்குக் கொடுக்கும் உதவிப் பணத்தைக் கூட்டிக் கொடுக்குமாறு கிளிநொச்சி பா. உ., திரு. இரத்தினம் காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சரைத் தொடர்ந்து சென்ற இரண்டாண்டுகளாக வற்புறுத்திவந்தார்.

இப்பிரச்சினை இலங்கை முழுமைக்கும் பொதுவான பிரச்சினை. ஆகையால் இதனைத்தீர்ப்பதற்கு அமைச்சு நீண்டகாலம் எடுத்தது.

அமைச்சருக்குத் திரு. இரத்தினம் இதுபற்றி எட்டுக் கடிதங்களும் இரண்டு தந்திகளும் அனுப்பியபின் சென்ற மாதம் கிணறுகளுக்கு நன்கொடைப் பணம் கொடுப்பதுபற்றி ஒரு புதிய சுற்றறிக்கை வெளியிடப் போவதாக அமைச்சரின் நிரந்தரச் செயலாளர் திரு. ஸ்ரீகாந்தா அறிவித்தார்.

பஸ் போக்குவரத்து பற்றி தினசரி சயிறுதிரிக்கிறது.

பஸ் சேவை கிளிநொச்சிப் பகுதியில் மட்டுமன்றி தமிழ்ப் பகுதி முழுவதும் மோசமடைந்து கிடக்கின்றது. இப் பஸ் சேவையைத் திருத்துவதற்காக திரு. இரத்தினம் பாராளுமன்றத்திலும் அமைச்சரோடும், இ. போ. ச. வோடும் பெரும் போராடி வருகின்றார்.

சென்ற கிழமை அமைச்சருக்கு அவர் அனுப்பிய அவசரத் தந்தியில், 'கிளிநொச்சியில் பஸ் நிலையத்தில் 12 பஸ்கள் ஓடுகின்றன என நீங்கள் எனக்கு அறிவித்தீர்கள். ஆனால் 10 பஸ்கள்தான் ஓடுகின்றன. இவற்றில் நான்கு பஸ்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. எனவே நல்ல ஆறு பஸ்களை உடனே அனுப்புங்கள்' என்று கேட்டுள்ளார்.

மக்களின் தேவைகளை நேரடியாகக் கவனிப்பதற்கு வவுனிக்குளத்தில் ஒரு காணி அலுவலகத்தை நிறுவுமாறு திரு. அழகக்கோனும் திரு. இரத்தினமும் அமைச்சரை வற்புறுத்தி வருகின்றனர்.

குடியேற்றத்திட்ட மக்கள் பொருளாதாரம் நலிந்திருப்பதால் அவர்களிடமிருந்து நிலவரி' நீர்வரி என்பவற்றைக் கூட அறவிடப்படாதெனப் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பினர் திரு. இரத்தினம்.

அன்றியும் இதனை நடைமுறைப்படுத்துதற்காக அரசாங்கப் பாராளுமன்றக் குழுவிற்கே இதனை ஒரு பிரேரணையாகவும் அனுப்பியிருக்கின்றார்.

அப்பகுதி வீதிகளைத் திருத்துதற்கும் அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பலவாகும். எனவே கொடுமனக் கூனி போன்றவர்கள் அன்றி வேறு எவரும் திரு. இரத்தினம் தமது தொகுதிக்கும் பொதுவாக இலங்கைத் தமிழ் மக்களுக்கும் அல்லும் பகலும் அயராது ஆற்றிவரும் [illegible] டார்கள்.

## தங்கப் பதக்கம்



இலங்கைச் சட்டக் கல்லூரியின் தமிழ் மன்றம் நடாத்திய வருடாந்த வழக்குரைத்தற் பேச்சு வன்மைப் போட்டியின் முதலாவது தங்கப் பதக்கமான சேர் பொன்னம்பலம் இராமநாதன் தங்கப் பதக்கத்தை பொன்னம்பலம் செட்டி சிதாராமன் பெற்றார். இலங்கை சட்டக் கல்லூரியின் தமிழ் மன்றத் தலைவரும், சட்டக் கல்லூரி உதை பந்தாட்டக் குழுவின் முதல்வருமான இவர் திருக்கோணமலை இந்துக் கல்லூரியினதும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவருமாவார். இவர் திருகோணமலை பொன்னம்பலம் செட்டியின் புதல்வராவர்.

(இப் போட்டியின் இரண்டாவது பதக்கமான ஸ்ரீ இராமநாதன் பதக்கத்தை திரு. மு. திருநாவுக்கரசு பெற்றார்)




# தமிழ் பகுதிகளிலே..

மட்டக்களப்பில் மீன், இறால், நண்டு வளர்ப்பு பண்ணைகள் அடுத்த வருடம் அமைக்கப்படவிருக்கின்றன. இது இலங்கையில் அமைக்கப்படவிருக்கும் இத்தகைய பண்ணைகளில் மூன்றாவதாகும்.

மட்டுநகர் அரசினர் ஆஸ்பத்திரியின் நிர்வாக சீர்கேட்டினால் நோயாளிகள் கஷ்டமடைகின்றனர்.

காலஞ் சென்ற அல்வாயூர் கவிஞர் செல்லையாவின் குடும்பத்திற்கு பொற்கிழி வழங்கும் விழா வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில நடைபெற்றது.

நிந்தவூருக்கென தனியாக ஒரு காரியாதிகாரி பிரிவு ஏற்படுத்த உள்ளூராட்சி அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார.

மாரீசன் கூடல், இளவாலை, சித்திரமேழி விளான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமதுபகுதிக்குஒருசமாதான நீதவான் நியமிக்க கோரியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயத்திலும் கமத்தொழிலிலும் திருநெல்வேலியும் அரியாலையுமே முதலிடம் வகிப்பதாக யாழ்ப்பாணக் காரியதிகாரி அலுவலகத்தில் நடைபெற்ற விவசாய உற்பத்திக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே கூடியும் குறைந்தும் காணப்படும் ஆசிரியர் நிலையைத் தரப்படுத்தும் ஒரு மாற்றம் இரண்டாந்தவணை விடுமுறையில் எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் ஏற்படவில்லை.

தீவுப்பகுதி பஸ்சேவை சீர்கேடு பற்றி ஊர்காவற்றுறை பட்டினசபைத் தலைவர் புகார் கூறியுள்ளார். தரமான பஸ்களை அங்கு ஓடவிடாமையால் பிரயாணிகள் படும் கஷ்டத்தை இ. போ. ச. மேலதிகாரிகளுக்கு அவர் அறிவித்துள்ளார்,

இவ்வருடம் டிசம்பர் முதல் கரணவாய்க் கிராமத்திலும் ஜி. சி. ஈ. பரீட்சை நிலையம் ஏற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் இவ்வருட இறுதிக்குள் இரு புதிய உப தபால் நிலையங்களை நிறுவ தபாற் தந்திப் போக்குவரத்து அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா முடிவு செய்துள்ளார்.

நவீன வசதிகளுடன் கூடிய தானியக்குதம் ஒன்று ரூபா 12 லட்சம் செலவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் சின்ன வெங்காயம் முழுவதையும் கமத்தொழில் இலாகா கொள்வனவு செய்ய முடிவு செய்திருக்கிறது.

ஊர்காவற்றுறை வட்டுக்கோட்டை பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 22,000 ஏக்கர் நிலத்தில் கடல்நீர் உள்ளிடுவதைத் தடை செய்து அவற்றை விவசாயம் செய்யக் கூடியதாக மாற்றித் தருமாறு காரைநகர் அபிவிருத்திச்சங்கம் காணி மந்திரியைக் கோரியுள்ளது. 3000 பேர் கையெழுத்திட்ட ஒருமகஜரும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கங்களுக்கும் தனி நபர்களுக்கும் விவசாயக்கடன் அளிக்கும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு கூட்டுறவு வங்கி, ஒரு புதிய 'நடமாடும் வங்கி' சேவையை ஆரம்பித்துள்ளது.

கல்முனை - அக்கரைப்பற்று பாதையில் அரைமணி நேரத்துக்கு ஒரு பஸ் விதம் சேவையிலிட இ. போ. ச. முடிவு செய்துள்ளது.

மட்டக்களப்பு பகுதியிலுள்ள வேப்பவட்டுவான் குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு தலா 5 ஏக்கர் விதம் காணிபர்மிட் வழங்க வேண்டுமென்று மட்டுநகர் எம். பி. திரு இராசதுரை காணி அமைச்சை கோரியுள்ளார்.

அரசாங்கத்தின் புதிய கடன் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண விவசாயிகள் பாதிக்கப்படாவண்ணம் உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று திரு. இராசமாணிக்கம் எம். பி உணவு அமைச்சரிடம் வேண்டுகோள்விடுத்துள்ளார்,

வடடகுதியில் அரசாங்கத் தர்மப்பணம் பெறுபவர்களுக்கு இலவசமாகச்சட்ட நிபுணர்களின் உதவியளிக்க யாழ்ப்பாணம் சமூகசேவைப் பகுதி ஒழுங்கு செய்துள்ளது.

கரணவாய் தெற்கு மாண்டான் குடியேற்றத் திட்டத்திலும், நாகர் கோவிலிலுள்ள சாளம்பன் என்னுமிடத்திலும் புதிய தபாற்கந்தோர்கள் திறக்கப்படும்.

காங்கேசன்துறை-யாழ்ப்பாணம் புகையிரத சேவை தாமதமின்றி நடைபெற வேண்டுமெனவும், தெல்லிப்பழை புகையிரத நிலையத்தில் தண்ணீர் வசதி செய்து தர வேண்டுமெனவும் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் புகையிரத இலகா தலைவரை கோரியுள்ளார்.

அச்சுவேலி - பண்டத்தரிப்பு பாதையில் தெல்லிப்பளைச் சந்திக்கருகாமையில் உள்ள வீதி திருத்தப்பட வேண்டுமென்றும், தெல்லிப்பழைச் சந்தியில் உள்ள ப. நோ. கூ. சங்கத்துக்கு முன்னுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் மழைத்தண்ணீர் தேங்கி நிற்பதால் மக்கள் கஷ்டப்பட நேரிடுகிறதென்றும் வீதியைச் செப்பனிடுமாறும் திரு. செல்வநாயகம் பொதுப்பணி அமைச்சைக் கோரியுள்ளார்.

ஊர்காவற்றுறை கந்தோரில் தளபாடவசதி குறைவாகவுள்ளதென்று கூறப்பட்டதைத் தொடர்ந்து தீவுப் பகுதி எம். பி. அவற்றை நிறைவு செய்ய நடவடிக்கையெடுத்துள்ளார்.

கவிஞர் கந்தவனம் எழுதிய 'ஏனிந்தப் பெருமூச்சு' என்ற கவிதைத் தொகுதி யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது.

கரவெட்டி மேற்கிலிருக்கும் அம்பம் அரசாங்க பிரசவ ஆஸ்பத்திரியில் தொலைபேசி வசதியின்மையால், ஊழியர்களும் நோயாளிகளும் அவதிப்படுகின்றனர்.

நிந்தாவூர் அல்-அஸ்றக மகாவித்தியாலயத்திற்கு 25 ஆயிரம் ரூபா செலவில் புதிய விஞ்ஞான ஆய்வுக் கூடம் கிடைக்கவிருக்கின்றது.

யாழ் புகையிரத நிலையத்தில் உள்ள பொது மலசலகூடம் எந்நேரமும் பூட்டப்பட்டேயிருப்பதால் பிரயாணிகள் கஷ்டமடைகின்றனர்.

மட்டக்களப்பிலும், திருமலையிலும் புதிய மீன் பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ.ஜீ.க்கு முஸ்லிம்களின் எதிர்ப்பு: ஐ. நா போகாத காரணம்

முஸ்லிம் எம். பீக்களின் எதிர்ப்புக் காரணமாகவே திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்திற்கு இவ்வாண்டு ஐ. நா. செல்லும் வாய்ப்புக் கிடைக்கவில்லையென்று அரசாங்க வட்டாரத்தில் ஒரு வதந்தி அடிபடுகிறது.

திரு. பொன்னம்பலம் மத்திய கிழக்குப்பிரச்சினையில் அரபு மக்களுக்குப் பாதகமாகவும், இஸ்ரேலுக்கு சாதகமாகவும், இலங்கை அரசாங்கத்தின் கொள்கைக்கு நேர் விரோதமான கருத்துக் கொண்டிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது தெரிந்ததே.

இச்செய்தியின் பின் திரு. பொன்னம்பலத்தை ஐ. நா. சபைக்கு அனுப்புவதற்கு அரசாங்கக்கட்சியிலும் வெளியிலும் உள்ள முஸ்லிம் எம். பிக்களும் முஸ்லிம் பிரமுகர்களும் பிரதமரிடம் ஆட்சேபம் தெரிவித்தனர் என்றும் இதன் பலனாகவே ஜீ. ஜீ. ஐ. நா. செல்லும் வாய்ப்பு இழக்க நேரிட்டதென்றும் சொல்லப்படுகிறது.

இப்பிரச்சினையில் அரசாங்கக் கொள்கைக்குச் சாதகமாக தனது கொள்கையை மாற்றிக் கொள்வதாக அவர் பிரதமரிடம் பின்னர் கூறிப் பார்த்ததாகவும், ஆனல் பயன்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

இதன் பின் தனது தோல்வியை மறைக்கவும், தனது கட்சிக்காரரை திருப்திப்படுத்தவும் மாவட்டசபைகளை எதிர்ப்பதற்காகவே இம்முறை ஐ. நா. போகதான் மறுத்து விட்டதாக திரு. பொன்னம்பலம் சகாக்களிடம் கூறிக் கொண்டாராம்.

மாவட்டசபை மசோதாவை எதிர்ப்பதற்காக திரு. பொன்னம்பலத்தை ஒரு கைக்குருவியாக உபயோகிப்பதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிசெய்து கொண்டிருக்கின்றன என்று கூறப்படுகிறது.

# தமிழரசுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அரசாங்கம் தீவிரம்

## மாவட்டசபைமசோதாவைச்சமர்ப்பிக்கஉடனடி நடவடிக்கை

## சுதந்திரக் கட்சி ஏடு தரும் தகவல்

பாராளுமன்றத்தின் இக் கூட்டத் தொடரிலேயே மாவட்டசபை மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகத் தமிழரசுக் கட்சிக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் இப்பொழுது தீவிரமாக நடவடிக்கை எடுத்துவருகிறது.

உத்தேச மாவட்டசபை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் என்று பிரதம மந்திரி சிங்கள மக்களுக்குக் கொடுத்த 'உத்தரவாதம்' விரைவில் சமர்ப்பிக்கப்பட விருக்கும் மாவட்டசபை மசோதா மூலம் கிழித்தெறியப்படுமென்று அறியப் படுகிறது' இவ்வாறு சுதந்திரக் கட்சியின் வாராந்த ஏடான 'சிங்களே' 3-9-67ந் திகதி இதழில் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

'மசோதாவை பாராளுமன்ற உறுப்பினர்களின் முன்னிலையில் சமர்ப்பிக்க முன்பு அவசியமான அரசியல் 'இணக்கத்தை' ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு தமிழரசுக் கட்சியின் தூதுகோஷ்டியொன்று பிரதமரைச் சந்தித்தது.

மாவட்டசபை பற்றிய திட்டத்தைத் தமிழரசு அமைச்சர் திரு. திருச்செல்வம் மந்திரிசபைக்குச் சமர்ப்பித்துள்ளார்" என்று இச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விஷமிகளின் முயற்சி பலிக்கவில்லை

இலங்கைத்தமிழரசுக்கட்சி தனது கொள்கைகளையும் இலட்சியங்களையும் கைவிட்டு விட்டதென்றும் தமிழ் மக்களைக் காட்டிக்கொடுத்து வருவதாகவும் தமிழகத்தில் தி. மு. க. தலைவர்களிடையே ஒரு விஷமப் பிரசாரத்தை நடத்த அண்மையில் சிலர் எடுத்த முயற்சி படுதோல்வியில் முடிநதிருப்பதாக அறியப் படுகிறது.

அவர்கள் இதற்கென இங்கு சில துண்டுப் பிரசுரங்களைப் பிரசுரித்து தமிழ் நாட்டுக்கு எடுத்துச் சென்று அங்கு விநியோகிக்க முயற்சித்தார்களாம்.

தி. மு. க. தலைவர்களிடையேயும், ஏனைய தமிழகத் தலைவர்கள் மத்தியிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குள்ள செல்வாக்கை முறியடிக்கும் தீய நோக்குடன் இவ் வேலை நடைபெற்றதென்று தெரிகிறது.

எனினும் இந்த விஷமிகளின் வேலை தமிழ் நாட்டில் பலிக்கவில்லையெனறும், இதற்குக் காரணம் தி. மு. க. தலைவர்கள் தமிழரசுக் கட்சியையும் தமிழரசுத் தந்தையின் தியாகத்தையும் நல்ல முறையில் தெரிந்து வைத்திருப்பதுதான் என்றும் அறியப்படுகிறது.

## தனி மாநிலம் கோரி மற்ருெரு கிளர்ச்சி

பாரதத்தில் புதிய மொழி வழி மாநிலக் கோரிக்கையொன்று முகிழ்த்திருக்கிறது உத்தரப் பிரதேசத்தில் வாழும் போஜ்புரி மொழிபேசும் மக்கள் தங்களுக்கு தனிமாநிலம் வேண்டும் என்று கோரியிருக்கிருர்கள்.

பாரதம் தற்போது 17 மொழி வழி மாநிலங்களாக பிரிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. இப்போது உத்தரப் பிரதேசத்திலுள்ள போஜ்புரி மொழி பேசும் மக்களும தங்களுக்கு மொழியடிப்படையில் தனி மாநிலம் வேண்டும் என்று கோரிக்கைவிடுத்துள்ளார்கள். அவர்கள் தங்கள் கோரிக்கையை முன்வைத்து விரைவில் கிளர்ச்சி ஆரம்பிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

உத்தரப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதி அதையடுத்த பீகார் மாவட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டதாக போஜ்புரி மொழி பேசும் மாநிலம் இருக்க வேண்டுமென்பது அவர்கள் கோரிக்கையாகும்.

'புதிய மாநிலத்தை அமைக்கும்படி செய்ய எவ்வித அறப்போர் நடத்துவதென்பதை தீர்மானிக்க அடுத்த டிசம்பரில் பீகாரில் ஒரு மாநாடு நடைபெறும்' என்று போஜ்புரி மாநிலக் கோரிக்கையின் மூலவரான திரு. சிங் என்பார் கூறியுள்ளார்.

அப்பகுதியைச் சேர்ந்த எல்லா அரசியற் கட்சிகளின் தலைவர்களும் தமது கோரிக்கையை ஆதரிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## ஒரு கொடியின் கீழ் திரளுக

ஒரு நாட்டில் ஜனநாயகம் வளர தொழிலாளர்களின் நிலை உயர வேண்டும். இலங்கை சுதந்திரம் பெற்ற நாடாக இருந்த போதிலும் மலையகத்தில உள்ளவர்களுக்கு மட்டும் அச் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது இருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் நம்மிடையே ஒற்றுமையின்மையே யாகும். இந் நிலை மாறி தொழிலாளர்கள் யாவரும் ஒன்றுபட்டு ஒரு கொடியின் கீழ் திரண்டு என்று போராட முன் வருகிறேமோ அன்றுதான் நாமும் சுதந்திர புருசர்களாக வாழ முடியும்.

இவ்வாறு நுவரெலியாவை சேர்ந்த டார்க்கஸ் தோட்டத்தில் நடந்த இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தோட்டத் தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிய தலவாக்கொல்லை மாவட்டப்பிரதிநிதி திரு. பாக்கியநாதன் அவர்கள் கூறினுர்.

தலவாக்கொல்லை மாவட்டத் தலைவர் திரு. சாமன் அவர்களின் தலைமையில் நடந்த மேற்படி கூட்டம் நடந்தது.

மொழி அடிப்படையில் மாநிலங்கள் அமைக்கப்பட்டுள்ள போது போஜ்புரி மொழி பேசுவோர் மட்டும் ஏன் புறக்கணிக்கப்பட வேண்டும் என்பது போஜ்புரி மொழி பேசும் மக்களின் வாதமாகும்.

## மலையகத்தில் பாரதி விழா

இம்மாதம் 20ம் திகதி தலவாக்கொல்லை நகரில் பாரதி விழாவினை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளை இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தலவாக்கொல்லை வாலிப முன்னணி கிளை துரித ஏற்பாடுகள் செய்து வருகின்றது. இவ்விழாவில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகைதந்துள்ள பாராதியாரின் பேத்தியான விஜயபாரதி அவர்களும் அழகிரிசாமி போன்ற முக்கியத்தர்கள் பலரும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

மற்றும் கிளிநொச்சி பாராளுமன்ற உறுபினர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம், மட்டுநகர் பாராளுமன்றஉறுப்பினரும் மேயருமான திரு. செ. இராசதுரை ஆகியோரும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வெகு விமரிசையாகக் கொண்டாடவிருக்கும் இவ் விழாவினை சிறப்புற நடத்த பல ஏற்பாடுகள் இப்பொழுதிருந்தே செய்து வருகின்றனர்.

## தோட்ட இராணுவம்

'தென்னிந்தியாவிலுள்ள 'நாம் தமிழர்' இயக்கத்தின் இலங்கைக் கிளையின் முயற்சியின் மீது தோட்டப்பகுதிகளில் ஒரு படையை நிறுவுதற்கு நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

'கம்பளை, நாவலப்பிட்டி, அட்டன், தலவாக்கொல்லை, நாரளை முதலிய இடங்களில் பலம் வாய்ந்த நாம் தமிழர் கிளை ஸ்தாபனங்கள் இயங்குகின்றன. தமிழரசு எம். பி. கள் சிலரும் இதற்கு ஒத்துழைப்பு அளிக்கின்றனர்.

இந்தியத் தொழிலாளர்களை ஆயுதபாணியாக்குதல் ஓர் ஆழ்ந்த அரசியல் திட்டமாகும். 'ஆசியா பவுண்டேசன்' என்னும் அமெரிக்க ஸ்தாபனத்தினதும், அமெரிக்க உணவு ஏஜன்ஸினதும் பிரதிநிதிகள் 'நாம் தமிழர்' இயக்கத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருக்கிருர்கள் என்றும், நாம் தமிழர் இயக்க நடவடிக்கைகளுக்குப் பண உதவி செய்வதற்கு இந்த அமெரிக்க ஸ்தாபனங்கள் விரும்புகின்றன என்றும்கூறப்படுகிறது.

— சிங்களே

## தொழிலாளர் நிலை, மாறவேண்டும்

'மேலைத்தேசங்களில் தொழிலாளர்கள் சுதந்திரமாக சுபிட்சமாக வாழ்ந்து வருகிருர்கள். ஆனல் எம் தொழிலாளர் உண்மை உழைப்பாளராக இருந்தும் சுதந்திரமற்ற சுபிட்சமற்வர்களாக இருக்கின்ருர்கள். கலை, கலாச்சாரம், பண்பாட்டையே வளர்க்க முடியாதவர்களாக இருண்ட குகையில் அடைபட்ட புலி போல வாழ்ந்து வரும் நிலைமை இன்றிருக்கின்றது. இந்த நிலைமையை மாற்றியமைக்கவேண்டு, என்பதே எமது கழகத்தின் நோக்கமாகும்.

இவ்வாறு பன்வில மாவட்டத்தை சேர்ந்த ஆகலை தோட்டத்தில் நடைபெற்ற இ. தொ. கழகத்தின் தேர்தல் கூட்டத்தில் உரையாற்[illegible] கூறினுர்.

## 'சுதந்திரன்'

### புதிய சந்தா விபரம்

ஒரு வருடம் ரூபா 14-00

ஆறு மாதம் ரூபா 7-00

நிர்வாகி
சுதந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கும் கிழக்கும் ஈழத்தின் மீன்தேவையை பூர்த்தி செய்ய முடியும்



பாரதப்பிரதமர் திருமதி [illegible] இலங்கைக்கு விஜயம் செய்கிறா[illegible] திருமதி இந்திரா காந்தி [illegible] முதல் தடவை மேற்கொள்ளும் [illegible] 3 நாட்கள் ஈழத்தில் தங்கியிருப்[illegible] களில் நடைபெறும் பொது [illegible] கோளும் திருமதி இந்திரா [illegible] சமுல் பற்றியும், இலங்கைக்கு[illegible] பிரச்னைகள் பற்றியும் இல[illegible] வார்த்தை நடத்துவாரென் [illegible] 21ம் திகதி பிற்பகல் இ[illegible]

**வ**டக்கு, கிழக்கு மாகாணங்களின் கைத்தொழில் விவசாய, பொருளாதார அபிவிருத்தி குறித்து இலங்கை விவசாய கைத்தொழில் அபிவிருத்தித் தாபனத் தலைவர் திரு. ச. நடராசா அவர்களைப் பேட்டி கண்ட போது அவர் அளித்த பதில்கள் இங்கு இடம் பெறுகின்றன.

**திரு. நடராசா பொருளாதாரத் துறையில் பல ஆண்டுகள் இங்கிலாந்தில் பயிற்சி பெற்றுத் திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. நடராசாவிடம் பேட்டி கண்டவர் பட்டுவிலூர் வே. சிறீதரன்.**

கேள்வி: வடக்கு, கிழக்கு மாகாணங்களின் விஸ்தீரணம் என்ன? அங்கு வாழும் தமிழ் பேசும் மக்களின் தொகை என்ன? மேற் கூறிய மாகாணங்களில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன?

பதில்: வடக்கு, கிழக்கு மாகாணங்களின் விஸ்தீரணம் 7269 சதுர மைல். ஏறக்குறைய 14 இலட்சம் தமிழ் பேசும் மக்கள் அங்கு வாழுகின்றனர். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய அறு மாவட்டங்களை கொண்டுள்ளது எமது பிரதேசங்கள்.

கே: வடகிழக்கு மாகாணங்களில் வேலையில்லாமல் இருப்பவர்களின் தொகை என்ன?

ப: ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

கே: எமது பிரதேசங்களின் மூலவளங்கள் யாவை?

ப: எமது பிரதேசங்களில் காணும் மூலவளங்கள் பின்வருமாறு:

1. கனிப்பொருள் வளம்.
2. நீர்வளம்.
3. பனைவளம்.
4. மீன்வளம்.
5. முத்துவளம்.
6. சங்குவளம்.
7. மண் வளம்.
8. எண்ணெய்வளம்.
9. மனிதவளம்.

கே: மேலே கூறப்பட்ட மூலவளங்களைப்பற்றிக் கூற முடியுமா?

ப: 1. கனிப்பொருள் வளம் எமது பிரதேசங்களில் கைத்தொழிலிற்கு உதவக் கூடிய கனிப்பொருள் பின்வருமாறு:

(அ) சுண்ணக்கல்.
(ஆ) உப்பு.
(இ) கண்ணாடி மணல்.
(ஈ) இல்மனைற் மணல்.
(உ) வெண்களி.
(ஊ) வெள்ளி உலோகப் பொருள்.

(அ) சுண்ணக்கல்: யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் சுண்ணக்கல் காணப்படுகிறது. சீமெந்து செய்வதற்குரிய மூலப் பொருட்களில் சுண்ணக்கல் ஒன்றாக உபயோகப்படுகிறது. சுண்ணக்கல் கட்டிடங்கள் கட்டுவதற்கும், வீதிகள் அமைப்பதற்கும் உபயோகப்படுகிறது.

(ஆ) உப்பு: உப்பு இலங்கையின் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு உற்பத்திப் பொருளாகும். பரந்தனிலிருக்கும் இரசாயனத் தொழிற்சாலையில் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு, சவர்க்காரத் தொழிலுக்கும், சலவைத் தொழிலுக்கும் உதவுவதான காரசோடாவும், மலேரியாவை ஒழிப்பதற்காகப் பாவிக்கப்படும் டி. டி. ரி. மருந்தையும், சீமெந்துத் தொழிற்சாலைக்குத் தேவையான குளோரைற்றும் உற்பத்தி செய்யப்படுகிறது. 1961ம் ஆண்டின், புள்ளி விபரத்தின்படி இலங்கையின் மொத்த உப்பு உற்பத்தியில (19 880 தொன்) 85 வீதம் (33 780 தொன்) வடகிழக்கு மாகாணங்கள் உற்பத்தி செய்து வருகின்றன. யாழ்ப்பாணம் ஆனையிறவு, நிலாவெளி, மன்னார் ஆகிய இடங்களில் உப்பு விளைவிக்கப்படுகின்றன. தற்போது, ஆனையிறவு நிலாவெளி மன்னார் ஆகிய இடங்களில் உப்பு விளைவிக்கப்படுகின்றது.

## பனம் பொருளிலிருந்து சீனி தயாரிக்கலாம்

தற்போது, ஆனையிறவில் 5.90 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் வருடமொன்றிற்கு 26 000 தொன் உப்பு உற்பத்தியாகின்றன. இதை விஸ்தரிக்கும் நோக்கமாக, மேலும் 650 ஏக்கர் நிலத்தில் உப்பு உற்பத்தி செய்வதற்குரிய வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. சகல வேலைகளும் பூர்த்தியானவுடன் 50,000 தொன் உப்பு உற்பத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சாவகச்சேரியில், 5550 ஏக்கர் நிலத்தில் நவீன முறையில் 1.15,000 தொன் உப்பு உற்பத்தியாக்குவதற்கு ஓர் புதிய திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது அரசாங்கம். இந்தத் திட்டத்தைப் பூர்த்தியாக்குவதற்கு இரண்டு கோடி ரூபாய் முடியுமென கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் வேலைகள் பூரணமாக பூர்த்தியானால், வருடம் ஒன்றிற்கு 1.05 கோடி ரூபாய் நாட்டிற்கு வருவாய் வரும். இதனால், அரசாங்கம் [illegible]

இலட்சம் ரூபாய் வெளிநாட்டு செலாவணியால் சேமிக்க முடியும்.

(இ) கண்ணாடி மணல்: பருத்தித்துறை, அம்பன், மாசார், நாகர்கோவில், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் கண்ணாடிப் படிவங்கள் ஏராளமாகயிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இப்படிவங்களைக் கொண்டு, கண்ணாடித் தொழிலை வெற்றிகரமாக நடாத்த அரசாங்கம் அல்லது கூட்டுறவு இயக்கங்கள் முன் வந்தால், வேலையற்றிருக்கும் பல வாலிபர்களுக்கு வேலை வாய்ப்புண்டு.

(ஈ) இல்மனைற் மணல்: புல்மோட்டை (திருகோணமலை) மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிற் காணப்படும் கருமணலில் 65 வீதம் இல்மனைற் காணப்படுகின்றது. மற்றவை கழிவுப்பொருட்களாகும். இல்மனைற்றிலிருந்து பின்வரும் பொருட்கள் செய்யப்படுகின்றன.

டிட்டானியம் ஈரொக்சைட்டு.

பிக்மன் இரும்பு.
கிறமிக்.
எனமல் உதிரிப் பாகங்கள்.
இறப்பர்.
நிலவிரிப்பு.
சிந்தெற்றிக் துணிவகைகள்.
மை, நிலப் பூச்சுக்கள்.
வானிஷ்.

சுத்தமான நீரின் உதவியைக் கொண்டு கழிவுப் பொருட்களை றூட்டைல், சேகோன் என இருவகைகளாகப் பிரிக்கலாம். கருமணலில் 10 வீதம் றூட்டைலும், 8 வீதம் சேகோனும் காணப்படுகிறது.

றூட்டையிலிருந்து பின்வரும் பொருட்களைச் செய்யக் கூடிய தாய் இருக்கிறது.

டிட்டானியன் கர்பைட்.
டிட்டானியன் பவுடர்.
[illegible]
அலோயிக.
சித்திற்றுக் [illegible]

எயர் கிருவ்ற்.
மறையன் கருவிகள்.

தொழிற்சாலையின் அதி உஷ்ணக் கருவிகள்.

சத்திர சிகிச்சைக் கருவிகள்.
சேகோனிலிருந்து பின்வரும் பொருட்களைச் செய்யக் கூடிய தாய் இருக்கிறது.

அலோயிக.
றீவ்றக்ரறீஸ்.
எரிசோடு.
குருசிபிள்.

இல்மனைற்றைவிட றூட்டைல் சேகோன் என்டன பன்மடங்கு விலையுள்ளன. 1958ல் இல்மனைற் தொழிற்சாலை புல்மோட்டைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு வருடத்தில் 45000 தொன்கள் தொடக்கம் 60.000 தொன்கள் வரையில் இல்மனைற் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதிக்கிறது இல்மனைற் தொழிற்சாலை. 75 வருடங்களுக்கு 40 இலட்சம் தொன்கள் இல்மனைற்றை புல்மோட்டையிலிருந்து எடுக்கலாம் என கணக்கிடப்பட்டிருக்கிறது.

(உ) வெண்களி: இரணைமடுப் பகுதியில் வெள்ளை நிறமுள்ள சீனக்களி காணப்படுகிறது. இவ் வெண்களியைக் கொண்டு பீங்கான் பாத்திரங்கள், பீலிகள், தண்ணீர் குழாய்களும் உற்பத்தி செய்ய முடியும். இத் தொழிற்சாலையை நிறுவ அரசாங்கம் முன்வர வேண்டும்,

(ஊ) வெள்ளி உலோகப் பொருள்: வடமாகாணத்தில் தொண்டமனாறு என்ற இடத்தில் பிஞ்சு ஆராய்ச்சியாளர்கள் நிலத்தின் அடிப்பாகத்தில் வெள்ளி உலோகப் பொருள் இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

நீர்வளம்:- உலர்வலயச் சூழலில் அமைவுற்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களை மூவகை பிரதேசங்களாக வகுக்கலாம். (அ) சுண்ணக்கற் பிரதேசம். (ஆ) வண்டல் மண் நிறைந்த பிரதேசம் (இ) உட்புக விடாத பாறையின மேல் தடித்த மூடு மண்ணைக் கொண்ட பிரதேசம்.

(அ) சுண்ணக்கற் பிரதேசம்:- இப்பிரதேசத்தில் கிணறுகள் மூலந் தரையில் கீழிலிருந்தே நீர் பெறப்படுகின்றது. இந்நீர் மழையிலிருந்து பெறப்பட்ட நீரேயாகும்.

(ஆ) வண்டல் மண் நிறைந்த பிரதேசம்:- உலர்வலயப்பயிர் செய்கைக்குத் தேவையான நீர், நில நீரைச் சேகரித்து வைத்திருக்கும் வண்டல் நிலங்களில் மட்டும், கிணறுகளிலிருந்து பெறப்படுகின்றது.

(இ) உட்புகவிடாத பாறையின் மேல தடித்த மூடு:- மண்ணைக் கொண்ட பிரதேசத்தில், ஆறுகளுக்குக் குறுக்கே அணைகளை அமைத்து, தரையின் மேற்புறத்தே நீரைத் தேக்கி வைத்தல்.

(3) பனைவளம்:- இயற்கையன்னை அளித்த ஈடற்ற செல்வம் பனை. பனைமரத்தை 'தாவர அரிசி' என அழைப்பதுண்டு. பயனற்றுக்கிடக்கும் நிலங்களில் பனைமரங்களைப்பயிரிடுவது மிகவும் பலன் தரக்கூடியனவாயிருக்கும். பனைமரங்கள் மண்ணரிப்பைபாதுகாப்பது மட்டுமன்றி, காலநிலை விருத்திக்கும் உதவுதலாயிருக்கிறது. பனம் பழம், பதநீர், பனங்கட்டி, பனங்கிழங்கு ஆகிய உணவுப் பொருட்களை பனைகள் விவசாயிகளுக்கு உதவுகின்றன. பனைப் பொருள் மூலப் பொருளாக வைத்துப் பல கைத்தொழில்களை ஆரம்பிக்கலாம். ஒரு ஏக்கர் நிலத்தில் 320 பனைகளைப் பயிரிடலாம். நூறு பனைகளிலிருந்து ஒரு பனையேற்றப் பருவத்தில் மட்டும் ஒரு தொன் பனஞ்சீனி தயாரிக்கலாம். சாதாரண பனையொன்றில் கிடைக்கும் பதநீரின் எடையில் 7% முதல் 8% சீனி தயாரிக்கலாம். இந்தியாவில் கேரளப் பிரதேசத்திலிருக்கும் பனம்பொருள் நிலையத்தைப் போன்று எமது பிரதேசத்திலும் ஒன்று இடம் பெற வேண்டும். இவ்விடயத்தையிட்டு கௌரவ பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் கே. துரைரத்தினம் அவர்கள் பல முறை பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியிருக்கின்றார். இக்கோரிக்கைக்குச் செவி சாய்த்து, அரசாங்கம் உதவி செய்ய முன் வர வேண்டும்.

(4) மீன் வளம்:- இயற்கையன்னை எமக்கு பெரும் செல்வமாகிய மீன வளத்தைக் கொடுத்திருக்கிறாள். 1964ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி இந்திரா காந்தி இன்று
செய்கிறார். பிரதமர் பதவியேற்ற பின
ாகபூத்துக்கு விஜயம் செய்வது இதுவே
பது குறிப்பிடத்தக்கது. திருமதி இந்திரா
தங்கியிருப்பார். இலங்கையின் பல பகுதி
பொது வைபவங்கள் சிலவற்றில் பங்கு
தி இந்திரா இலங்கை இந்திய ஒப்பந்த
லங்கைக்கும் இந்தியாவுக்கும் பொதுவான
யும் இலங்கைப் பிரதமருடன் பேசு
ாரென்றும் தெரிகிறது. திருமதி இந்திரா
பிற்பகல் இந்தியாவுக்கு திரும்புவார்.

ஆண்டு இலங்கையில் மொத்தமாக 1872, 248 அந்தர் மீன்கள் பிடிக்கப்பட்டன. இவற்றில், 1475,549 அந்தர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிடிக்கப்பட்டன. இலங்கையின் மொத்த மீன் பிடி விளைவுகளில் 79 வீதத்தை எமது பிரதேசங்கள் விளைவு செய்து வருகின்றன. காங்கேசன்துறை பருத்தித்துறை வல்வெட்டித்துறை, தொண்டமானறு, மயிலிட்டி, தாழையடி, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், தாளையடி செம்பியன் பற்று, பூநகரி, மன்னார், பேசாலை, அரிப்பு, முல்லைத்தீவு, திருக்கோணமலை, குச்சவெளி, மூதூர், மட்டக்களப்பு கல்முனை, ஏறாவூர், அக்கரைப்பற்று, வாழைச்சேனை, நானத்தன் ஆகியன மீன்பிடிப் பகுதிகளாக விளங்கி வருகின்றன. றன. மீன வளர்த்தலையும் மீன் பிடித்தலையும் விருத்தி செய்ய இங்கு அதிக வாய்ப்புண்டு. இலங்கையின் சுய தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியளவுக்கு இன்று மீன் பிடித்தொழிலில் முன்னேற்றம் இல்லை. ஒவ்வொரு வருடமும் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தகர மீனும், புகையூட்டிய மீனும், கருவாடும் இறக்குமதி செய்யப்படுகின்றன. நவீன முறையில் மீன் வளத்தை விருத்தி செய்தால், பலனாயிரக்கணக்கான வாலிபர்களுக்கு வேலை வாய்ப்புண்டு, அத்தோடு நாட்டின் சுயதேவையையும் பூர்த்தி செய்யும்.

(5) முத்துவளம்:- மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தவு ஆகிய இடங்களிலுள்ள கடலில் முத்துக் குளித் தொழிலை விருத்தி செய்யலாம். யப்பான் நாடு முத்துக்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் ஒவ்வோர் ஆண்டும் நாலுகோடி அமெரிக்க டொலர்களைச் (45 கோடி ரூபாய்) சம்பாதிக்கின்றது.

(6) சங்குவளம்:- மன்னார், தமிளுதிவு ஆகிய இடங்களில் சங்குக்கைத்தொழிலை விருத்தி செய்யலாம். சங்குகளை மூலப்

# ஜீ. ஜீயால் சிதைந்த ஒற்றுமை

# வன்னியரின் தலைமையில் வளர்ந்தது

தமிழினத்தின் சரித்திரத்தில் சோதனை மிகுந்த ஓர் சட்டத்தில், நம்பிய தலைவர் நட்டாற்றில் கைவிட்ட நேரத்தில், தந்தை செல்வாவிற்குப் பக்கபலமாக தோள் கொடுக்க முன் வந்த ஒரே பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வன்னிய சிங்கம் அவர்களே.

தேர்தல்களத்தில் வீழ்ந்திறந்த திரு. தம்பியப்பாவின் இடத்திற்கு வலுக்கட்டாயமாக இழுத்து வந்து நிறுத்தப்பட்டார் அப்போது அரசியலுக்குப் புதியவரான திரு. வன்னியசிங்கம். அவரைத் தமிழினத்துக்காக உழைக்க பாராளுமன்ற உறுப்பினராக்கியது கோப்பாய்த் தொகுதி.



### சுதந்திர இயக்கத்தை தோற்றுவித்தார்

அன்று தொடக்கம் தமது கடைசி மூச்சுவரை கடமையே கண்ணாக உழைத்து வந்தார். அவர் எம்மைவிட்டுப் பிரியும் வரை தமிழரசுக் கட்சியின் சரித்திரத்தையும் அமரர் வன்னியசிங்கத்தின் சரித்திரத்தையும் பிரிக்கமுடியாது.

அவருடைய அரசியல்வாழ்வு டன்னிரண்டாண்டுகளே யானலும் இச் சிறு காலத்தில் தடுமாறிய தலைவரைத் தட்டி வீழ்த்தி, தமிழினத்திற்கு ஓர் சுதந்திர இயக்கத்தைத்தோற்றுவித்து, மக்கள் ஏற்க மறுத்த நேரத்திலும் அதை விடாப்பிடியாகக் காத்து வளர்த்து, தமிழினத்தின் ஒரே இயக்கமாகத் தமிழரசுக் கட்சி பீடு நடைபோட்டு போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் அவர் அமரரானார்.

திரு. பொன்னம்பலம் செய்த எந்தத்துரோகத்திற்கு எதிராக தந்தை செல்வநாயகமும் அமரர் வன்னியசிங்கமும் போர்க்கொடி தூக்கினரோ அதே துரோகத்தை தந்தையும் தமிழரசுக்கட்சியும் இன்று செய்கின்றனர் என்று திரு. சிறுகுப்பலும் திரு. பொன்னம்பலமும் விபரீதப் பிரசாரம் செய்கின்றனர்.

### வன்னியர் எதிர்த்தார் ஜீ. ஜீ. ஆதரித்தார்

அன்று திரு. வன்னியசிங்கம் எதிர்த்த சட்டத்தை மலைநாட்டுத் தமிழ் மக்கள் முழுப்பேரும் எதிர்த்தனர். இந்திய அரசாங்கமும் எதிர்த்தது. அந்தச் சட்டத்தினல் வாக்குரிமை குடியுரிமை பெற்றிருந்த 10லட்சம் தமிழர் நாடற்றவர் ஆக்கப்பட்டனர். பாராளுமன்றத்திலிருந்த எட்டு தமிழ் பிரதிநிதிகளைத் திரும்பிவராமல் செய்தது அச் சட்டம்.

துரோகியானர் திரு பொன்னம்பலம். அவரைச் சாடினர் அமரர் வன்னியசிங்கம்.

### இன்று வேறு அன்று வேறு

ஆனல் இன்று வந்திருக்கும் சட்டத்தின் பெறுபேறுவேறு. மலைநாட்டுத் தமிழ் மக்களின் நிறுவனங்கள் அத்தனையும் ஆதரிக்கின்றன இச் சட்டத்தை இந்தியஅரசாங்கமும் ஆதரிக்கிறது.

நாடற்றவர் களாக்கப்பட்ட தமிழ் மக்களில் ஒரு பகுதியினராவது இலங்கைக் குடியுரிமை, வாக்குரிமை பெறும் வாய்ப்பைக் கொடுக்கிறது இச்சட்டம்.

முந்திய சட்டத்தினல் பாராளுமன்றத்தில் இடம் பெறாது செய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகள் சிலராவது மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்கு வழி வகுக்கிறது இச்சட்டம்.

முந்திய சட்டத்தை தந்தையும் அமரர் வன்னியசிங்கமும் எதிர்த்த அதே அடிப்படையில் நின்றே தந்தையும் தமிழரசுக் கட்சியும் இன்றைய சட்டத்தை ஆதரிக்கின்றனர்.

அன்று எதிர்த்த சட்டமும் அதன் விளைவும் வேறு. இன்று ஆதரித்த சட்டமும் அதன் விளைவும் வேறு.

## அ. அமிர்தலிங்கம் பா.உ.

அதையே எதிர்த்தார் அமரர் வன்னியசிங்கம். அதனுல் தமிழினத்தின் ஒற்றுமையைக் காத்தார். அச்சட்டத்தையே ஆதரித்தார் திரு. பொன்னம்பலம். அதனல் தமிழினத்தின் ஒற்றுமையைச் சிதைத்தார்.

இன ஒற்றுமையைக் கெடுத்து, தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் அனுபவித்து வந்த உரிமைகளையும் பிரதிநிதித்துவத்தையும்பறித்த சட்டத்தை ஆதரித்து

### வன்னியர் இன்று இல்லையே!

இவையிரண்டையும் ஒன்றுக்க் குழைக்கும் திரு. பொன்னம்பலத்தின் குதர்க்கத்திற்கும், காலஞ்சென்ற டீ. எஸ். சேனநாயகாவிற்கு இந்தியத்துவேஷப் பாதையில் வழிகாட்டியாக விளங்கிய திரு. சுந்தரலிங்கத்திடம் தஞ்சம் புகுந்திருக்கும் விபரீதக் கும்பலுக்கும் சாட்டையடி கொடுக்க அமரர் வன்னியசிங்கம் இன்றில்லையே என்றேங்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

### சாதனையில் காட்டினர்

சாதிக்கு ஆதாரமாகச் சாத்திரங்களைக்காட்டும் சழக்கர்களை இன்றும் காண்கிறோம் யாழ்ப்பாணத்தில்.

தமிழையும் சைவசித்தாந்தத்தையும் கற்றுத் துறைபோகிய அமரர் இன்றிருந்தால் சைவத்திலோ தமிழர் சமுதாயத்திலோ சாதிக்கு இடமில்லை என்று சாத்திர பூர்வமாக நிலை நாட்டுவார் என்பதில் ஐயமில்லை.

இருபது ஆண்டுகளுக்கு முன்பே சமபந்திபோசனத்தை சாதனையில் காட்டிய திரு. வன்னியசிங்கம் இன்றிருந்தால் தீண்டாமைப் பேயை விரட்டும் படைக்குத் தலைமை தாங்கி வெற்றியும் பெற்றிருப்பாரென்பது திண்ணம்.

### வீரத்தாய்

அவர் தமிழர்வாழ்வுக்காகத் தமை அர்ப்பணிக்க மதி மந்திரியாக இருந்து உதவிய திருமதி. வன்னியசிங்கம் அவர்களைத் தமிழ் இனம் என்றுமே மறக்க முடியாது.

திரு. பொன்னம்பலத்தோடு சேர்ந்த பாவத்தினுல் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்காது விடு திரும்பிய தம் கணவரை மனச் சாட்சியின்படி நடக்க முடியாவிட்டால்பதவியை ராஜிநாமாச் செய்து விடுங்கள். என்று கூறியவீரத்தாயைத் தமிழ் இனம்என்றும் போற்றக் கடமைப்பட்டது.

அமரர் வழி நின்று சாதியைச் சாடி, தமிழர் நாட்டில் தமிழர் ஆட்சியை ஏற்படுத்தி, ஓர் சமஷ்டி அரசியல் அமைப்பு ஏற்படும் வரை இடையருது உழைப்பதே அன்னருக்கு நாம் செயயக் கூடிய கைமாருகும்.

வாழ்க தமிழரசு! வாழ்க வன்னியர் நாமம்!!

## நம்பூதிரிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விஸ்டுகளும் நம்பூதிரிபாடைத் தாக்கத் தொடங்கி விட்டார்கள்.

வங்காளத்திலுள்ள சீனச் சார்புக் கட்சியும் இரண்டாகப் பிளந்துவிட்டதாக மற்ருெரு செய்தி கூறுகிறது. எல்லா ராஜ்யங்களிலும் சீனச்சார்பு கட்சியில் பெரும் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

பொருளாகக் கொண்டு ஆபரணங்கள் செய்து வெளிநாட்டு நாணயங்களைச் சம்பாதிக்கலாம்.

(7) மண்வளம்:- குறைவான மழைவீழ்ச்சியைப் பெறுவதாலும், அதிக வெப்ப நிலையைக் கொண்டிருப்பதாலும், எமது பிரதேசங்கள் உலர் வலயமாக அமைந்துள்ளன. இதனுல் வரண்ட பிரதேசங்கள் என்றழைப்பதுண்டு. எமது பிரதேசங்கள் சமவெளித் தன்மையால், மொத்த நிலப்பரப்பில் முக்கால்பகுதிக்கு மேல் சாகுபடி பண்ணக் கூடியதாக இருக்கின்றது.

(தொடரும்)

## பிறப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் தமிழிலும், ஏனைய மாகாணங்களில் சிங்களத்திலும் ஏற்கனவே நடைபெற்று வருவதாக அறியப்படுகிறது.

அரசகரும மொழித் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதன் முதலாக ஒரு சுற்று நிருபம சென்ற வாரம் விடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது 117வது எண் சுற்று நிருபமாகும். 1 முதல் 116 எண் வரை விடுக்கப்பட்ட சுற்று நிருபங்கள் அனைத்தும் தனிச் சிங்களத்திலேயே எழுதப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிருப்தி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றத் தொகுதிகளில் வசிக்கும் நாடற்ற மக்களுக்கே இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படுமென்பதும் கொழும்பு போன்ற நகரங்களில் குறிப்பாகத் தாழ்ந்த பிரதேசங்களில் வசிக்கும் நாடற்ற மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படமாட்டாதென்பதுமே இந்த ஷரத்தின்

## மயிலிட்டி மீனவர் பிரச்சினை தீரும்

குருநகர் மீனவர்கள் மயிலிட்டி மீனவர்களுக்கு தொல்லை கொடுப்பதாகவும், மயிலிட்டியில் வந்து மீன்பிடிப்பதாகவும் மயிலிட்டி மீனவர்கள் செய்த புகாரைத் தொடர்ந்து, அது பற்றி விசாரணை நடத்த யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் மீன்பிடித்திணைக்களமும் முன்வந்துள்ளதாக அறியப்படுகிறது.

திரு. செல்வநாயகம் உதவி மீன்பிடி அமைச்சருக்கு இது பற்றி கடிதம் எழுதினுரென்று தெரிகிறது.

திரு. செல்வநாயகத்துக்கு உதவி மீன்பிடி அமைச்சர் அளித்த பதிலில் இவ்விஷயம் பற்றி உடனடியாக விசாரணை நடத்த தாம் யாழ் அரசாங்க அதிபருக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள மீன்பிடித் திணைக்களத்துக்கும் உத்தரவிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளாரென்று தெரிகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறுகதை

# “இதுக்கெல்லாம் ஐயா சரியில்லை”

பேனாக்கூரை அப்படியேமேசையில் குத்தி முறித்துவிட்டு... ...அறைக்குள் கிடந்த தளபாடங்களையெல்லாம் அடித்துடைத்து நொறுக்கித் தள்ளிவிட்டு வெளியில் பாய்ந்தோடிப்போய்...கண்ணில் எதிர்ப்படும் வாகனங்களில் அடிபட்டுச் செத்துவிடவேண்டும்போல்... ...பொல்லாத மன விசர் விசராகக் குமுறிக்கொண்டிருந்தது...இந்த மூன்று... ...நான்கு மணித்தியாலங்களும் சும்மா வீணாகக் கதிரைக்குப் பாரமாகஇருந்தது தான் மிச்சம்...இன்னுந்தான என் மூளையில் ஒரு சிறுகதைக்குத் தேவையான நல்ல 'கரு'க்கூடத் துண்டாகத் தட்டுப்படவில்லையே...

வள்...வள்...வள்...வள்... ...எங்கள்வீட்டு நன்றியுள்ள காவற்காரி வள்ளி குரல் வைக்கும் சத்தம் என் செவிகளில் பட்டு நெருப்பிற்குள் நெய்யை ஊற்றுவதுபோலிருக்கின்றது...நான்கு ஐந்து சத்தத்தோடு வள்ளியும் தனது கடமையை முடித்துக்கொள்கிறாள்...அப்படியானால்...ஆராவது பழக்கமானவர்கள்தான் வளவிற்குள் வந்துகொண்டிருப்பதாக அர்த்தம்.

......'ஓ...இனிக் கதையும் கத்தரிக்காயும் தான்...சிவபூசையில் கரடி புகுந்தால் என் மாதிரியிருக்கும்......'?

'ஓ...எப்பிடி...என்ன... ...எல்லாரும் நல்ல சௌக்கியந்தானே...'?

'ஓ...நல்ல...சௌவுக்கியந்தான்...அது...சரீ...இவளவு நாளும் நீங்களெங்கை போயிருந்தனீங்கள்...'?

'...சும்மா தெரியாதே...'

'நானே...தோ...நீங்கள்... ...சிங்கப்பூருக்கோ...லண்டனுக்கோ...போட்டியளாகுமெண்டு நினைச்சன்...வாறன் இருங்கோ...பூதனிட்டைப் போய்க்கள்ளு வாங்கிக் கொண்டு...'

...இனிக் கதையெழுதிக் கிழிச்ச மாதிரித்தானிருக்கும்...அறைக்குள் நின்று என் தொண்டை அடைக்கும் வரைக்கும் பெரிய சத்தத்தில் குழறிக் கத்த வேண்டும்போல் மனவேகமாயிருந்தது.

'இந்தாருங்கோ...கள்ளோடை குடிக்க கருவாடு சுட்டுத்தாறன்...'

'எங்கை...என்ரை பெருமோனைக் காணேலை...எங்கைபோட்டார்...'?

'அவருங்கை தான்... ...அறேக்கையிருந்து கிளாக் வேலை பாக்கிறார்...'

'...என்னெனக்கு விளங்கேலை...'?

'தெரியாதே...வரிசம் முன்னூற்றறுவத்தைஞ்சு நாளும் கதை கதையெண்டு சாகிறதுதானே வேலை.'

'ஓ...சரியான...கதைப் பயித்தியந்தான்...'

...ஓ...சரியாய்ச் சொன்னார் மனுசன்...எனக்குக் கதைப் பயித்தியம் அது உண்மைதான்...அவருக்குக் காமப் பயித்தியம்...அதுவும் உண்மைதான்...ஏதோ சத்தம் கேட்டு நான் ஜன்னலுக்கு வெளியில் எட்டிப் பார்க்கின்றேன். அங்கே... ...நான் சொன்னதை முழுமனதோடும் ஆமோதித்து விடுவதுபோல் பக்கத்து வீட்டு நன்றியுள்ள காவற்காரன் வீமன் எங்கள் வீட்டுக் காவற்காரி வள்ளியோடு வாலை யாட்டி யாட்டிக் கொஞ்சிக் குலாவும் காட்சியைக் காணுகின்றேன்...

...''என்ன மாமீ...கனகசபைக் குஞ்சியப்பூ...எந்த நாளும் பார்வதிக் குஞ்சியாச்சி வீட்டை போய்ப் போய் வாறார்...''?

'எதுக்கும் தங்கச்சி... பொம்பிளையளிலையல் லோ காரியம் தங்கியிருக்குது... சேறுகண்ட இடத்திலை உழக்கி... தண்ணீர் கண்ட இடத்திலை கழுவுற ஆக்கள் தானே ஆம்பிளையள்...'

இப்படியெல்லாம்...ஒரு நாள் நான் போய் நின்றதைக் கூடக் கவனிக்காமல் எங்கள் வீட்டுக் கதையைப் பேசிக்கொண்டிருந்த ரேவதி மாமியும்...மருமகளும்...என்னைப் பார்த்து விட்ட திகைப்பில் கதையை மாற்றிக்கொள்ள முடியாமல் ஏதேதோ வெல்லாம் உளறிக் கொட்டியதையெல்லாம் பார்த்த படத்தை மீண்டும் பார்ப்பது போல் எனது நினைவுத் திரையில் பார்த்துவிடுகின்றேன்......

அதே வேகத்தில் என் மூளையென்ற வயிறுநொந்து... எத்தனையோ 'கரு'க்களெல்லாம் ஒரே தடவையில் பிரசவமாகும் பல குழந்தைகளாகப் பிரசவமாகி... பிறந்த வீட்டிற்குள்ளேயே இறந்துவிடும் குழந்தைகளாகிவிடுகின்றன.

......அறைக் கதவைக் காலால் உதைந்து தள்ளி விழுத்திவிட்டு...அதே வீச்சாக ஓடிப்போய் வந்திருப்பவரின் கன்னத்தில் மளார் மளாரென்று மின்னிவிட்டு கழுத்துப் பிடியோடு ஆளைப் பிடித்துக் கொண்டுபோய் படலைக்கு வெளியில் ஏழுகறணப்பட விழுந்து துலையக் கூடியதாகத் தள்ளிவிட்டு வரவேண்டும் போல்...நான் எனது நினைவில் விசுவரூபமெடுத்துக் கொண்டிருந்தேன்......

'என்ன பார்வதி...தம்பி... இண்டைக்கி இரவைக்கி எங்கையாலும் போறானே...'?

'ஓ...படத்துக்கோ ... எங்கையோ...போகவேணுமெண்டுதான்...'

அப்ப அதையொருக்கா... வடிவாகக் கேட்டுப்பார்......

'.................'?

'என்னடா தம்பி...நீ இராவைக்கி படத்துக்குப் போறாய்தானே...'?

'ஓ...போகலாமெண்டு தான் பாக்கிறன்...பஞ்சியாயும் கிடக்குது...?

'என்னடா...! என்னடா...?'

'என்னவாம்...என்னவாம்...இளந்தாரிப் பிள்ளைக்கி என்ன பஞ்சியாம்... என்ன தலை முழுக்கு வாறகணக்கோ...' இப்படித் துடிக்கப் பதைக்கக் கேட்டபடி...கனகசபைக் குஞ்சியப்பர்...நான் படத்துக்குப் போகாவிட்டால்...நான் செத்தே போய்விடுவேனென்று பெரிய அந்தரத்தோடு சொல்லாமற் சொல்லும் நிலையோடு என் அறைக்குள்ளேயே வந்துவிடுகின்றார்.......

'உன்ரையிந்த வயதிலை நாங்களெத்தினை ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினனுங்கள்......

இளந்தாரிப் பிள்ளையளின்ரை வாயிலை பஞ்சியெண்டசொல்லே வரக்கூடாதுஎன்ன படமாம்......?

'திருவிளையாடல்...'

'ஓ... திருவிளையாடல்...... பேந்தென்ன ... நல்ல ...... சோக்கான படம்...சிவாசியும்...சாவித்திரியும் சிவன்.. பார்வதியாக ... நல்லாய் நடிக்கினம்...நீயொருபெரிய எழுத்தாளன் ... உந்தப் படம் பாக்காட்டிக்கிப் பேந்தென்ன...இந்தா தம்பீ...... காசு......'

.........என்னைப் பெரிய எழுத்தாளனென்று அவர் சொன்னதும்... நான் எல்லாவற்றையும் மறந்து அதி உயரமான கோபுரத்தின் மேல் ஏறி நிற்பது போன்ற நினைவுப் பெருமையோடு யாரோ... எனக்குப் பக்கத்திலிருந்து எனக்கு ஊக்கமளித்து என்னைத் தட்டிக் கொடுப்பது போன்ற உணர்வுப் பெருக்கோடு...மீண்டும் என் மூளைக்கி நொந்தவேலை கொடுக்கிறேன்.......

'உங்கடையவர் இப்ப வந்து போய் ... எத்தினை நாளிருக்கும்...?

'எனக்குமொரு 'அவர்' இருக்கிறாரே...'?

,.............?'

'அவர் வரிசத்திலை ஒரு நாளைக்கி கரடி பிறை கண்ட கணக்காக வருவார். வாறதும் தெரியாது... போறதும் தெரியாது...... வீடுவாசல்...பெண்டில் பிள்ளையெண்ட எண்ணமே அவரிலை மருந்துக்குமில்லை...... ஏனுங்களுக்குத் தானே... எல்லாந்தெரியும்...குடும்பத்திலை ஏன் போனனெண்டு இப்பதான் யோசிக்கிறன்...'

'உப்பிடிப்பட்டவருக்கு பெண்டிலென்னத்துக்கு... பிள்ளையென்னத்துக்கு...

...இதுக் கெல்லாம்கொய்யா... சரியில்லை... இதுக்கெல்லாம் கொய்யா சரியில்லை... ஐயாவின் தம்பி... என் நினைவில் பேசுகிறார்....

......உங்கடை வீட்டை கனகர்...வாறவரே...?'

'...ஓம்—குஞ்சியப்பூ...?

'...கொம்மாவைக் கொஞ்சம் ... திருத்திக் கொள்ளடா தம்பி... 'உவளாலை'...

'என்ன குஞ்சியப்பூ...?'

'தம்பீ...நீ...வயது வந்த பிள்ளை ... உனக்கு நான் சொல்லித்தான் தெரியவெணுமெண்டில்லை...இதை நீ...வடிவாய் யோசிச்சுப் பார்... கனகர் நித்தமும் உங்கடை வீட்டை வந்து வந்து போறார்...அவரேன்.. வாறார்...? என்ன—உருக்கத்திலை வாறார்...? அப்பப்பா உங்கை ஊரிலை...எல்லாரும் எவ்வளவோ எல்லாம் பேசித் தள்ளினம் நாலு ஆமான மனிசற்றை முன்னாலை கூடி போக முடியாமல் ... எங்கடை மானம் மரியாதையெல்லாம் காத்தோடை பறக்குது ... அண்ணர்...போன பயணம்வந்து நிக்கேக்கை நானும் சாடைமாடையாய்ச் சொன்னனான் ... அண்ணருக்கு நான் சொன்னதெல்லாம் புறக்குடத்திலை ஊத்தின தண்ணீர்தான்... கொய்யாதான் அப்பிடி... நீயென்டாலும் ஒரு ஆண்பிள்ளைதானே...... பிழையான பாதையிலே போற கொம்மாவைத் திருத்த உனக்கு எவளவோ உரிமையிருக்குது...நீயொரு ஆண்பிள்ளை...நினைச்சால்... ஐஞ்சிலை வளையாதது கூட ஐம்பதில் வளையும்............ இதுக்கெல்லாம் கொய்யா சரியில்லை ...அவ்வளவுதான் என்னாலை சுருக்கமாய்ச் சொல்லக்கூடியது......

......குஞ்சியப்பு சொன்ன மாதிரி அம்மாவை ... நான் திருத்துவதா...? முடியுமா? ஒருதாயோடு... மகன்...எப்படி...இதை வெட்கமில்லாமல் கதைப்பது.........ஏன் முடியாது...? தவறான வழியில் போன தனது தாயாரை பரசுராமர் வெட்டிக் கொல்லவில்லையா...

சரியாய் ஏழு மணிக்கு நான் வருவன்...அப்ப நான் வாறன்...'

''சரிவாருங்கோ...மறந்து போவிடாமல் வந்திருங்கோ...

......... '' இதுக்கெல்லாம் கொய்யா சரியில்லை...இதுக்கெலலாம் கொய்யா சரியில்லை......குஞ்சியப்பு என் மூளைக்குள் நின்று பயங்கரமாகச் கத்துவது போன்ற பிரமை வேகம்......குடும்பத்தில் ஒரு பெண் கெட்டுப் போய்விடுகின்றாளென்றால் இதற்கெல்லாம் காரணகர்த்தா... யார்? யார்?? யார்???

''இதுக்கெல்லாம் கொய்யா சரியில்லை...' இதற்கெல் ஒரு கணவன்தான் காரணகர்த்தாவா?

...அப்படியானால் அம்மா கெட்டுப்போவதற்கும் ஐயா தான் காரணகர்த்தா......

என்மூளையென்ற வயிறு நொந்து.........'கரு'வென்ற குழந்தை பிரசவமாகி கற்பனைத் தொட்டிலில் ஆடி ஆடி மின்னல் வேகத்தில் வளர வளர...சொல்ல முடியாத மகிழ்ச்சிக் குதிப்போடு ''இதுக்கெலலாம் ஐயா சரியில்லை' என்ற கதைத் தலைப்பை எழுதவும் ... கதவைத்திறந்து கொண்டு ஒரு கோப்பை தேநீரோடு அறைக்குள் வந்த அம்மா... நான் எழுதிய கதைத்தலைப்பை வாசிப்பதற்கும் சரியாகவிருந்தது...............

அம்மாவின் முகத்திரையில் பிரளயகாலக்காட்சிகள் பயங்கரமாக நடைபெறுகின்றன.

ஐயோ தம்பீ... நீயின்டைக்கிப் படத்துக்குப் போகவேண்டாமடா......... படத்துக்குப்போக வேண்டாம்...என்ரை ராசா ... நீ படத்துக்குப் போகவேண்டாம்... போகவேண்டாம்'

......நான் நடுங்கிப் பதறியபடி ஜன்னலுக்கூடாக வெளியில் எட்டிப்பார்க்கின்றேன்.... எங்கள் வீட்டுக்காரி வள்ளி...... பக்கத்து வீட்டுக்காவற்காரன்வீமனை ஓட...ஓட வேலிப்பொட்டு வரை குரைத்து ... உறுமி விரட்டிக் கொண்டு ஆவசத்தோடு முன்னேறும் காட்சியைப்பார்க்கின்றேன் ......

என் கண்களிலிருந்து பொலபொலவென்றுகொட்டிச் சரிந்த கண்ணீர்த் துளிகளின் வலிமையில் கதையின் தலைப்பு உருக்குலைந்து விடுகின்றது.

(யாவும் கற்பனை)

கைதடிட்டி அ. இராசதுரை

## காரை நகருக்கு விஞ்ஞான கூடம்

''இன்று நாம் ஒரு விஞ்ஞானக் யுகத்தில் வாழ்கின்றோம். வருங்கால மக்கள் விஞ்ஞானத்தையே நம்பி வாழவேண்டிய நிலை ஏற்பட்டுவருகிறது. விஞ்ஞானமே ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலப் பொருளாதாரத்தைச் சிருட்டிக்கும் பெரும் பொறுப்பு வருங்கால இளைஞர்களில் கையிலேயே இருக்கிறது. எனவே இவ்விளைஞர்களுக்கு விஞ்ஞானக் கல்வி ஊட்டப்படவேண்டியது மிக அவசியம். இக்கால மாணவர்களுக்கு உயர்தர விஞ்ஞானக் கல்வியைப் புகட்டுவதற்கு முதல்தரக் கல்லூரிகளில் சிறந்த விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்படல் வேண்டும்.''

இவ்வாறு காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் திரு.அ. தியாகராசா வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற காரைநகர் இந்துக் கல்லூரி விஞ்ஞான ஆய்வுகூட கட்டிட நிதி ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், காரைநகரிலிருக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு உயர்தர விஞ்ஞானக் கல்வி புகட்டுவதற்குகாரைநகர் இந்துக் கல்லூரியில் ஒரு விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்பட வேண்டியது மிக அவசியமெனவும், அதற்கு அரசாங்கத்தின் உதவியை எதிர்பாராது. பொதுமக்கள் தங்கள் பணத்தால்இதை அமைத்துக்கொள்ள முன்வர வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

விஞ்ஞான ஆய்வுகூட கட்டிட நிதி திரட்டுவதற்கென கொழும்பில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா, அண்ணா, என்று அன்புடனும் பாசத்துடனும் உலகெங்கும் வாழும் 4 கோடி தமிழர்களாலும் அழைக்கப்படும் தமிழகத்தின் முதலமைச்சரும், தி. மு. க. பொதுச் செயலாளருமான அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்களின் 59-வது பிறந்த தின விழா செப்டம்பர் 15 ந் திகதி தொடக்கம் ஒரு வார காலத்திற்கு தமிழகம் எங்கும் கொண்டாடப்படுகிறது. தமிழ் மக்களிடையே, மொழி, அரசியல், கலை, பண்பாடு, இலக்கியம் போன்ற சகல துறைகளிலும் புதுமையையும், புரட்சியையும், எழுச்சியையும் புகுத்தி ஒரு புதிய சகாப்தத்தையே ஏற்படுத்தியவர் அறிஞர் அண்ணா. இன்று, தமிழகத் தமிழர்களுக்கு மட்டுமல்லாது உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக, முன்னோடியாக திகழுகிறார் அறிஞர் அண்ணா. அண்ணாவின் வாழ்வில் நடந்த சில சுவையான சம்பவங்களை இங்கு திரட்டித் தந்துள்ளோம்.

# இன்று பகுத்தறிவாளர்- அன்று கடவுள் பக்தர்

## அறிஞர் அண்ணா வாழ்வில் சில சுவையான சம்பவங்கள்

**1909**ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் நாள் (தமிழ் ஆண்டு சௌமிய ஆண்டு ஆவணித் திங்கள் 30ம் நாள்) அண்ணா பிறந்தார்.

மிக எளிய குடும்பத்தில் திருவாளர் நடராஜன் திருமதி பங்காரு அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

அண்ணாவின் பெற்றோர்களும் வளர்ப்புத்தாயாகவும்—தாயைவிட அதிக அக்கரையுடன் அண்ணாவின் நலத்தில் நாட்டங்கொண்டவருமான, அண்ணாவின் சிறியதாயாரான தொத்தாவும், தெய்வபக்தியும், மத நம்பிக்கை ஆர்வமும் கொண்டவர்கள்.

இன்று பகுத்தறிவு இயக்கத்தின் தனிப்பெரும் சுடராய் ஒளிவிடுகின்ற அண்ணா இளமைப் பருவத்தில் ஆலய வழிபாட்டைத் தவறவிடாத இளைஞராகத்தான் திகழ்ந்து வந்தார்.

ஆலய வழிபாட்டில் தவறாத அண்ணா அதிலும் ஒரு புதுமையைக் கையாண்டார். எந்தக்கோயில் கூட்டம் அதிகம் இருக்குமோ அங்கு செல்லாமல் கூட்டம் குறைவாக உள்ள கோயிலுக்குச் சென்று வழிபடுவார்.

அண்ணா தம் ஆரம்பக் கல்வியை அருகிலுள்ள பச்சையப்பன் ஆரம்பப் பள்ளியில் துவங்கினார். அது முதல் தம் உயர்தரப்பள்ளிப்படிப்பு முடியும் வரையில் அங்கேயே படித்தார்.

இன்று தமிழகத்தின் தலைசிறந்த முதல்வராகத்திகழ்வது போலவே அன்றும் பச்சையப்பன் பள்ளிவகுப்பு மாணாக்கர்களில் முதல்வராகவே விளங்கினார். பள்ளிக்குச் செல்லும் போதெல்லாம் மாட்டு வண்டியிலேயே செல்வார். அதிலும் ஒரு பெருமை என்னவென்றால் இன்றைய காங்கிரசின் தேர்தல் சின்னமாக விளங்குகிற மாடுகளின் மூக்கணாங்கயிற்றைத் தன்கையில் வைத்திருப்பதுபோல, இளம் பருவத்தில் வண்டியில் பூட்டப்பட்டிருக்கும் மாடுகளின மூக்கணாங்கயிற்றைப் பிடித்திழுத்து தானே ஓட்டிக் கொண்டு செல்வார்.

### அண்ணாவின் விளையாட்டுக்கள்

இளமையில் திரா தவிளையாட்டுப்பிள்ளையாகத்தான் அண்ணா விளங்கினார். கேரம் விளையாடுவதில் அண்ணாவுக்கு அளவு கடந்த ஆனந்தம், ஓய்வு கிடைக்கின்ற நேரங்களில் எல்லாம் தன் நண்பர்களுடன் கேரம் விளையாடுவார். சீட்டாடுவதும் அண்ணாவின் பொழுது போக்கு. மணிக்கணக்கில் உட்கார்ந்துகொண்டு நண்பர்களுடன் உரையாடுவதிலும் ஒரு வகைப் பேரின்பத்தைக் கண்டார்.

அண்ணாவின் பொழுது போக்குகளைக் கவனிக்கிற போது அவைகள் ஒவ்வொன்றும் நண்பர்களின் கூட்டலியாகவே இருப்பதைக் காணலாம். தான் மகிழ்வதோடல்லாமல் தன்னோடு இருப்பவர்களையும் மகிழ்விப்பவராகவே திகழ்ந்தார். அண்ணாவின் இருவாய் மொழிகளைக் கேட்டு மகிழ்வதிலே அவரது நண்பர்களுக்கு மட்டிலா மகிழ்ச்சி இருந்திருக்க வேண்டும்.

### தேர்வுக்குத் தேவை பொடி

பள்ளிப்படிப்பு படிப்படியாக வளர்ந்து முடியும் கட்டத்தை நெருங்கியது. இறுதி வகுப்புக்கு வந்து விட்டார் அண்ணா. இறுதிவகுப்பு தேர்வு எழுதிக் கொண்டிருந்த சமயம் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

இன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரைச்சூழ்ந்து நின்று வாய் பிளந்தபடி அண்ணாவின் அழகு தமிழ்ப்பேச்சைக்கேட்டு கண்ணிமைமூடாமல் உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கிற சமயத்திலும் அனைவரும் கவனியாமல் ஒரு சிமிட்டா மூக்குப் பொடியை எடுத்து நாசுக்காகப் போட்டுக்கொள்வதுண்டல்லவா? இதேமுறையை அன்று பள்ளியில் இறுதிதேர்வு எழுதுகிற போதும் அண்ணா கையாண்டிருக்கிறார்.

பையினுள் கைவிட்டுபொடி மட்டையை எடுத்து ஒரு கையால் முகத்தை மறைத்துக் கொண்டு மற்றொரு கையை முகத்தருகில் கொண்டுசெல்வதைப் பார்த்து விட்டார் ஒரு ஆசிரியர். செய்யக் கூடாத குற்றம் செய்து விட்டவரைக்கண்டு பிடித்து விட்டவரைப்போல் நினைத்துப்பெருமைப்பட்டு அண்ணா மற்றவர்கள் எழுதுவதைப்பார்த்து எழுதுவதாக குற்றம்சாட்டினார்.

ஆசிரியரின் குற்றச்சாட்டை கேட்டு அண்ணா புன்னகை புரிந்தார். மெதுவாகத்தன் பையில்கையைவிட்டு பொடி மட்டையை எடுத்துக்காட்டினார். தேர்வைத் திறம்பட எழுத வேண்டுமானால் இது தேவைப்படுகிறது. ஆகவே இது பற்றியாரிடமும் சொல்லாதீர்கள் என நயம்பட வேண்டிக் கொண்டார்.

### பெரியாரை நாடிய பெரியார்

அண்ணாவின் உயர் நிலைப் படிப்பு முடியப்போகும் காலத்தில்தான், தமிழ் நாட்டின் தலைவிதியை மாற்றிய மைக்க சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்ததலைவர், வெண்தாடி வேந்தர் பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் சுயமரியாதைக் கருத்துக்கள் நாட்டில் மழைபோல் பொழிந்து கொண்டிருந்தன.

பெரியாரின் பிரசாரத்தில் அண்ணாவும் நாட்டம் கொண்டார். தந்தை பெரியாரிடம் ஒரு தனியான பற்றும், பாசமும் அண்ணாவின் உள்ளத்தில் குடிபுகுந்து கொண்டது.

அண்ணாவின் அறிவுத்திறன் சிந்தனைச்சுடரொளி பேச்சு வன்மை எழுத்தாற்றல் ஆகியவைகள் கல்லூரியில் அண்ணா காலடி வைத்தபின்னர்தான் சுடர் விட்டுப் பிரகாசித்தது. சென்னை நகரத்தில் சைனா பஜாரில் தற்பொழுது இருக்கும் பச்சையப்பன் உயர்நிலை பள்ளி முன்பு பச்சையப்பன் கல்லூரியாக விளங்கிற்று. அந்தக்கல்லூரியில் தான் அண்ணா கல்லூரிப்படிப்பை மேற்கொண்டார்.

### அண்ணி வந்தார்

கல்லூரியில்படிக்கும்போதே 1930ம் ஆண்டில் அண்ணா அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்து தங்கள் கண்களைக் குளிரவைத்துக் கொண்டனர். அவரது குடும்பத்தினரும் உறவினரும் தமிழகம் போற்றுகின்ற தவப் புதல்வராகிய அண்ணாவுக்கு அவரின் குணப்பண்பு அறிந்து நடந்து கொள்கிற குணவதியாக பெண்ணின் பெருமையை விளக்குகிற பெட்டகமாக குடும்பவிளக்காக அமைந்த வாழ்க்கைத் துணைவியாரின் பெயர் இராணி என்பதாகும்.



இராணி என்பது பெயரளவில் நின்று விடவில்லை. அண்ணாவின் குடும்பத்தில் அவர் இராணியாகத்தான் விளங்கினார். இராணி என்ற பெயர் காலப் போக்கில் குறைந்து அண்ணாவின் ஆயிரமாயிரம் தம்பிமார்களால் அண்ணி என்றழைக்கப்படலாயிற்று.

பிறந்த பொன்னாட்டிற்கும் பெற்ற தாய்மொழியாம் நற்றமிழுக்கும் ஓயாத் தொண்டாற்றக் கிளம்பிய அண்ணா அவர்களுக்கு குடும்ப நிர்வாகத்தைக்கவனிக்க நினைப்போ நேரமோ ஏது?

வாழ்க்கைத்துணைவியாரிடம் குடும்பப் பொறுப்பு முழுவதையும் ஒப்படைத்தார் அண்ணா.

### [illegible]

ஓய்வு நேரங்களில் நூல் நிலையங்களுக்குச் சென்று புத்தகங்களில் மூழ்கிகிடப்பது அண்ணாவின் அன்றாடப்பழக்கம். பல நூல் நிலையங்களை நாடிச் சென்றார். அவற்றில் அந்தக்காலத்தில் பண்டிட் ஆனந்தம் அவர்கள் தங்கசாலை வீதிகளில் நடத்திவந்த நூலகமும் ஒன்றாகும். மற்றும் பல்கலைக்கழக நூலகத்திற்கும் அண்ணா அடிக்கடி செல்வதுண்டு. அண்ணாவின் ஆற்றல் மிக்க சொல்வன்மையும் எழுத்தாற்றலும். கல்லூரியிலேயே ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கின. கல்லூரியில் நடைபெறும் விவாதங்களில் கலந்து கொண்டுவந்தார்.

விவாதம் விவேகத்தை வளர்க்கும் என்பது அண்ணாவின் கொள்கைகளில் ஒன்று. பொதுச்சிக்கல்கள் பற்றி நடக்கும் விவாதங்களில் அண்ணா அவர்களைத் தவறாது காணலாம். விஷயம் தமிழில் நிகழ்ந்தாலும் ஆங்கிலத்தில் நிகழ்ந்தாலும் அண்ணா அங்கு அவசியம் காணப்படுவார்.

அண்ணா கல்லூரியில் படிக்கின்றபோது அவர் கலந்து கொள்ளாத விவாத அரங்கு பச்சையப்பன் கல்லூரியில் நடந்ததே இல்லை எனக் கூறலாம் என்று அண்ணாவின் நண்பர் ஒருவர் குறிப்பிட்டார். முக்கியமாக ஓய். எம். சி ஏ. பேச்சு அரங்கில் அறிவியல் துறையில் பங்கு கொண்டு அண்ணா ஆற்றிய சொற்பொழிவுகள் மன்றத்தினரைப் பெரிதும் கவர்ந்தனர்.

சொற்பொழிவு மேடையில் ஒருவிந சோபிதத்தைப் புகுத்தியவர் அண்ணா என்றால் அது மிகைப்படுத்திக் கூறியதாகாது. அண்ணாவின் மேடைப் பேச்சைக் கேட்டுச்கிறுகிறுத்துப்போன மாணவர்கள் ஏராளம்.

### பகுதேவுடன் தொடர்பு

கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே அண்ணா அவர்களுக்கும் அன்று தொழிலாளர்சங்கத்தின் தலைவராக இருந்த காலஞ்சென்ற 'பகுதேவ்' அவர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டு விட்டது. அந்ததொடர்பு மிகவும் முக்கியமான கூட்டத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. தோழர் 'பகுதேவ்' அவர்களுக்கு ஆங்கிலத்தில் மட்டுமே பேசத்தெரியும். அதை அழகிய தமிழில் மொழிபெயர்த்து தொழிலாளர் உள்ளத்தில் பதியவைக்கும் பணி அண்ணா அவர்களைப் பிடித்துக் கொண்டது.

### கல்விக்கு கிட்டிய வசதி

அண்ணா ஆனர்ஸ் வகுப்பில் படித்துக் கொண்டு வந்தார். அவர்கலந்து கொள்ளாத பொது நிகழ்ச்சி எதுவும் கல்லூரியில் நடைபெறுவதில்லை எனலாம். "தீண்டாமை கூடாது, சாதிகள் ஒழிக்கப் படவேண்டும், கலப்புத்திருமணத்தாலேயே சாதிகளை அழிக்க முடியும்" என்ற தலைப்புக்களில் எல்லாம்கூட அண்ணா மாணவராக இருந்தபோது கல்லூரிக்கூட்டங்களில் கூட, கல்லூரிக்கு வெளியில் மண்டிக் கிடக்கும் பிரச்சினைகளைப்பற்றிப் பேசியிருக்கிறார்.

அண்ணாவின் ஆங்கில எழுத்து நடையும் பேச்சும் எல்லாரையும் கவர்ந்தன. அவர் எழுதிய ஆங்கிலக்கட்டுரைகள் பல. அவைகளில் பெரும்பாலோர் வியந்து பாராட்டியது MOSCOW MAYPARADE என்ற கட்டுரையாகும்.

அண்ணா அவர்கள் 1934ம் ஆண்டு எம். ஏ. பட்டத்தோடு கல்லூரியை விட்டு வெளியேறினார். கல்லூரியில் பட்டச் சேட்பத்தைக் கையில் வாங்கிக் கொண்டு வெளியேறிய அண்ணா தனக்கு கிடைத்துள்ள பட்டத்துக்கு உத்தியோகம் சுலபமாக கிடைத்து விடும் என்ற உறுதியோடு கிளம்பினார்.

### அண்ணா பார்த்தவேலை

அதன்பின் அண்ணா அவர்களுக்கு ஒருவேலை கிடைத்தது. அதைக்கேட்டால் அனைவரும் பேராச்சரியம் அடைவார்கள். எம். ஏ. பட்டதாரியான அண்ணா ஒரு நடுத்தரப் பள்ளியில் ஒரு சாதாரண ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார்.

சைனாபஜாரில் உள்ள கோவிந்தப்பநாயக்கர் நடுத்தரப்பள்ளியில்தான் அண்ணா அவர்கள் தமது முதல் உத்தியோகமான ஆசிரியர் பணியை தொடங்கினார். அண்ணா முதல் முதல் பார்த்த உத்தியோகமும் கடைசியாகப் பார்த்த உத்தியோகமும் அதுதான். ஆசிரியப்பணி மேலதிகாரிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டிய பணியல்லவா? அண்ணா அவர்கள் சுதந்திரமாக இருப்பதில்விருப்பம் கொண்டவராயிற்றே! ஆகையால் நான்கு தினங்களிலேயே அந்த உத்தியோகத்திற்கு வணக்கம் செலுத்தி தெரிவித்து விட்டு அதை விட்டு வெளியேறினார்.

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரக "மகாத்மியம்"

சாதாரணமாக, மசாலைப் பொருள்களுள் ஒன்று என்றே சீரகத்தை நாம் எண்ணுகிறோம். இதே சீரகம் சிறந்த மருந்து. இதை மருந்தாக உபயோகித்தால் கைகண்ட பலனை அடையலாம் என்பது பலருக்குத் தெரியுநியாயம் இல்லை. சீதளத் தன்மை பெற்றிருந்தாலும் இது சீதளத்தைப் போக்கி உடம்புக்கு இதத்தைத் தரும் குணம் பெற்றிருக்கிறது. இது பசியை உண்டாக்குவதோடு எளிதில் ஜீரணம் ஆகும் தன்மை பெற்றது; ஆகையால், மலத்தை இறுகச் செய்கிறது.

பசியின்மை, அதிசாரம், வயிற்றுவலி, வயிற்றில் பூச்சி, மேகநோய் ஆகியவற்றில் நல்ல பயன் தருகிறது. தொண்டை கம்மிக் குரல் எழும்பாத சமயத்தில் சீரகத்தைக் கஷாயம் போட்டுக் குடிக்கலாம். மாதவிடாய் சம்பந்தப்பட்ட சிக்கல்களைத் தீர்க்கச் சீரகம் தக்க மருந்து.

## தாய்ப்பால் அதிகரிக்க

சூதக சம்பந்தமான நோய்களுக்கு ஒரு களஞ்சு சீரகத்தையும் ஆமணக்கு இலையின காம்பு ஐந்தையும் சேர்த்துக் கஷாயம் நாலில் ஒன்றாகக் குறுகும்படி போட்டு ஒரு களஞ்சு வெண்ணெயும் அரைக்களஞ்சு கற்கண்டுப் பொடியும் சேர்த்துத் தினந்தோறும் சாப்பிட்டால் எல்லா விதமான சிக்கலும் நீங்கும்.

இது தாய்ப்பாலை அதிகரிக்கச் செய்யும். பெண்களின் வெள்ளை, வெட்டை நோய்க்கும் சீரகம் நல்ல மருந்து. பால் சுரக்க, வயிற்றுக் கடுப்பு நீங்க, மூலநோய் போக ஜீரகாத்யரிஷ்டம், ஜீரகாதி லேகியம் இரண்டும் தக்க மருந்துகள்.

பிள்ளைத் தாய்ச்சிக்குப் பால் சுரக்க ஒரு களஞ்சு சீரகத்தையும் அரைக் களஞ்சு வெல்லத்தையும் சேர்த்து இழைத்துக் கொடுக்கலாம்.

பெரும்பாடு போன்ற கொடிய நோய்க்கும் சீரகம் ஒரு களஞ்சு எடையும் சிறிது கூஷ்மாண்டரஸம் அல்லது பூசணிக்காயின் காய்ந்த தோலும் சேர்த்துக் கஷாயம் செய்து சாப்பிடலாம். ரத்தம் வெளியேறாமல் தடுக்கும் சக்தியும் சீரகத்துக்கு உண்டு.

## ரத்தபேதிக்கு

ரத்தபேதிக்கு: ஒரு களஞ்சு சீரகமும் அதே எடை உள்ள மாதுளைத் தோலும் வில்வ இலையும் சேர்த்து ஒரு படி நீரில்

## ஜபராமா சார்லு

கஷாயம் இட்டு எட்டில் ஒன்றாகக் குறுகிச் சர்க்கரை சேர்த்துத் தினமும் மூன்று வேளை சாப்பிட்டால் குணமாகும்.

சீரகம் பித்தத்தைக் கணிசமாகக் குறைக்கும். சீரகம், கொத்தமல்லி விதை, திராட்சை இந்த மூன்றையும் சேர்த்துக் கஷாயம் செய்து, தினந்தோறும் உட்கொண்டால் பித்தம் நீங்கும்.

## அஜீரணம் நீங்க

அஜீரணம் நீங்க: சீரகத்தை விரிவாக உபயோகிப்பார்கள். ஒரு வெற்றிலையில் சிறிது சீரகத்தை மடித்து இடுப்பில் செருகிக்கொண்டு இரவு படுத்திருந்து, விடியற்காலையில் எழுந்தவுடன் அதை அப்படியே மென்று தின்றால் ஜீரண சக்தி உண்டாகும்; வயிற்று உப்புசம், வாந்தி, கிராணி, அருசி ஆகிய நோய்களுக்குச் சீரகம் சாப்பிட்டால் பசியும் ருசியும் உண்டாகும்.

சீரகத்தை அம்மியில் தண்ணீர் விட்டு அரைத்து அதை உடம்பில் தடவிக்கொண்டால் அரிப்பு வலி முதலிய சரும நோய்கள் நீங்கும்.

## தேள்விஷம் நீங்க

சீரகமும் இந்துப்பும் பொடி செய்து நெய்யுடன் சேர்த்துத் தேள் கொட்டிய இடத்தில் தேய்த்தால் விஷம் குறையும்.

வாயில் நீர் ஊறினால் சீரகத்தையும் சர்க்கரையையும் தினந்தோறும் இரவு படுக்கும் போது மென்று தின்னவேண்டும்.

மூல நோயில் ரத்தம் விழும் நிலையில் பழுத்த வாழைப்பழத்துடன் ஒரு சிட்டிகை சீரகம் சேர்த்துத் தினந்தோறும் உட்கொண்டால் ஆச்சரியகரமாகக் குணம் தெரியும்.

மூல முளை கண்டுவிட்டால் அது வீங்கித் தொல்லை கொடுக்கும். அதற்குச் சீரகத்தைக் குளிர்ந்த நீரில் அரைத்துத் தடவவேண்டும்.

வீரியம் நீர்த்துவிட்டால்: சீரகத் தூளுடன் வெல்லக்கட்டியைத் தூளாக்கிச் சேர்த்து நெய்யில் கலந்து உட்கொள்ள வேண்டும்.

கோடைக்காலத்தில் சீரகக் கஷாயம் உட்கொண்டு வந்தால் உஷ்ணம் பாதிக்காது. விக்கல் எடுத்தவர்களுக்கு அரைச் சிட்டிகை சீரகத் தூளுடன் தேனைக் கலந்து இரண்டு, அல்லது மூன்று முறை கொடுக்க வேண்டும்.

# முள்ளங்கியிலும் முருங்கையிலும் என்ன சத்துக்கள் இருக்கின்றன?

முள்ளங்கியைக் கண்டால் அதன் அருவருப்பான வாசனைக்காக முகத்தைச் சுளிப்பவர்கள் உண்டு. முள்ளங்கியின் முழு விபரம் தெரிந்திருந்தால் அவ்வாறு முகம் சுளிக்க மனம் வராது. முள்ளங்கி மார்க்கெட்டில் மலிவாக விற்பதால் 'சே! இதில் என்ன சத்து இருக்கப் போகிறது!' என்று அலட்சியமாக ஒட வேண்டாம். கிழங்கு வகைகளில் ஒன்றாகிய முள்ளங்கி மற்ற கிழங்குகளை விட உடம்பிற்கு நல்ல பலனைத் தரக்கூடியது. சரீரத்தைப் பாதுகாக்கக்கூடிய அருமையான சில சத்துப்பொருள்கள் முள்ளங்கியில் உள்ளன. மற்ற கிழங்குகளைப் போல் வாயு வைத் தராது இது.

முள்ளங்கியில் சிவப்பு முள்ளங்கி, மஞ்சள் முள்ளங்கி, வெள்ளை முள்ளங்கி, என மூன்று வகைகள் உண்டு முள்ளங்கியில் சாதாரண வெள்ளை முள்ளங்கியே மிகவும் சிறந்தது. மதுமேக நோய் உள்ளவர்களுக்கு முள்ளங்கி மிகவும் உபயோகமானது.

வாதம், கரப்பான், வயிற்றில் எரிச்சல், இருமல், கபம், சுவாச கோச நோய்கள், மூலக்கடுப்பு முதலியவைகளையும் குணப்படுத்தும் நீர்ப்பையில் வேலை செய்து நீர் இறங்கச் செய்யும். தேகத்திற்கு நல்ல வலுவைத் தரும். முள்ளங்கிக் கீரையைப் பக்குவப்படுத்தி உண்டால் கல்லீரலிலுள்ள நோயைப் போக்கி இருதயத்திற்கு பலத்தைத் தரும். முள்ளங்கி ஆங்கில மருந்துகளில் ஸ்பிரிட், ஈதர், நைட்ரஸ் என்னும் மருந்துக்குச் சமமாய் நீர்ப்பையில் வேலை செய்கிறது.

ஆகவே முள்ளங்கியைக் கண்டு முகத்தைச் சுளிக்காதீர்கள்!

முருங்கைக்காய் எல்லோருக்கும் பிரியமானது. வைட்டமின் 'சி' அதிகமுள்ள காய் முருங்கைக்காய் 119.6 மி. கி. அளவு வைட்டமின் 'சி' முருங்கைக்காயில் இருக்கிறது. மற்றும் வைட்டமின் 'ஏ' 164 யூனிட்டுகள் இருக்கின்றன. இரும்புச்சத்து மட்டும் முருங்கைக்காயில் 5.8 சதவிகிதம் இருக்கிறது. இரத்த உற்பத்திக்கு இரும்புச் சத்து இன்றியமையாதது. இந்த அபூர்வ வஸ்து முருங்கைக்காயில் போதிய அளவிருக்கிறது. புரோட்டீன், தாதுப்பொருள், கார்போ ஹைட்ரேட், பாஸ்பரஸ், கால்சியம் முதலியவை இதில் பெருமளவு அடங்கியிருக்கின்றன. காய் மட்டும் என்ன? கீரையின் மகத்துவம் சொல்லி முடியாது. வைட்டமின் 'ஏ' சத்து மிகுந்தும் வைட்டமின் 'இ' சத்து அதிகமாகவும் இரும்புச்சத்து சுண்ணாம்புச் சத்து இவையும் முருங்கைக் கீரையிலும் பூவிலும் இருக்கின்றன. ஆகவே இரத்த சுத்திக்கும் பற்களின் பலத்துக்கும் உடல் வலுவுக்கும் கண் பார்வைக்கும் முருங்கைக்காய் நல்ல பலனைத் தரக்கூடியது.

## பௌர்ணமிக் கலைவிழா

யாழ். மாநகரசபையின் ஆதரவில் மாதந்தோறும் நடைபெறும் பௌர்ணமிக் கலைவிழா இன்று (18-9-67) யாழ் திறந்த வெளியரங்கில் மாலை 6.30 க்கு நடைபெறுகிறது.

விழாவில் சுண்டிக்குளி யாழ் நாடகக் கலாமன்றத்தாரின் 29வது தயாரிப்பான "அடங்காப்பிடாரி" என்னும் சமூக சீர்திருத்த நாடகம் மேடையேற்றப்படும். இத்துடன் இந் நாடகம் மேடையேற்றப் [illegible] [illegible] [illegible] பெறு[illegible] கிறது.

# திரைவாணன் பதில்கள்

சிவ. சண்முகநாதன்
கோணாவலை

கே: தற்போதைய திரையுலகம் கவர்ச்சிக்கு முதலிடம் கொடுத்து முன்னேறுகிறதே முடிவு என்னவாகும்?

ப: கவர்ச்சியற்றுப்போகும்!

ஃ

சு. தவராசா,
நாவலப்பிட்டியா.

கே: சிவாஜிகணேசன் நடித்த பாசமலர் படம் இலங்கையில் எத்தனை நாட்கள் ஓடியது?

ப: 100 நாட்களுக்கு மேல் ஓடியுள்ளது.

ஃ

எஸ். எம். யூசுப்
இலந்தை மோட்டை

கே: எம். ஜி. ஆர். ஜெயலலிதா ஜோடி சேர்ந்து இதுவரை எத்தனை படங்களில் நடித்துள்ளனர்?



ப: குமரி அரை டஜன் படங்களில்!

ஃ

'சிவாஜி' பிரியன்
கிரானகுளம்

கே: பத்மஸ்ரீ கணேசன் நடித்த 'செல்வம்' வி. கே. ராமசாமிக்கு வெற்றிப் படமா?

ப: ஆம்.

ஃ

நா. தனபாலசிங்கம்,
ஒட்டுசுட்டான.

கே: எம். ஜி. ஆர். நடிக்கும் மறுபிறவி எப்போது வெளிவரும்?

ப: அடுத்த ஆண்டு.

கே: புரட்சி நடிகர், எம். ஜி. ஆரைப்பற்றி தாங்கள் கருதுவது என்ன?

ப: ஆயிரத்தில் ஒருவர் அவர்.

ஃ

சி. சுமிந்திரா,
தையிட்டி.

கே: ரவிச்சந்திரனின் வயது என்ன? விலாசம் தருங்கள்?

ப: 32 வயது. முகவரி, 14, அப்பாத்துரையார் தெரு, சிதம்மாகாலனி, சென்னை-18.

கே: ரவி இதுவரை நடித்தது எத்தனை படங்கள்? இப்போது எத்தனை நடிக்கிறார்?

ப: ஏறத்தாழ 25 படங்களில் நடித்து முடித்துவிட்ட ரவி இப்போது 10 படங்களில் நடித்து வருகிறார்.

ஃ

ஆனையூர். தியாகு,
ஆனையம்பதி.

கே: சிவாஜிகணேசன் நடித்த 'பாலாடை' சென்னையில் எத்தனை நாட்கள் ஓடியது? அது வெற்றிப்படமா?

ப: 70 நாட்கள்வரை ஓடியுள்ள பாலாடை ஒரு வெற்றிப்படம்தான்!

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், ஆனந்தன் ஆகிய மூவரில் சண்டைக்காட்சிகளில் சிறப்பாக நடிக்கக்கூடியவர் யார்?

ப: ஜெய்சங்கர்.

கே: சிவாஜிகணேசனின் குணம்பற்றி இரண்டு வரிகள்...?

ப: நல்லவர். பண்பாளர். ஆனால் உறுதியான கொள்கையற்றவர்.

ஃ

சி. செல்வநாதன்,
உடப்பு.

கே: இன்றைய தமிழ் சினிமாப் படங்களில் ஆபாசக் காட்சிகள் பெருகுவதேன்?

ப: அதை ரசிக்க ரசிகர்கள் இருப்பதால்!

ஃ

ஞா. சந்திரசேகரம்,
வருலூர்.

கே: வீரபாண்டிய கட்டபொம்மன், ஆயிரத்தில் ஒருவன் இவ்விரு படங்களிலும் மக்களுக்கு அதிக புகழையும் பண வசூலையும் தந்த படம் எது?

ப: புகழைத் தந்தது வீரபாண்டிய கட்டபொம்மன். பணத்தைத் தந்தது 'ஆயிரத்தில் ஒருவன்'

ஃ

க. சுபத்திரா,
பதுளை.

கே: படங்களில் நடிக்கும் ஆர். எம். வீரப்பனும், எம். ஜி. ஆரின் மனேஜரா வீரப்பனும் ஒருவரா?

ப: இல்லை. இருவரும் வெவ்வேறு வீரப்பன்கள். எம். ஜி. ஆரின் மனேஜர் வீரப்பன் நடிப்பதில்லையே,

ஃ

எம். திருகலன்,
உருத்திரபுரம்.

கே: ஜெய்சங்கர் நடித்து 100 நாட்கள் ஓடிய படம் எது?



ப: குழந்தையும் தெய்வமும்!

திரைவாணன்,
சுதந்திரன் காரியாலயம்
த. பெ. இல. 1183.
கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "துப்பறியும் நாவல் என்றால் எனக்கு உயிர்"

## நடிகை ராஜஸ்ரீ அளித்த பேட்டி



**நடிகை ராஜஸ்ரீ அளித்த பேட்டியொன்று கீழே இடம் பெறுகிறது**

கே: நீங்கள் சினிமாவில் நடிப்பதற்கு முன்னால் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

ப: என்ன செய்து கொண்டிருந்தேன்? நடனம் ஆடப் பயின்று கொண்டிருந்தேன்.

கே: உங்கள் திரை வாழ்வைப் பற்றி கொஞ்சம் சொல்கிறீர்களா?

ப: எனக்கென்று தனிப்பட்ட முறையில் சினிமா வாழ்க்கை இருக்கிறதா என்ன? நானும் பற்றவர்களைப் போல ஒரு சினிமா நடிகை. கார் இருக்கிறது. பங்களா இருக்கிறது. என்னுடைய தேவைகளைச் சவனித்துக் கொள்ள வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்.

வீட்டில் இருக்கும்போது சாதாரண புடவைகளையே உடுத்திக்கொள்வேன், என் அக்காள் பேத்திசைலஜாவை தூக்கிவைத்துக்கொண்டு கொஞ்சுவேன்.

கே: நீங்கள் நடித்த படங்களில் உங்களை அதிகமாகக் கவர்ந்த படம் எது? எதனால் அப்படி கவர்ந்தது?

ப: 'காதலிக்க நேரமில்லை' என்ற படத்தைத்தான் கூற வேண்டும். இந்தப்படத்தில் நான் கவர்ச்சிக்கன்னியாக நடித்து ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றேன். தமிழ்ப்படங்களில் என்னுடைய பெயரை நிலைக்கச் செய்தபடம் இது தான்.

கே: நீங்கள் எந்மாதிரியான வேடங்களில் நடிக்க விரும்புகிறீர்கள்?

ப: எனக்குப் பிடித்த வேடம் என்று எதுவுமே கிடையாது. பட அதிபர்கள் எந்த வேடம் கொடுத்தாலும் ஏற்று நடிப்பேன். ஆனால் அந்த வேடம் கதைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவேண்டும்.

கே: இன்றைய படவுலகு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: என்னைப் பொறுத்த வரையில் நன்றாகவேயிருக்கிறது. தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய படங்களில் சதா படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது!

கே: நீச்சல் உடையில் நடிப்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: நீச்சல் உடை நம் பண்பாட்டுக்கு உகந்தது அல்ல.

கே: உங்கள பொழுதுபோக்கு அல்ல.


ப: எனக்கு பிடித்தமான பாடல்களை ரேடியோகிராமை திருப்பிக் கேட்டு அனுபவிப்பேன். இசையின் மீது எனக்கு அலாதியான பிரியம். கலைக்கோயில் படத்தில் 'தேவியார் இருவர்' பாடலும் காதலிக்க நேரமில்லை படத்தில் 'அனுபவம் புதுமை' பாடலும், என் சிந்தையைக் கவர்ந்தவை. அந்தப் பாடல்களை அடிக்கடி கேட்டு மகிழுவேன். தமிழ், தெலுங்கு மொழிகளிலுள்ள நாவல்களைப் படிப்பேன். துப்பறியும் நாவல்களில் விருப்பம் அதிகம். ரசிகர்களின் கடிதங்களுக்கு பதில் எழுதுவதும் உண்டு.



கொழும்புகெயிட்டி படமாளிகையில் காட்சி தரும் 'தாயின் மேல் ஆணை படத்தில்' ஆனந்தன், விஜயா.

## 'சாப்பிட்டால் தான் என் உடம்பு இளைக்கும்' ஜெமினியின் கிண்டல்

சாரதா படப்பிடிப்பு நிலையத்தில் ஏ.எல்.எஸ்.புரொடக்ஷன்ஸாரின் 'பெண் என்றால் பெண்' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. ஜெமினி கணேஷ், விஜயகுமாரி நடிக்கும் காட்சிகளை டைரக்ட் செய்து கொண்டிருந்தார் ஆரூர்தாஸ்.



படப்பிடிப்பின் இடைவேளையில் சிற்றுண்டி கொண்டுவரப் பட்டது. அனைவரும் சிற்றுண்டி அருந்தும் போது நடிகை விஜயகுமாரி ஸ்வீட் சாப்பிட மறுத்து விட்டார். ஆனால், ஜெமினி கணேஷ் தன்னுடைய ஜிலேபியை முடித்ததோடு அல்லாமல், ஆரூர்தாஸின் ஸ்வீட்டையும் வாங்கி சாப்பிட்டார். அதைக் கண்டு சிரித்துக் கொண்டே விஜயகுமாரி, 'நான் என்றும் கொடி உடலாள் விஜயகுமாரியாக இருக்கத்தான் விரும்புகிறேன். அதனால் தான் இனிப்பு சாப்பிடுவதில்லை; ஜெமினி அண்ணனோ இரட்டிப்பு இனிப்பு சாப்பிடுகிறார்!' என்று கூறினார்.

'என் உடம்பு சாப்பிட்டால் தான் இளைக்கும். சாப்பிடாமல் இருக்கும் போது பருக்கும்! ஆகவே தான் அதைப் பற்றிக் கவலைப் படுவதில்லை நான' என்றுகூறினார் ஜெமினி கணேஷ்.

## ஜெயபாரதிபற்றி நான்கு தகவல்கள்

(நடிகை ஜெயபாரதிக்கு அவரது அன்பு ரசிகர்களிடமிருந்து கிடைத்த சில ரசமான தகவல்கள் இவை.)

### பாடகி பாரதி

நடிகை ஜெயபாரதிக்கு நன்றாகப் பாடத் தெரியும். சில வருடங்களுக்கு முன்பு அவர் கோவை மாவட்டத்தில் புகழ் பெற்ற நாடக நடிகையாகத் திகழ்ந்து வந்தார். அவ்வமயம் கோவை காங்கிரஸ் அலுவலகத்திற்கு சாந்தாதேவி என்பவருடன் விஜயம் செய்ய, அங்கு பணியாற்றும் பலர் பாரதியை ஒரு பாட்டுப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டார்கள். ஜெயபாரதியும் பிறர் விடக் கற்றக்கவாறு ஒரு பாட்டுப் பாடி முடித்தார்.

### மாகாளியம்மன் அருள்

இவருக்கு சினிமா சான்ஸ் கிடைததே கோவையை அடுத்த கோட்டூர் மாகாளியம்மன அருளால்தான். அந்த ஊர் மாகாளியம்மன் பண்டிகைக்காக நடத்தப்பட்ட நாடகததில் கதாநாயகியாக நடித்தார் இவர். அடுத்த சில நாட்களில் அந்த மாகாளியம்மன் அருளால் சினிமாசான்ஸ் தேடி சென்னை வரவே, வந்ததும் 'சின்னஞ்சிறு உலகம்' படத்தில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது இவருக்கு!

### விஜயாவின் எதிரொலி

கோவை நாடகங்களில் நடித்த வந்த பொழுது இவர் பெயர் பாரதிதேவி. நாடக விளம்பரங்களில் இவர் பெயரைக் குறிப்பிடும் பொழுது இவரை 'கற்பகம் சினிமா புகழ் கே. ஆர். விஜயாவின் எதிரொலி' என்றே குறிப்பிடுவார்கள்.

'நாடக விஜயா' என்றால் பளிச்சென்று அப்பெயர் ஜெயபாரதியைத்தான் குறிப்பிடும்.

இவர் சில காலம் கோவை ஜில்லாவைச் சேர்ந்த ஈரோட்டில் வசித்து வந்துள்ளார். அப்பொழுது இவருக்கு வயது 12, 13 இருக்கும், இவர் வீட்டுக்குப் பக்கத்தில் டீஸ்டால் ஒன்று உண்டு. ஜெயபாரதி அங்கு அடிக்கடி சென்று டீ குடிப்பது உண்டு.

இப்பொழுதுகூட ஜெயபாரதியின் பாட்டி ஈரோட்டில் தான் வசித்து வருகிறார். ஈரோடு மூலப்பாளையம் ரோடு காய்கறி கடை மேடு நட்சத்திர பாட்டி ஒருவர் வசிப்பதால் பெருமை அடைகிறது.



பாரதியும் முத்துராமனும் இப்படி நெருங்கிக் காட்சி தருவது விரைவில் சிலோன் என்டர்டெயின்மெண்ட்ஸ் திரைகளில் திரையிடப் பட விருக்கும் 'தெய்வச் செயல்' படத்தில் தான்!

## கமால் படம்

கமால் பிரதர்ஸ் நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒரு படம் தயாரிக்கிறார்கள்.

இதில் எஸ். வி. ரெங்காராவ், எஸ். வி. சுப்பையா, பத்மினி, நாகேஷ், கே. கண்ணன் சிவகுமார், ஒ. ஏ. கே. தேவர், சள்ளபார்ட் நடராஜன் ஆகியோர் நடிக்கிறார்கள்.

[illegible] கதைவசனம் [illegible] எழுதி டைரக்ட் செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜயகுமாரி குறும்புப் பார்வையை அள்ளி வீசும் போது எஸ். எஸ். ஆர் பட்டுப் ஏன் கவலையோடு காணப்படுகிறார்? சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் இப்போது காட்சி தரும் 'அவன் பித்தனா?' பதில் சொல்லும்.

## அடுத்த வாரம் உங்களுக்கு வெற்றியா?

திருமதி. அன்னலெட்சுமி மாணிக்கம்

## 18-9-67—25-9-67

### மேடம்

புத்திர பந்துக்கள் கவலை. பிரயாணக் கஷ்டம், செலவு மிதமிஞ்சுதல், குடும்பச்சச்சரவு, தொழிலில் மன வேற்றுமை, இருப்பிடத்தில் அன்னியரினுல் மேகாள்கூறுதல், வியாபாரம் இடையில் நட்டமடைதல் அதிகாரிகளினுல் குறைகேட்டல், பெண்பாலாரினுல்மதிப்பு பெற்ருர் உறவினரினுல் செலவு, திரவியலாபம் வெற்றியும் உண்டு.

### இடபம்

பீடை, இன விரோதம், குடும்பத்தில் அசமகிழ்வு, பிள்ளைகள் சுகக்குறைவு, சென்ற விடத்தில் வாக்கு வாதம், கொடுக்கல் வாங்குதலில் பிணக்கு, வருமானம் செலவிற்கு போதாமை, தொழிலில் நன் மதிடபு, உறவினர் வருகை, பிரயாணத்தில் அன்னியரின் உறவு உதவுதல், காலில் வாதரோகம், தெய்வ வழிபாடு.

### மிதுனம்

அனுகூலம், தொழிலில் நன் மதிப்பு பெரியோரின் ஆசி, விரும்பியவை கைகூடுதல், பொது விஷயங்களில் ஆராய்ச்சி, அன்னியரினுல் போற்றுதல், பொருள் வேண்டியளவு கிடைத்தல், சினேகிதர் உதவுதல், குடும்பச்சிறப்பு எவ்வகையிலும் உண்மை உரைத்தல், மற்றவரின் கருமங்களை இலகுவில் மனமுவந்து செய்தல, வஸ்திர லாபம், சந்தோஷம் உண்டு.

### கடகம்

பிரயாணத்திஞல் சுகமின்மை, பொருள் சேகரித்தல், மனை மாற்றம், தொழில் மாற்றம், குடும்பத்தில் அமைதியான வாழ்க்கை புதுக் கருமங்களில் ஈடுபடுதல், பெற்ருர் வருகை, உறவினரின் உதவி கிட்டுதல், சென்ற விடத்தில் மதிப்பு, வாகனச் சிறப்பு, அயலவருடன் பகை கொள்ளல், பொருள் அனுவசியமான வழிகளில் செலவுமுண்டாம்.

### சிங்கம்

பொருள் வருவாயினும் பாாக்க அதிகச் செலவு, பிரயாணம் செய்தல், இளைய சகோதரினுல் மனம் வேதனை அடைதல், தொழிலில் வேற்றுமை இருப்பிடத்தில் அமைதியின்மை, வீடு மாற்றம் செய்தல், நூதனப் பொருட்கள் வாங்குதல், எல்லோரையும் அணைத்தல் நல்லொழுக்கம், கீர்த்தி, அதிகாரமும் உண்டு.

### கன்னி

புத்திர மகிழ்ச்சி, புதுமனை புகுதல குடும்பத்தில் செலவு, செலவு அதிகரித்தல் பெற்ருர் சுகக்குறைவு, எவ்வகையிலும் மனம் தளரானம, பிரயாணம் உறவினர் முரண்படுதல், மூத்த சகோதரத்தினுல் சஞ்சலம், தொழிலினுல் குறைகேட்டல் பொருள் ஒரு முக்கிய விஷயமாக விரையமாகுதல், கிழமையின்முடிவில் சந்தோஷமுண்டு.

### துலாம்

சுகமான வாழ்க்கை, குடும்பத்துப பிணக்குகள் இலகுவாக முடிவடைதல், பிள்ளைகள் பெருமகிழ்ச்சி, பெறறோர் உற்ருர் உறவினா வருகை, சென்ற விடத்தில் கைப்பொருள் நழுவுதல். விஷப்பயம், இரவு வழி போதல் தகாமை, சினேகிதர் அடுத்துக் கெடுத்தல், தொழிலினுல் சந்தோஷம் இலாபம், வெற்றி அதிகாரமும் உண்டு.

### விருச்சிகம்

மனநிலை குன்றல், தெய்வ நிந்தனை, உறவினர் வேற்றுமை, பொன் பொருள் நெருக்கடி வாதநீர் வருத்தம், கால் கண் ரோகம், குடும்பத்தில் சமசிய நிலை, நினைத்தவை தடைப்படுதல், இடம் பெயர்தல், செலவு அதிகரித்தல் இருப்பிடத்தில் திருத்தம் செய்தல், வாங்கும் பொருட்கள் சேதமடைதல், கைப்பொருள் காணுமற்போவதுமுண்டு.

### தனு

பல சேதம், பெற்ருேர் சுகக் குறைவு, எண்ணிய கருமம் நிறைவேருமை, புதுமனை கட்ட உற்சாகம், அதிகாரிகளின் நன்மதிப்பு, பிராயணம் செலவு அதிகரித்தல், பிள்ளைகளினுல் சந்தோஷமடைதல், குடும்ப மகிழ்ச்சி, சினேகிதர் உதவி கோருதல், தொழில மகிமை, பூமியால் நன்மை, வாகனமுடை பணவரவுமுண்டு.

### மகரம்

குடும்பத்தில் சிறப்பு, பெற்ருரினுலும் உறவினராலும் நன்மதிப்பு, பிரயாணம், தெய்வ வழிபாடு, சகோதர முன்னேற்றம், திரவியலாபம் தொழிலினுல் அதிகாரம் செலுத்துதல், நிலை மாற்றம் பூமி வாங்குதல், தகுந்த நேரத்தில் உதவி கிடைத்தல செல்வாக்கு, வெற்றி, ஸ்திரீமூலம் குறைகேட்டல், வீண் மனஸ்தாபம் உண்டு.

### கும்பம்

சரீர மெலிவு, கல்விக் குளப்பம் பெற்ருர் நன்மதிபபு, மனை புதுப் பித்தல் குடும்பத்தில் சுக வாழ்வு, உறவினுல் மனக் குளப்பம், தொழிலில மத்திம சித்தி, நித்திரையின்மை, சத்துரு பயம், பிறதேச சஞ்சாரம் தூர தேசவி நந்தினர் வருகை பிள்ளைகளினுல உற்சாகம் ஏற்படல், வருங்கால வாழ்க்கை சீர்படுதல் உண்டு.

### மீனம்

அலைச்சல், இடையூறு தயோசனை, பெற்ருர் சுகக் குறைவு, தாழ்ந்த நிலை, தொழிலில் மதிப்பு, அதிகாரிகளின் ஆட்சியும் கட்டும், பொருள் அதிகரித்தல், மூத்த சகோதரங்களினுல் மனம் பூரித்தல், பூமி சேருதல், வாகனம் வாங்குதல் குடும்பச் சிறப்பு, நினையாப் பிரகாரமான பிரயாணம், வெற்றி அதிகாரம் உண்டு.

---

## கல்லூரி காணியில் நெற்பயிர்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி விவசாயப் பகுதியினர் 9ம் தேதி காலை 8 மணியளவில் கல்லூரிக்குச் சொந்தமான 12 பரப்பு நெற்காணியில் பரிச்சார்த்தமாக யப்பானிய வரிநெல் விதைப்பு முறையில், நெல் விதைத்தனர். கல்லூரி அதிபர் திரு. சிறிநிவாசன் தலைமையில் நடைபெற்றது. நெல் விதைப்பின் போது வடபகுதி மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். [illegible] ரத்தினம், முதலில் நெல்மணிகளை விதைத்தார்.

---

# தீண்டாமை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் சீரும்சிறப்பும் எதிர் காலமும் தமிழ் மொழியோடு பிணைக்கப்பட்டதாகும். தமிழ் வாழ்ந்தால்தான் தமிழ் மக்கள் வாழலாம். தமிழ் சிறந்தால்தான் தமிழ் மக்கள் சிலக்கலாம். தமிழ் உயர்ந்தால் தான் தமிழ்மக்கள் உயரலாம்' இந்த உண்மையைத் தமிழ் மக்கள் இம்மியும் மறக்கக் கூடாது.

#### உறுதி யெடுங்கள்

தமிழை வாழ வைப்பதும், மாள வைப்பதும் தமிழ் மக்களிடம் தான் தங்கியிருக்கிறது. தமிழைக் காப்பது என்று தமிழ் மக்கள் உறுதியோடு டூணைந்து நின்ருல் பிறர் எவ்வளவு சூழ்ச்சி செய்தாலும் தமிழ் மொழியை அழித்துவிட முடியாது. எனவே தமிழ் பேசும் மக்கள் தமது அன்ருட வாழ்வின் சகல துறைகளிலும் தமிழை உபயோகிப்பதன் மூலம் தமிழ் இனத்தின் நல் வாழ்வைப் பாதுகாக்க திரு. வன்னியசிங்கத்தின் பெயரால் உறுதியெடுத்துக் கொள்ள முன்வருவார்களென்று நம்புகிறேன்.

இன்று தமிழ் பேசும் மக்கள் கவனம் செலுத்த வேண்டிய இன்னொரு முக்கியமான பிரச்சினை தீண்டாமையொழிப்பு. திரு. வன்னியசிங்கம், தமிழ் மக்களின் சாபத்தீடாகவிருந்து வரும் தீண்டாமைப் பேயை அகற்ற அல்லும் பகலும் பாடு பட்டார். சாதிகளற்ற ஒரு தமிழர் சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்பது அவரது தாரகமந்திரமாக இருந்தது.

#### தீண்டாமை யொழிப்பு

திரு. வன்னியசிங்கம் உயர்ந்த சாதியென்று கூறப்படும் ஒரு குலத்திலே உதித்தவர் சிறந்த ஒழுக்க சீலர். சைவ சமய தத்துவங்களை படித்துணர்ந்து அதன்படி யொழுகிய ஒரு உண்மையான இந்து. அப்படிப்பட்ட அவரே தீண்டாமையொழிப்பில் முன்னின்று உழைத்தாரென்பதை தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சைவ சமயத்தில் தீண்டாமைக்கு இடமில்லையென்பதை நன்கு அறிந்திருந்த திரு. வன்னியசிங்கம், சைவாலயங்களில் ஒரு சாராரை நுழைய அனுமதி மறுக்கும் இழிசெயலை எதிர்த்தார். ஆண்டவன் முன்பு அனைவரும் சமமென்பதை மக்களுக்கு எடுத்துரைத்தார். ஓர் அமைதிப் புரட்சியையே நடத்திக்காட்டினர். அன்னரது துணிகரமான முயற்சியால் வடபகுதியில் பல இந்து ஆலயங்களும், தேநீர்க்கடைகளும் சிறுபான்மைத் தமிழர்களுக்காக திறந்து விடப்பட்டன.

#### கர்மவீரர்

தமிழ் மக்களிடையே எந்த வித வேறுபாடும் இருக்கக் கூடாது. யாவரும் சரிநிகர் சமானமாக ஒற்றுமையுடன் ஓரினமாக வாழவேண்டும் என்பதே திரு. வன்னியசிங்கத்தின் திடமான கொள்கை.

தீண்டாமை யொழிக்கப்பட வேண்டுமென்பதில் உறுதியாக நின்ற திரு. வன்னியசிங்கம், அதை அகிம்சா முறையில் சாந்திய அடிப்படையில் சாதிக்க வேண்டுமென்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். பலாத்கார வழிகளைக் கண்டித்தார்பிரசாரத்தின் மூலமும், சட்ட மூலமும், தீண்டாமையையொழிக்க வேண்டுமென்பதே அவர் கொள்கை.

தீண்டாமை யொழிப்பை தமிழரசுக்கட்சி தனது அடிப்படை இலட்சியங்களில் ஒன்ருக கொண்டுள்ளது தீண்டாமைஇந்துமதத்தில நீடித்தால் இந்து மதம் சிதையும். இந்து மதம் சிதைந்தால் தமிழ் மொழியழியும். தமிழ் மொழியழிந்தால் தமிழினம் அழியும். ஆகவே, மதமும் இனமும் மொழியும் பாதுகாக்கப்பட வேண்டுமென்ருல், தீண்டாமையை யொழித்துக் கட்டுவதில் தமிழ் மக்கள் பின் நிற்கக் கூடாது. இச்சபதத்தையும்திரு வன்னியசிங்கம் நினைவு நாளில் எடுத்துக்கொள்வோம். கர்மவீரர் அமரர் வன்னியசிங்கம் காட்டிய வழியில் தமிழினம் முன்னேறுமாக.

---

## தமிழ்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

என்.எம். : சந்தர்ப்பவசத்தால் எனது நண்பர் தாக்கப்படுகிருர்.

இராச: நான் தாக்கப்படவில்லை. நீர் தேவையற்ற விஷயங்களைப் போட்டு குழப்புகிறீர். அதனுல் தலையிடுகிறேன்.

என். எம. : தமிழரசுக் கட்சி தாக்கப்படுவதால் நீர் சத்தம் போடுகிறீர்.

இராச: டாக்டர் என். எம். ஒரு பேராசிரியர். அவர் இத்தச் சபையில் தவருகப் பேசக் கூடாது. அவர் எனது பழைய பேராசிரியர் ஆனுல் அவர் இப்போது தவருன பொருளாதாரம் படிப்பிக்கிருர்.

என் எம். : உள்ளூராட்சி அமைச்சர் பாரபட்சமின்றியும் எல்லோருக்கும் நீதியாகவும் நடக்க வேண்டுமென்றே நாம் எதிர்பார்க்கிறோம் அவர் தனது கட்சிக்கு மட்டும் சார்பாக நடக்கக் கூடாது.

அமைச்சர் இனப் பாகுபாடு காட்டி நடக்கிருர் என்பதை நிரூபிப்பதற்கு என்னிடம் [illegible] வெளியிட நான் விரும்பவில்லை.

## வவுனியா...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மீத சிப்பந்திகள் 7-ந் திகதி வேலைக்குத் திரும்பினர்.

#### வந்து என்னைப் பார்க்கச் சொல்

இது சம்பந்தமாக வவுனியா சுகாதார சுப்பிரின்டனின் காரியதரிசி விசாரணை நடத்தினர். அவர் விசாரணையின் போதும், அதற்குப் பின் வவுனியாவுக்குப் போகும் வழியிலும் வவுனியா எம். பியுடன் தொடர்பு கொண்டதாக ஆஸ்பத்திரி சிப்பந்திகளுக்குச் செய்தி கிடைத்தது.

தனது செயலைக் கண்டித்து வேலை நிறுத்தம் செய்த ஆஸ்பத்திரி சிப்பந்திகள் அத்தனை பேரையும் இடமாற்றம் செய்யப் போவதாக இந்த எம். பி சவுடால் பேச்சு பேசிக் கொண்டு திரிவதாகவும், சிப்பந்திகள் கேள்விப்பட்டனர்.

ஆகவே அவர்கள், காரியதரிசியின் விசாரணையில் தங்களுக்குப் பூரண திருப்தியில்லை என்றும், மேலதிகாரியான சுகாதார சுப்பிரின்டனே [illegible] வந்து விசாரணை நடத்த வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று அறியப்படுகிறது.

---

## இன்று....

#### இந்தியை எதிர்த்து

1937ம் ஆண்டு ராஜாஜி அமைச்சரவை இந்தியைத் திணிக்க முயன்றபோது அண்ணு அதை முழு மூச்சாக எதிர்த்தார் அண்ணுவின் முழு முயற்சியால் தமிழகத்தில் இந்திக்குப் பயங்கரமான எதிர்பபு தோன்றியது. ஆகவே எதிர்ப்பாளரைச் சிறைக்கு அனுப் பியது அரசு.

அண்ணுவைமட்டுமல்லபெரியாரையும் பெல்லாரி சிறையில் அடைத்தனர். இரண்டாவது முறையாக 1938ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இருபத்தாரும் நாள் இந்தித் திணிப்பை எதிர்த்ததற்காக நான்கு மாதச் சிறை தண்டனையை விதித்து மீண்டும் சிறைக்கனுப்பியது அரசு.

#### நீதிக்கட்சியில் நீதியைக் காத்தவர்

தனி நபர் சத்தியாக்கிரக இயக்கம் 1941ல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது கவர்னர் நீதிக்கட்சியாளரைப் பதவி ஏற்க வருமாறு அழைத்தார்.

நீதிக் கட்சி நிர்வாகக் குழுக் கூட்டத்தில் அண்ணு நீதிக்கட்சிக்காரர்களாகிய நாம் கவர்னர் அழைப்பை ஏற்கக் கூடாது. என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அண்ணுவால் கொண்டு வந்த தீர்மானத்தை காலஞ் சென்ற சர். ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்களும் சர். முத்தையாச் செட்டியார் அவர்களும் எதிர்த்தார்கள். இறுதியில் பெரியாரே (நீதிக்கட்சித்தலைவர்) வழிமொழிந்தார் அதன் பின் தீர்மானம் நிறைவேறியது.

சேலத்தில் 1944ம் ஆண்டு பெரியார் தலைமையில் நடந்த மகாநாட்டில் தான் நீதிக்கட்சி என்ற பெயரைத் திராவிடக் கழகம், என்று மாற்ற வேண்டுமென்று அண்ணு தீர்மானம் கொண்டு வந்தார். அதற்கு ஆதரவு அதிகம் இருந்ததால் நீதிக் கட்சி திராவிடக் கழகமாக மாறியது.

திராவிடக் கழகத்தில் அங்கத்தினர்களாக இருப்பவர்களுக்கு பட்டம் பதவி இருக்க கூடாது. ஆகவே பட்டங்களை விட்டுவிட வேண்டும் என்ற அண்ணுவின் தீர்மானமும் நிறைவேறியது. நாட்டுக்கு துரோகமான பாதையில் தான்ஈடுபட்டுள்ளக்கட்சி செல்ல இருந்த நேரத்தில் அதை நேர்வழிக்கு இழுத்து வர அண்ணு முயன்ருர். அதில் வெற்றியும் பெற்ருர்.

அண்ணுவின் எழுத்தில் மட்டுமல்ல மேடைப் பேச்சில் மட்டுமல்ல சாதாரண உரையாடலிலும் நகைச்சுவை பளிச்சிடும். ஒரு சமயம் அண்ணுவின் நண்பர் ராசகோபால் எலி கடித்து விட்டதாகச் சொன்னர் அதைக்கேட்ட அண்ணு புன்னகை பூத்துக் கொண்டே அப்படியென்ருல் ஊசிப்போடவேணுமே போட்டாச்சா? என்று கேட்டார். இன்னும் இல்லைங்க என் ருராசகோபால் கூறினர் அண்ணு சிரித்துக் கொண்டே அட உனக்கல்லயா அந்த எலிக்குப் போட்டாச்சா? என்றல்லவா கேட்டேன் என்ருர்? அதனுடைய நஞ்சு உங்களைப்பாதிப்பதை விட உங்கள் நஞ்சு அந்த எலியை அதிகமாகப் பாதித்து விடும் என்று கூறினர். அதைக் கேட்டு சுற்றியிருந்தவர் கள் அனைவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

---

வேலை நிறுத்தத்தின் விளைவாக அந்தப் பகுதிமக்களுக்கு எம். பியின் நன்றியுணர்வு ஆர்ப்பாட்டம் பற்றி தெரியவந்துள்ளது. 'இந்த எம். பி ஒரு குட்டிசர்வாதிகாரியா?' என்று அவர்கள் கேட்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணாவின் கருத்துரைகள்

தமிழனே நீ ஒரு காலத்தில் உன்னத நிலையில் இருந்தாய் இந்நாட்டு ஆட்சி உன்னுடையதாய் இருந்தது. ஆனால் இன்று நீ ஆண்டியாய்க் கிடக்கின்றாய். வீரனாய் — விறல் வேந்தனாய் இருந்த நீ இன்று கோழையாய்—பூனையைக்கண்டஞ்சும் பேதையாய்க் கிடக்கின்றாய். இன்று செங்கையேந்தி சேவடி காத்து நிற்கின்றாயே இப்படிநீ ஆனதன் அடிப்படையையே உணரவில்லையே போகட்டும் உயிர்!

●

உள்ள உயிர் ஒன்று தான். அது பிரிவதும் ஒருமுறை தான். பிரியப்போவதும் உறுதிதான். வறுமைத் தேள் கொட்டியோ பிளேக் கிருமிகளாலோ, காலரா பூச்சியாலோ காலத்தின் தாக்குதலாலோ போகப்போகும் இந்த உயிர் எங்கள் நாட்டை மீட்கப் போர் தொடுத்து உரிமைப் போரில் போகட்டும்.

●

மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானால் அவர்கள் மனதிலே உள்ள மாசு, மதவெறி, சாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் ஒழிந்தாக வேண்டும்.

●

உருட்டும் கண்! மிரட்டும் சொல்! ஒரு காலத்திலே ஆதிக்கக் கருவிகள்.

●

தங்கையர்க்கு அடக்கம் இருக்க வேண்டும் ஆனால் அசடாக இருக்கக் கூடாது. புத்தியிருக்க வேண்டும் ஆனால் போக்கிரித்தனம் இருக்கக் கூடாது. அழகு இருக்க வேண்டும் ஆனால் ஆளைமயக்கும் நோக்கமிருக்கக் கூடாது. படிப்பு இருக்க வேண்டும் ஆனால் படாடோபம் இருக்கக் கூடாது. சகசமாக பழகவேண்டும் ஆனால் சந்துபொந்து திரியும் சுபாவம் கூடாது.

●

தொகுத்தவர்:-
செல்வன் ஞா. பழனித்தம்பி
கனுதாவளை—கி. மா.

# மாணவர் அரங்கு

பொய்யாமை பொய்யாமை ஆற்றின்
அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

# பாடும் பூச்சிகள்

**நாம்** எங்கும் எப்போதும் பூச்சிகளைக் காண்கிறோம். ஆனால் அவற்றில் எத்தனையோ நம் முன் பாடிக்கொண்டே செல்கின்றது ஆனல் அவற்றை நாம் கவனிப்பதில்லை. இவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

வெட்டுக்கிளி (grass hopper) சத்தமிடும் ஓசையை நாம் எங்கும் சாதாரணமாகக் கேட்டிருக்கின்றோம். பூச்சி நாசினிகள் கண்டு பிடிக்கப்பட்ட பின் இச் சத்தம் குறைவாகக் கேட்கின்றது. இந்த மருந்து அதிகமான பயனுள்ள அழகான பூச்சிகளையும் அழித்து விடுகின்றன. பூச்சிகளில் நாம் எல்லோரும் அறிந்த இசை பாடும் பூச்சி வெட்டுக்கிளி தான். ஆனால் இவற்றை 'சிக்காடஸ்' (cicabas) என்னும் பூச்சிகளுடன் உருவத்தில் போட்டியிடமுடியாது. இவை நீண்ட நேரத்துக்குக் கீச்சிடும் சத்தமிட்டடுப் பாடும். இவை பொதுவாக ஐரோப்பாவின் வடக்கிலும் மற்றும் உலகின் பல பாகங்களிலும் காணப்படுகின்றது. இவை ஆயிரக்கணக்கில் ஒன்று கூடி மரங்களில் செடிகளிலிருந்து கூக்சலிடுவது போன்ற பெரிய ஓசையை எழுப்பும் ஒரு பூச்சியை எடுத்துப் பார்த்தால் இப்படி ஓசை எழுப்புமா என்ற சந்தேகமே எழும்பாது.

பூச்சிகள் பலவிதமான ஓசைகளை எழுப்பினலும் அவை சரியான இசையாகாது. ஆனால் மிகக் கூடிய ஒற்றுமை அவை சத்தம் எழுப்பும் விதத்திலும் இசைக் கருவிகள் சத்தமெழுப்பும் விதமும் ஒன்றாக இருக்கின்றன. வெட்டுக்கிளி (grass-hopper) யும் சின் வண்டு பாச்சைப் பூச்சியும் (cricket) தங்கள் உடம்பில் இரு பகுதியை ஒன்றொடொன்று உராய்ந்து வேகமாக அசைப்பதன் மூலம் ஒசை எழுப்புகின்றது. இதை 'ஸ்றிடியுலேசன்' (stridulation) என்று அழைப்பர். இப்படி இசையெழுப்பும் பூச்சிகளும் வீணை வயலின் இசையெழுப்பும் விதமும் ஒன்றாகும்.

## முகில் வண்ணன்

பூச்சிகளில் 'சிக்காடஸ்' (cicadas) மேளக்காரர்களாகும். இவைகளிடம் மெல்லிய தோல்களுண்டு. இவை மேளத் தோல்போன்றதாகும். இவற்றின் தசை நார்கள் விரித்து அசைக்கும் பொழுது இசை எழுப்புகின்றது. சில பூச்சிகள் தங்கள் உடம்பின் உள்ளும் வெளியேயும் காற்றை இழுத்து விடுவதால் ஓசை எழுப்புகின்றது. இவை காற்றால் இசை யெழுப்பும் (புல்லாங்குழல்) கருவிகளை ஒத்திருக்கின்றன. பூச்சிகளில் இன்னும் பலவிதமான ஓசை எழுப்பும் இனங்களுமுண்டு. ஆனால் அவை யெல்லாம் இசைக்காகவே எழுப்பவில்லை. வேறொரு வேலையில் ஈடுபடும்போது ஏற்படுகின்றது. வண்டுகளின் ரீங்காரம் அவை பறப்பதன் மூலம் வேகமாகச் சிறகுகள் அடிப்பதால் ஏற்படுகின்றது.

பெரும்பான்மையான பூச்சிகளின் ஓசை உடம்பின் ஒரு பகுதியை மற்றொன்றுடன் உராய்வதால் ஏற்படுகின்றது. இது 'ஒத்தோப்ட்ரு' (orthoters) என்னும் இனத்தைச் சேர்ந்த பூச்சிகளிடத்தில் தான் காணப்படுகின்றது. அதில் வெட்டுக்கிளி (grass-hopper) பச்சைப் பூச்சி (cricket) 'கயிற்டிட்'(katydibs) என்பன அடங்கும் இசையெழுப்பும் தன்மை ஆண் பூச்சிகளுக்குத்தான் உண்டு. துணைக்கு இணையைத் தேடும் போதுதான் இசை எழுப்புகின்றது.

வெட்டுக்கிளிகள் வழக்கமாகப் பின் கால்களை சிறகுடன் தேய்த்துப் பாடுகின்றன. சிறிய ஆப்புப் போன்ற கால்களால் சிறகின் ஓரத்தில் அடிப்பதன் மூலம் ஓசையை எழுப்புகின்றன. அதே போன்ற ஓசையை சீப்பின் பல்லில் ஒரு 'காட்வோட்' மட்டையை உராய்வதால் ஏற்படுத்தலாம். பாச்சைப் பூச்சியும் நீண்ட வெட்டுக்கிளியும் முன் இரண்டு சிறகுகளையும் உராய்வதன் மூலம் பாடுகின்றன. இவ்விதத்தில் கூடிய ஓசை எழுப்புகின்றது.

ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொருவகைப்பாட்டுண்டு. அனுபவசாலிகள் அவற்றைக் கூர்ந்து கேட்பதன் மூலம் என்ன இனம் என்று கூறுவார்கள்.

[illegible] முட்டுப் பூச்சிகள் எறும்புகள் கூட இசை எழுப்புகின்றன. இவற்றில், இறகுகள் கால்கள் உடம்புகள் இடம் பெறுகின்றன. சில இனத்தில் இருபால் பூச்சிகளும் இசை எழுப்புகின்றன. சிக்காடஸ் (Cicadas) தோலை அசைப்பதால் சத்தம் உண்டாக்குகின்றது. முன் வயிற்றில் இருபக்கமும் வளைந்த உருண்டை வடிவமான மேளத்தில் தோல் போன்ற தோலுண்டு. இத்தோலை உள்ளும் வெளியும் இழுத்துத் தள்ளுவதால் சத்தம் உண்டாக்குகின்றது. இந்தத்தோலுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் தசை நாரே இத்தொழிலைச் செய்கின்றது. இது ஒரு பேணி (Tin) மூடியை விரலால் உள்ளும் புறமும் தள்ளும் போது எழும் சத்தம் போன்ற சத்தத்தை ஏற்படுத்துகின்றது. இப்படி ஒரு செக்கனுக்கு 100 தடவை செய்கின்றது. இந்த வகையில் ஒரு சில இனத்தைச் சேர்ந்த பூச்சிகளில் மட்டுமே பெண் பூச்சிகள் பாடுகின்றன. ஆனல் ஆண்களுக்குத்தான் அந்தத் திறமை அதிகமாக உண்டு. இதுவும் தன் இனத்தில் மறு பாற் பூச்சிகளைக் கவருவதற்காகவே பாடுகின்றது.

இதே போன்றுஇன்னும் சில பூச்சிகள் உண்டு. இது உடம்பின் ஒரு பகுதியை ஏதாவது பொருளின் மீது மோதுவதால் சத்தம் எழுப்புகின்றது. இதில் சிறந்தது — நன்றாகத் தெரிந்தது சாக்காவல் வண்டாகும் (Death Watch Beetle) வளர்ந்த பூச்சி தன் எதிரிலே காணும் ஏதாவது மரப்பொருளில்தன் தலையைமோதுகிறது. இதனுல் ஏற்படும் சத்தம் தன் எதிர்பாலைக் கவர்வதாக நினைக்கப்படுகின்றது.

மற்றும் பலவகையான ஈக்களும் காற்றை உள்ளும் வெளியும் இழுத்து விடுவதால் சத்தம் ஏற்படுத்துகின்றது. மிகச் சிறிய தோலுண்டு. அதன் மேல் செல்லும் காற்றுப்பட்டு அசைந்து ஒசையை எழுப்புகின்றது. அந்திப்பூச்சி போன்றவை சாப்பாட்டுவழியாகவே சத்தங்களை எழுப்புகின்றன. இது நாம் சத்தம் எழுப்புவதை ஒத்திருக்கின்றது.

இன்னும் பல பூச்சிகள் பறப்பதால் சத்தங்களை எழுப்புகின்றன. இவை சிறகின் அசைவினுல் ஏற்படுகின்றது. பெண் நுளம்பின் பறக்கும் ஓசையால் ஆண் நுளம்பு கவரப்படுகின்றது.

# கண்ணாடி வீடு

—அரியாலையூர் மோசேஸ்—

சிறுவர் இருவர் ஒருமித்துச்
சிறிய ஆடித் துண்டுகளால்
பெரிதும் முயன்று விடமைத்துப்
பூரித் ததனுள் அமர்ந்தனரே.

சிறுவர் இருந்த வீட்டருகில்
வேறோர் சிறுவன் வரக்கண்டச்
சிறுவர் கேலி செய்தவனைக்
கற்கள் வாரித் தாக்கினரே.

தாங்க முடியாச் சினமடைந்து
தன்னுல் இயன்ற வரையவனும்
ஓங்கிக் கல்லால் தாக்கியதால்
உடைந்தே போயிற் றவ்விடு.

கண்ணடி வீட்டில் வாழ்ந்துகொண்டு
கல்லாற் பிறரைத் தாக்கியதால்
மண்ணாக நேர்ந்த தவ்விடு:
மனமும் உடைந்து நின்றனரே.

மதிப்பு நிறைய உடையவரும்
மதிப்பைப் உயிராய் நினைப்பவரும்
எதிலும் எந்த இடமெனிலும்
எல்லோ ரையும் மதித்தல் கடன்!

பிறரை 'மதிக்கத் தவறிவிடின்
போற்றிக் காக்கும் நம்மதிப்பை
பிறனுல் கற்றோர் சபை நடுவே
இழந்து வருந்த நேர்ந்திடுமே.

கண்ணடி வீட்டில் வாழ்ந்துகொண்டு
கல்லாற் பிறரைத் தாக்குகின்ற
மண்ணில், விவேக மில்லா, இச்
செயலை மறந்தும் செய்யோம்நாம்.

# கண்ணன் கேட்ட கேள்வி

**க**ண்ணனும் அவன் தாயும் ஒரு நாள் மாலை நேரம் காற்று வாங்குவதற்காக கடற்கரைப்பக்கம் போனார்கள். அப்போது அங்கு அவர்கள் கண்ட காட்சி தங்களைப் போல் காற்று வாங்குவதற்காக வந்தவர்களும், அங்கு சிறு பிள்ளைகள் மணலில் ஓடி ஆடி விளையாடுவதையும் கண்டார்கள். சில மணிநேரம் சென்றதும் விட்டிற்கு திரும்பி வரும் வழியில் இரவு நேரமாகிவிட்டது: அப்போது வானத்திலிருக்கும் மின்மினிப் பூச்சிகள் பறந்து திரிந்தது: அதைக் கண்ட கண்ணன் அவன் தாயிடம் இந்தப் பூச்சியின் வாலில் ஒரு வெளிச்சம் ஒன்று விட்டுவிட்டுப் பிரகாசிக்கின்றதே எதற்கு என்று கேட்டான்.

அதற்கு அவன் தாய் கூறியதாவது:- அது ஒரு சிறு பூச்சி அதற்கு உதவி செய்ய எவருமில்லை. அதனுல் தான் அதற்கு கடவுள் அந்த வெளிச்சத்தைக் கொடுத்திருக்கின்றான், அதன் உதவியுடன் சீவிக்க என்று சொல்ல; அப்படியென்றால் மனிதர்களாகிய நமக்கு ஏன் அவ்வெளிச்சத்தை தரவில்லையென்று கேட்டான். அதற்கு அவன் தாய் கூறியதாவது, மனிதர்களாகிய நமக்கு அறிவென்றசத்தியைத் தந்திருக்கின்றான் அதைக் கொண்டு புத்தியாய் நடந்து கொள்ளும் படி என்று அவன் தாய் கூற கண்ணன் தாயின் பேச்சைக் கேட்டுச் சிரித்து சந்தோஷப் பட்டான்.

—சிங்களவாடி மூர்த்தி
மட்டுநகர்,

# தெரிந்து கொள்ளுங்கள்

1. இருதயத்திலிருந்து இரத்தம் உடலிற் பரவுவதைக் கண்டுபிடித்தவர்யார்?
2. எப்பொழுதும் வடக்கே தெரியும் நட்சத்திரமெது?
3. சூரிஜச்சுற்றி வரும் கிரகங்களெவை?
4. மெஸ்மறிசம் என்னும் வித்தை யாராற்கண்டுபிடிக்கப்பட்டது?
5. மனிதனுல் முதல் கண்டுபிடிக்கப்பட்ட உலோகம் யாது?
6. கிரகங்களில் பெரியது எது? சிறியது? எது?
7. மின்மினிப்பூச்சியின் வாலில் வெளிச்சம் தெரிவதேன்?
8. முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் மிருகத்தின் பெயரென்ன? எத்தேசத்தில் உண்டு?
9. தூரதிருட்டிக் கண்ணுடியைக் கண்டுபிருத்தவர்யார்?
10. ஒருகோழி எவ்வளவு காலம் வாழும்?
11. காய்த்தால் அல்லது பூத்தால் பட்டுப்போகும்மரங்களெவை?
12. பூமிக்குச் சமீபத்திலுள்ள கிரகம் யாது?
13. 1910ம் ஆண்டில் தோன்றிய வால் வெள்ளியின் பெயரென்ன?
14. வெண்கலமாளிகை யாராற் கண்டுபிடிக்கப்பட்டது?
15. பூவாதுகாய்க்கும் மரங்களெவை?

## விடைகள்

1. டாக்டர் வில்லியம் ஹார்வி.
2. துருவ நட்சத்திரம்.
3. திங்கள், பூமி, செவ்வாய் புதன், வியாழன், வெள்ளி, சனி,
4. மெசமர் என்னும் ஆஸ்திரிய டாக்டரால்.
5. செம்பு.
6. பெரியது — வியாழன், சிறியது — புதன்.
7. பஸ்பரஸ் என்னும் ஒளி தரும் பொருள் இருப்பதால்.
8. நீர் அகழான் (DUCK MOLE) ஆஸ்திரேலியாவில்.
9. கலிலியோ கலிலி,
10. 12—14 ஆண்டுவரை.
11. வாழை, தாளிப்பனை, மூங்கில், கரும்பு.
12. செவ்வாய்.
13. ஹலிஸ் வால் வெள்ளி
14. துட்டகமுனுவால்.
15. பலா, அத்தி, ஆல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது வெற்றிகரமாக காட்சியளிக்கின்றன!

கெயிட்டி (கொழும்பு) ரொக்சி (வெள்ளவத்தை) தாஜ்மகால் (மாத்தளை) றீகல் (அம்பாறை)
குமரன் (மன்னார்) ஸ்ரீ முருகன் (வவுனியா) இம்பீரியல் (இரத்தினபுரி)

ஆனந்தன் கே. ஆர். விஜயா நாகேஷ் ராஜஸ்ரீ
ஓ. ஏ. கே. தேவர் மனோரமா நடிக்கும்

## தாயின் மேல் ஆணை



செல்லமஹால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை)
வினசர் (யாழ்நகர்) இம்பீரியல் (மட்டுநகர்)
நெல்சன் (திருமலை) றீகல் (கண்டி)
கிங்ஸ் (பதுளை)

எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
நாகேஷ்
நடிக்கும்

## அவன் பித்தனா?

கதை வசனம்: கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ.

---

விரைவில் எதிர்பாருங்கள்! சிலோன் எண்டர்டெயின்மென்ஸ் திரைகளில்

★ சுந்தரராஜன் ★ முத்துராமன் ★ பாரதி நடிக்கும்

தண்டாயுதபாணி பிலிம்ஸ் அளிக்கும் தேவரின்

## தெய்வச் செயல்

கதை தயாரிப்பு டைரக்ஷன் மேற்பார்வை: எம். எம். ஏ. சின்னப்பாதேவர்

---

## 11வது கடைசி வாரம்

முன்பு பார்த்தோர்க்கும் இது வரை பார்க்கத் தவறியவர்களுக்கும் அரிய ஓர் சந்தர்ப்பம்!

சென்ட்ரல் (மருதானை) மற்றும் திரைகளில்

★ ஜெய்சங்கர் ★ கே. ஆர். விஜயா ★ மனோகர் ★ பாலாஜி
விஜயலலிதா ஜோதிலட்சுமி நடித்த

## பட்டணத்தில் பூதம்

(ஈஸ்ட்மன் வர்ணம்)

---

## 24-ம் திகதி ஞாயிறு முதல்



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி)

ஜெய்சங்கர் ஜமுனா நாகேஷ் நடித்த பேபி பத்மினி (இரு வேடங்கள்) ஜி. வரலட்சுமி



ஏ. வி. எம்.

## குழந்தையும் தெய்வமும்

---

மூன்றாவது ஜனத்திரள் மிகுந்த வாரம்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) மற்றும் 4 திரைகளில்
★ ஜெய்சங்கர், ★ விஜயலட்சுமி, நடிக்கும்

## நாம் மூவர்

கடைசிவாரம் கிங்ஸ்லி (கொழும்பு) மற்றும் 3 திரைகளில்
எம். ஜி. ஆர். சரோஜாதேவி நடித்த

## அன்பே வா

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் அச்சகத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1967-ம் வருடம் செப்டம்பர் மாதம் 18-ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org